உ

கடவுள் துணை.

# கதாசிந்தாமணி

என்று வழங்குகின்ற

# மரியாதைராமன் கதை.

இஃது
சென்னைப்புரசை
நாராயணசாமிப்பிள்ளை
அண்டு பிரதர் அவர்களது
நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1916. [அணா-4.

16, சரவணப்பெருமாள்முதலி வீதி,
புரசை, சென்னை.

உ

கடவுள்துணை

கதாசிந்தாமணியென்றுவழங்கும்

# மரியாதைராமன்கதை.

## க-வது, திருடர்கள் நால்வரில் ஒருவன் மற்றவரை மோசஞ்செய்தது.

நான்குபேர்திருடர் ஒருபட்டணத்தில் ஒருகிழவியின்வீட்டி
லிறங்கித் தாங்கள் திருடிப் பொதுவில்வைத்திருந்த உடமைகளை
யும் பணங்களையும் ஒருதவலையிலேபோட்டுமேலேமுத்திரையிட்டு
நாங்கள் நாலுபேரும்வந்து கேழ்க்கும்போது இதைக்கொடு அது
வரைக்கும்பத்திரமாகப் புதைத்துவையென்றுகொடுத்து சிலநாள்
அவள்வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் ஒருநாள் அந்த
நாலுபேரும் எதிர்வீட்டுத்திண்ணையில் பேசிக்கொண்டிருக்கையி
ல் மோர்வாங்குகற்கு அந்தக்கிழவிவீட்டிலேபோய்த்தோண்டி எ
டுத்துக்கொண்டுவாவென்று தங்களுள் ஒருவனை அனுப்பினார்கள்
அவன்போய்த்தோண்டி எடுத்துக்கொண்டு வரச்சொன்னாரென்
றுசொன்னான் அதற்கவள் புதைத்துவைத்திருக்கிற தவலையைத்
தோண்டி எடுத்துவரச் சொன்னதாக நினைத்துக்கொண்டு தெரு
வில்வந்து அவனைத்தோண்டி எடுத்துவரச்சொன்னீராவென்றுகே
ட்க அவர்களாமென்று சொல்லுதலால் உள்ளேபோய்க கட்டப்
பாறையைக்கொடுத்துசுகமாகத்தோண்டி எடுத்துக்கொண்டுபோ
வென்றுசொன்னாள் அவன் அதிகசந்தோஷத்துடனே சீக்கிரத்தி
லேதோண்டித் தவலையையெடுத்துக்கொண்டு புழக்கடைவழியே
ஓட்டம்பிடித்தான் மற்றமூன்றுபேரும் ஒருநாழிகைவரைக்கும்பா
ர்த்து அவனைக் காணாமையாலே உள்ளேபோய் நடந்தமோசத்தை
யறிந்து கிழவியின்மேலே சோழராஜனிடத்திலிருந்த நியாயாதிப
தியிடத்தில பிரியாதுசெய்தார்கள் அவர் கிழவியையழைப்பித்து
விசாரணைசெய்து அவ்வுடமையைக்கிழவிக்குக்கொடுக்கும்படியா
கத் தீர்ப்புசெய்தான் அந்தக்கிழவி நானென்னசெய்வேன் தெய்
வமேயென்று அழுதுக்கொண்டுவருகையில நடுவழியிலேசிறுபிள்
ளைகளுடன் செச்சக்காயாடிக்கொண்டிருந்த மிகுந்தபுத்திசாலி
யானராமன் ஏனபாட்டியழுகிறாயென்றான் அதறகவள் நடந்தச
ங்கதியையெல்லாஞ்சொல்ல அதைக்கேட்டு இந்த அநியாயத்தீ
ர்ப்பை செய்பவன்வாயிலே மண்விழுந்ததும்பாலே இதுகள் குழி
யிலேவிழக்கடவதுயென்று தன்கையிலிருந்த செச்சக்காய்களைவி
ட்டெறிந்தான் அதைக்கேட்டுக்கொண்டிருந்த சிலர்போய் அரச
னுடனேசொல்ல அரசனுமவன் அந்தராமனையழைப்பித்து நியா
யாதிபதிசெய்ததீர்ப்பை அநியாயத்தீர்ப்பென்றுசொன்னாயே நீநி
சயமாகத்தீர்ப்புசெய்யென்றுசொன்னான உடனே அந்தராமன

உடமைக்காரரையும் கிழவியையுமழைப்பித்து விசாரணைசெய்து
உடமைக்காரரைப்பார்த்து உங்கள் வாக்குமூலப்படியே நீங்கள்
மூன்றுபேர்மாத்திரம்கேட்டால் கொடுக்கக்கூடாது நாலுபேரும்
வந்துகேட்டால் அப்போது உங்கள்பொருளைக்கொடுப்பாளென்
று கிழவிபட்சம் தீர்ப்புசெய்தான் பொருள்போனவழியே துக்க
ம்போமென்கிறபடியே கிழவிக்குண்டாகிய துக்கம்போய்விட்டது
அதுகேட்டு இராசாசந்தோஷித்து அவனுக்கு மரியாதைராமனெ
ன்றுபெயரிட்டு நியாயாதிபதியாய் ஏற்படுத்தி சகலவெகுமானமு
ஞ்செய்து தன்னிடத்தில வைத்துக்கொண்டான்

உ-வது, தன் குழந்தையைக் கொன்றுவிட்டு
சக்களத்தியின்மேல் பழிபோட்டது.

தன்குமாரனுக்கு மரியாதைராமனென்கிறபேரும் நியாயாதி
பதி உத்தியோகமுங்கிடைத்த சமாச்சாரத்தை அவன் தகப்பன
கேள்விப்பட்டு அவனிடத்திற்குவந்து ஓகோபிள்ளாய் என்னகா
ரியம்செய்தாய் இப்படிமதிமோசம்பண்ணலாமோ நியாயசூட்சத்
தை அறிகிறது தேவர்களுக்கு எளிதல்லவே சற்றேதப்பினாலதிக
பாவம்விளையுமே இந்தநியாயாதிபதி உத்தியோகத்தை விட்டுவிடு
மென்று மிகவும்விசனமாகச்சொன்னான் மரியாதைராமன் ஓ என்
பிதாவே கோபஞ்செய்யவேண்டாம் கடவுளானவர் எப்படிப்பட்
ட நியாயசூட்சத்தையுங் கண்டுபிடிக்கத்தக்க புத்தியையுங்கொடு
த்து அதிலே எள்ளளவுங் குற்றம்வராமல என்னைக் காப்பாற்று
வார் (தானாகவந்தசீதேவியைக் காலாலுதைத்துத்தள்ளுவதுபோ
லே) உலகத்தையெல்லாம்ஆளும் அரசனாலேகிடைத்த இந்தநியா
யாதிபதிதனத்தை விட்டுவிடச்சொல்லாதிருக்கும்படி உம்மைப்பி
ரார்த்திக்கின்றேனென்றான் இந்தசொற்களைக்கேட்டு மறுத்து ப
தில்சொல்வதற்கு இடமில்லை உன்னிஷ்டப்படியே செய்யென்று
சொல்லிவிட்டுப்போய் பின்பு இனி அவருடனே சாவகாசம் செ
ய்வேனேயானால் எவனுக்குவருகிற குற்றத்திற்கும் வழிக்கும் ஆ
ளாகவேண்டியாகையால் தேசாந்திரம்போகிறதே உத்தமமென்று
நினைத்துக்கொண்டு தன்மகனுடனே சொல்லாமல பிரயாணஞ்செ
ய்துக்கொண்டுபோகிறபோது அன்றிராத்திரியில் ஓரூரில் ஓர்வீட்
டிலேயிறங்கினான் அன்றைக்கு அந்தவீட்டுக்காரனவெளியேபோ
யிருந்தான் அவன் மனைவிமார்களிரண்டுபேர்மாத்திரமிருந்தார்கள்
மூத்தவள் நித்திரைபோய்விட்டாள் தலைக்கடைதிண்ணையில் படு
த்திருந்த மரியாதைராமனுடைய தகப்பன் தன் பிள்ளைக்கு சம்ப
வித்ததைக்குறித்து தூக்கம பிடியாமல் கண்ணையிடுக்கொண்டி
ருந்தான் ஆனால நடுராத்திரியிலே அவனும் தன் சக்களத்தியும்
தூங்கிவிட்டார்களென்று இளையவள் இதுவேநல்ல தருணமென்
று தன் சோரநாயகனை உள்ளேயழைத்துக்கொண்டுபோய் சந்தோ
ஷத்துடனே இருக்கிறசமயத்தில் அதற்குவிரோதமாகத் தன்குழ
ந்தை விழித்துக்கொண்டு வீரிட்டு அழத்தொடங்கியதைக்கண்டு

கழுத்தைப்பிடித்துக் கொன்றுவிட்டாள் பிறகு அதை மூத்தவள்
பக்கத்திலேகிடத்திவிட்டு தன்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்
டு விடியற்காலத்திலே கள்ளப்புருஷனையனுப்பிவிட்டு ஊரெல்லா
ம் அறியும்படியாகத் தன்பிள்ளையைச் சக்களத்திப்பொறாமையி
னாலே கொன்றாளென்று பழிபோட்டுக்கூவியழுதுக்கொண்டு மரி
யாதைராமனிடத்திலே பிரியாதுசெய்யப்போனாள் இவைகளையெ
ல்லாம் தப்பாமற் பார்த்துக்கொண்டிருந்த மரியாதைராமனுடை
ய தகப்பன் தனக்குள்ளே ஆச்சரியப்பட்டு கல்லது இந்த வழக்
கைக்குறித்து என்மகன் சரியாகதீர்ப்புப் பண்ணுவானேயானால்
மற்றவழக்குகளிலும் பிசகமாட்டான் நம்புவேனென்று மாறுவே
ஷங்கொண்டு நியாயஸ்தலத்திற்குச்சமீபத்திலேவந்திருந்தான் மரி
யாதைராமன் அந்த விபசாரிசெய்த பிரியாதைக்கேட்டுச் சேவக
ரைவிட்டு மூத்தவளையழைப்பித்து நீயேன் இப்படிப்பட்ட சிசுஹ
த்திசெய்தாயென்றுகேட்டான் இறையவனே நாசத்திற்கு ஆளா
கத்தக்க இந்த மகா பாதகத்தை கடவுளறியயான் செய்ததில்லை
யென்றாள் அந்தசொல்லைக்கேட்டமாத்திரத்தில் இளையவள் ஓ நி
யாயாதிபதியே இவள்மிகவும் மோசக்காரி கொலைசெய்தாளென்
பதில் நீர் எவ்வளவுஞ் சந்தேகப்படாதேயுமென்றாள் இவ்விருவர்
சொல்லையுங்கேட்டு சந்தேகப்பட்டு இதற்கு சாட்சியுண்டோவெ
ன்றுகேட்டான் அதற்கிளையவள் என்கண்களேயல்லாமல் வேறே
சாட்சியில்லையென்றாள் நியாயாதிபதி தெய்வத்தை தியானித்துக்
கொண்டு உண்மையை வெளிப்படுத்தத்தக்க ஒரு யோசனை தன
க்குள்செய்து அவ்விரண்டு பெண்களைப்பார்த்து உங்களுக்கு வே
றேசாட்சியில்லாமையால் புடவையை அவிழ்த்து வைததுவிட்டு
நிருவாணமாக இந்த சபையை மூன்றுதரஞ் சுற்றிவந்து கடவுளு
க்கு பொதுவாக சத்தியஞ் செய்யுங்களென்றான் இந்தசொல்லைக்
கேட்டமாத்திரத்திலே சிறியவ னப்படியேசெய்ய எத்தனித்தாள்
பெரியவளோ வென்றால் என்னுயிர்போனாலும் போகட்டும் இப்ப
டிப்பட்டகாரியத்திற்கு உடன்படமாட்டேனென்று தனக்குள் நி
ச்சயித்துக்கொண்டு ஓநியாயாதிபதியே அக்குழந்தையைக் கொ
ன்றவள நானேஎன்னை அதற்குத்தகுதியான தண்டனைசெய்யலா
ம் இப்படிப்பட்ட மானபங்கஞ் செய்யாதேயென்றாள் நியாயாதி
பதி இவ்விருவர்சங்கதியையுங்கண்டு இளையவள் முழுமோசக்கா
ரியென்றறிந்து சிலஅடிகள் அவளையடிப்பித்து அவள்வாயைகொ
ண்டே நிஜத்தைவெளிப்படுத்தி அவளைத்தூக்கிற்போட உத்தரவு
கொடுத்தான் இளையவளுக்கு தானொன்று நினைக்கத் தெய்வமொ
ன்றுநினைக்கும என்கிறபழமொழிப்படியேநேரிட்டது இவைகளை
யெல்லாம் பார்ததுக்கொண்டிருந்த மரியாதைராமனுடைய தகப்
பன் அளவற்றசந்தோஷத்தையடைந்துபுத்திரனிடததிற்குப்போ
ய் மரியாதைராமனென்கிறபெயரும் இந்ததொழிலும் உனக்கே
தகும் இப்படிப்பட்ட புத்தியுக்திகளை உனக்குகொடுத்த கடவுளு

க்கு நான்வந்தனம் செய்கிறேன் நீர் தீர்க்காயுசுள்ளவனாகச் சுகத்
தோடு வாழ்கவென்றாசீர்வாதஞ்செய்து தன் வீட்டுக்குப்போய்ச்
சேர்ந்தான்.

௫-வது, பஞ்சுவர்த்தகர்க்கு ஒருபூனையால் வழக்குநேரிட்டது.

நான்குபேர் பங்காகப் பஞ்சுவர்த்தகம்பண்ணினார்கள் பஞ்சு
மூட்டைகளை எலிகள்கடித்திருக்கும் பொருட்டு அவர்கள் ஒருபூ
னையைவளர்த்தார்கள் வளர்க்கும்போ ததனுடைய நால்கால்களை
யும் ஆளுக்கு ஒவ்வொருகாலாகப் பங்கு வைத்துக்கொண்டு அவ
னவன தன்பங்காகியகாலுக்குத் தண்டைகொலுசு முதலானதுக
ளால் அலங்கரித்துச்சிறப்பாக வைத்திருந்தார்கள் அப்படியிருக்
கையில் அந்தப்பூனைக்கு ஒருகாலிலேகாயம்பட்டது அந்தக்காலு
க்குச் சுதந்தரக்காரன் எண்ணெச்சீலைசுற்றிவைத்தான் அது அடுப்
பண்டையிலே போனபோது அடுப்புத்தீயினாற்பற்றிக்கொண்டது
அதனுட னந்தப்பூனையானது பஞ்சுமூட்டைகளின்மேல் விழுந்து
ஓடிப்போகையில் அம்மூட்டைகள் பற்றிக்கொண்டு வெந்துபோ
ய்விட்டதுக ளதுகண்டு எண்ணெச்சீலைகட்டின கூட்டாளிகையில்
மற்றமூன்றுபேரும் தங்கட்குவந்தநஷ்டம் வாங்கிதரும்படியாக ம
ரியாதைராமனிடத்தில் பிரியாதுகொடுத்தார்க ளந்த நியாயாதிப
தி பிரதிவாதியையழைப்பித்து விசாரணைசெய்து அவன்மகனறிந்
தந்தவாதிகளைப்பார்த்து பிரதிவாதிபூனைக்கு எண்ணெயைச் சுற்
றிவைத்த கால்காயமுள்ளதா யிருக்கிறபடியால் நடக்கிறதற்குத
வாதே காயமில்லாத உங்கள் மூன்றுபேர்களுடைய கால்களினால்
நடந்தது ஆகையாலிப்படிப்பட்டசேதம்வந்தது ஆகையால்நீங்கள்
மூன்றுபேருமபிரதிவாதியினுடைய நஷ்டத்தைக்கொடுக்கவேண்
டுமென்று தீர்ப்புசெய்தான் வாதிகள் மூனறுபேரும் யானைத்தலை
மேலே தானேமண்ணைப் போட்டுக்கொள்வதுபோலத்தங்கட்குத்
தாங்களே முன்வந்ததோடு பின்னும நஷ்டம் தேடிக்கொண்டார்
கள் திக்கற்றவனுக்கு தெய்வமேதுணையென்றபழமொழிப்படியே
அதிகவிசனம்அடைந்த பிரதிவாதி தெய்வசகாயத்தினாலே தன்ப
க்ஷம் தீர்ப்பானதுகண்டு அதிகசந்தோஷத்தையடைந்தான்

௬-வது, ஒருவர் தன்னிடத்தில்வைத்த முத்துக்களில்லையென்றது

ஒருவன் விலையுயர்ந்த இரண்டுமுத்துக்களைசம்பாதித்து தன்
னிடத்தில் விசுவாசமுள்ளவனைப்போலிருந்த மற்றொருவன்கையி
ல்கொடுத்து இதுகளை நான வருமளவும காப்பாற்றிவையென்று
சொல்லிவிட்டு சிலகாலம் தேசசஞ்சாரம்செய்து திரும்பிவந்து அ
வனையந்த முத்துகளைக் கொடுமென்றுகேட்டதற்கு அவன நான
உன்கையில வாஙகினதேயில்லையென்று சாதித்தான் பின்பு கொ
டுத்தவன் மரியாதைராமனிடத்திற்குப்போய் பிரியாதுபண்ணினா
னப்போது மரியாதைராமனவனையழைப்பித்து அவன் வாய்விஷ
யங்களைக்கேட்டு மோசத்தை முகக்குறிப்பினாலறிந்துகொண்டு தீ
ர்ப்புக்கொடுக்காம லவர்களைப் போகச்சொல்லி சிலநாள்பொறுத்

து வாதியைக்கொண்டு அந்தமுத்துகளின் மாதிரியைத் தெரிந்து
கொண்டு பிரதிவாதிகையிலே அந்த மாதிரியாக-௯௮முத்துகளை
ஒருணந்தசரட்டிலே கோர்த்துக்கொடுத்து இச்சரம்நூறுமுத்து
களுள்ளது சரடு நைந்திருக்கிறபடியால் வேறொருசரட்டில் கோர்
த்துக்கொண்டுவா நீயோக்கியனாய் காணப்படுகிறபடியினாலேஉன்
னைநம்பிக்கொடுக்கிறேனென்று சொல்லிக்கொடுத்தனுப்பினானந்
தமோசக்காரன் அதுகளை தன்வீட்டிற்குகொண்டுபோய் கோர்த்
து எண்ணிப்பார்த்து இரண்டுமுத்துகள் குறையக்கண்டு அவ்விர
ண்டையும் தான்யோக்கடித்ததாக நினைத்து திகிலடைந்து தான்
அபகரித்துவைத்திருந்த இரண்டுமுத்துகளையுங்கூடச் சேர்த்துக்
கோர்த்துக்கொண்டுபோய் கொடுத்து ஜனப்பன்வீட்டுகோழி தா
னே விலங்கிட்டுக்கொண்டதுபோலத் தன்திருட்டைத்தானேவெ
ளிப்படுத்தினான் அப்போநியாயாதிபதிஅவன்திருட்டையறிந்துஇ
ரண்டுமுத்துகளையும் உடமைக்காரனுக்கு சேர்த்துவிட்டுஅவனுக்
கேற்றதண்டனையும் செய்தான்.

## ௫-வது, ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலிதின்றதென்றது.

ஒருவன் பத்துபாரம்இரும்புவாங்கி ஒருவனிடத்தில்வைத்து
மற்றொருதேசத்திற்குப்போய்ச் சிலவருடங்களகழிந்தபின்புவந்த
வனை இரும்பைக்கொடுமென்றுகேட்டான் அவன்உன்னிரும்பை
எலிதின்றுவிட்டதென்றுசொன்னான் அந்தசொல்லைக்கேட்டு இரு
ம்புக்காரன் மரியாதைராமனிடத்தில்போய் பிரியாதுசெய்தான்ம
ரியாதைராமன் பிரியாது செய்தவனுக்கு ஒருஉபாயங் கற்பித்தா
னந்தஉபாயத்தின்படியே வாதியனை மோசஞ்செய்தவனுடனே ப
கையாளிகுடியை உறவாடிகெடுக்கவேண்டுமென்று நினைத்து அதி
கமோசக்காரன் மகனையழைத்துக்கொண்டுபோய் தன்வீட்டில்ஒ
ரறைக்குள் ஒளித்துவைத்து மறுநாள் மோசக்காரன் என்பிள்ளை
எங்கேயென்றுகேட்டதற் கந்தப் பையனை பருந்தெடுத்துக் கொ
ண்டுபோய்விட்டதென்றா னதுகேட்டவுடனே பிள்ளைக்காரன்மரி
யாதைராமனிடத்திற்குப்போய் இன்னான் என்பிள்ளையைத் தன்
வீட்டுப்பிரயோசனத்தில் சாப்பாட்டுக் கழைத்துக்கொண்டுபோ
ய்திரும்பிஅனுப்பாமல் ஒளித்துவைத்திருக்கிறான அனுப்புமென்
றுகேட்டால் பருந்தெடுத்துக் கொண்டுபோச்சுதென்று சொல்கி
றான் நியாயாதிபதி பிள்ளைமோசம்செய்தவனை யழைத்து பிள்ளை
யைப் பருந்தெடுத்துக் கொண்டுபோகுமாவென்று கேட்டானத
ற்கவன் இவனிடத்தில் நான்வைத்திருந்த பத்துபாரம் இரும்பை
எலிதின்னுமாவென்றான் மரியாதைராமன் இவ்விருவரையும் பார்
த்து நீங்கள்ஒருவரைஒருவர் முழுப்பூசினிக்காயைச் சோற்றிலம
றைக்கிறதுபோல் மோசம்செய்கிறது நியாயத்துக்கு விரோதமெ
ன்றுகண்டித்துப் பிள்ளைக்காரன் இரும்பைக் கொடுக்கும்படியாக
வும் இரும்புக்காரன்பிள்ளையைக்கொடுக்கும்படிதீர்ப்புசெய்தான்.

### ௬-வது, ஒருத்தி கடன்வாங்கினநெய்யை வாங்கவில்லையென்றது.

ஓரிடைச்சி இரண்டுபசுவுவைத்துக்கொண்டிருந்தாள் அவளு
க்கெதிர்வீட்டுக்காரியாகிய மற்றொருஇடைச்சி இருபதுபசுவைத்
துக்கொண்டிருந்தா ளிரண்டுபசுக்காரிகையில் ஒருவீசைநெய் க
டனாகவாங்கிக்கொண்டாள் கொடுத்தவள் கெடுவிடபோய் அதை
க்கேட்டதற்கு வாங்கினவள்நான்உன்கையில் வாங்கின தில்லையெ
ன்றுசாதித்தாள் கொடுத்தவள் மரியாதைராமனிடத்திற்குப்போ
ய் பிரியாதுபண்ணிக்கொண்டாள் அவன் பிரதிவாதியை யழைப்
பித்து விசாரணைபண்ணும்போது எனக்கு இருபதுபசுக்களிருக்கி
றதுகள் என்வாதிக்கு இரண்டு பசுக்களிருக்கிறது எனனிடத்தில்
அதிகபசுக்களிருக்கிறதுகளென்று பொறாமையினாலே பழிபோடு
கிறாளென்றுசொன்னான் நியாயாதிபதிக்குச் சந்தேகம்பிறந்துமறு
நாள்வரச்சொல்லி அவர்களையனுப்பிவிட்டு அவர்கள் வருகிறதற்
குமுன்னே நியாயஸ்தலத்திற்குச் சமீபத்தில் சேறாக்கிவைத்தான்
மறுநாள் அவ்விருவரும் அந்தவழியாய் நடந்துவந்தார்கள் சமீப
த்தில்வந்தவுடனே அளவுசரியாகயிருக்கிற இரண்டு சொம்புகளி
ல்நிறைய நீர்கொண்டுவரச்சொல்லிப் பேருக்கு ஒவ்வொருசொம்
புநீர்கொடுக்கச்சொன்னான் இரண்டுபசுக்காரி யந்தநீரில் பாதியி
னால் கால்களைச் செவ்வையாகக் கழுவிக்கொண்டு பாதி மீதியாக
வைத்தாள் இருபதுபசுக்காரி ஒருசொம்புநீர்வார்த்துக்கழுவியும்
பாதிசேறுகூடபோகவில்லை அதைமரியாதைராமன் பார்த்துக்கட
ன்வாங்கினவளை அழைத்து நீஇருபதுபசு வைத்துக்கொண்டிருந்
தாலும் குடித்தனத்திறமை யில்லாதவளென்றறிந்தேனது எப்ப
டியென்றால் ஒருசொம்புநீர்முழுதும்விட்டுக்கழுவியும் பாதிசேறா
யினும் உன்காலிலே போகவில்லை அவளோவென்றால அரைசொ
ம்நீராலே தன்காலில் எவ்வளவுஞ்சேறிலலாமல் கழுவினதால்குடி
த்தனத் திறமையுடையவளாயிருக்கிறாள் ஆகையால நீ அவளிட
த்தில் நெய் வாங்கினதற்குச் சந்தேகமில்லையென்று மோசத்தை
வெளிப்படுத்தி வாதிபக்ஷம தீர்ப்புசெய்தான் பள்ள முள்ளவிடத்
தில் தண்ணீர்நிற்குமென்ற பழமொழிப்படியே மோசம் செய்தவ
ளிடத்தில தண்டனைசம்பவித்தது

### ௭-வது, உனக்கிஷ்டமானதைக் கொடுவென்றது.

ஒருவன் தன்மரணகாலத்தில் தனனிடத்திலிருந்தபதினாயிர
ம்வராகனில் உனக்கிஷ்டமானதைக் கொடுவென்றுசொனனான்பி
ன்புசாவகாரி அதுகளைத்தன்வீட்டில் கொணடுபோய்வைத்திருந்
தான் பிள்ளைபெரியவனானபின் சாவகாரியிடத்திற்போய் பொரு
ளைக்கேட்க உன்தகப்பன் எனக்கிஷ்டமானபொருளைக்கொடுவெ
ன்றது இந்ததொகைதானென்று ஆயிரம்வராகனைகொடுக்கப்போ
னானந்தப்பிள்ளை எனக்குவேணடாமென்று விசனத்தை யடைந்
து மரியாதைராமனிடத்திலபோய் பிரியாது பணணினான் மரியா
தைராமன் சாவகாரியை யழைப்பித்து விசாரித்து அவன் வாய்ச்

சொல்லைக்கொண்டே உனக்கிஷ்டமானது ஒன்பதினாயிரம் வராகனிந்தப்பிள்ளைக்குக்கொடுக்கநினைத்த உனக்கிஷ்டமான ஆயிரம்வராகன் நீயெடுத்துக் கொள்ளென்று தீர்ப்புபண்ணினான் ஊராருடைமைக்குப்பேயாயபறந்தால் வருமோவென்கிற பழமொழிப்படியே சாவகாரியினுடைய அதிகஆசை பயன்படாமற்போயிற்று.

௮-வது வழியில்வித்வான் திரவியத்தைப் பிடுங்கிக்கொண்டது.

ஒருவித்வான் தேசாந்திரம்போய்க் கொஞ்சந்திரவியஞ்சம்பாதித்துக்கொண்டு ஊரினருகேதனிமையாகவருகையில் ஒருவன்வந்து அவனமூட்டையைப்பிடுங்கிக்கொண்டு தன்வீட்டிற்குப் போய்விட்டான் வித்வான்மரியாதைராமனிடத்திற்குப்போய்பிரியாதுசெய்தான் மரியாதைராமன் அந்தத்திருடனையழைத்துக்கேட்க திருடன் நானென்றுமறியேனென்ன பொய்சத்தியஞ்செய்தான் அதைக்கேட்ட நியாயாதிபதி திருடனைவீட்டிற்குப்போகஉத்திரவுகொடுத்துவிட்டு அவனுக்குத்தெரியாமல் அவன்பின்னே இரண்டுபேர் வேவுகாரரை அனுப்பினான் திருடன் தன்வீட்டிற்குள்ளேபோனவுடனே அவன்மனைவி நீபோனகாரியமெப்படிமுடிந்ததென்றுகேட்க அதற்கவன் நானென்றுமறியேனென்று ஏமாற்றிவிட்டேனென்று சொன்னசொல்லை அவ்வேவுகாரர் ஒளிந்திருந்து கேட்டுப்போய் நியாயாதிபதியுடன்சொன்னார்கள் நியாயாதிபதி திருடனைப்பிடித்துக்கொண்டுவரச்சொல்லி அடிமேலடியடித்தால் அம்மியும் நகருமென்கிறபடியே அடிப்பித்து நகையைவிசாரித்து அவன்வாயைக்கொண்டே நிச்சயத்தைவெளிப்படுத்தி அவன்கைப்பற்றிய திரவியத்தை வித்வானுக்கு வாங்கிக்கொடுத்து திருடனுக்குசாஸ்திரப்படி தண்டனையுஞ்செய்தான்.

௯-வது தான்வாங்கினகெம்புக்கல்லை அறியேனென்றது.

ஒருவன் ஒருவர்த்தகனிடத்தில் விலையுயர்ந்த ஒருகெம்புக்கல்லைக்கொடுத்து இதைவைத்துவையும் நான்யாத்திரைபோய்வந்துவாங்கிக்கொள்ளுகிறேனென்று சொல்லிப்போய் நாலுவருஷங்கழிந்தபின்புவந்து கெம்புக்கல்லைக்கேட்டான் என்னிடத்திலில்லை அதை முன்னேயே நீவாங்கிக்கொண்டுபோய்விட்டாயென்றுசாதித்து அப்போது தன்வீட்டிலே சோறெடுக்கவந்தவண்ணான் அம்பட்டன்குயவன் மூன்றுபேரையும் பொய்சாக்ஷிசொல்ல ஏற்படுத்தினான் கெம்புக்கல்காரன் அதையறிந்துமரியாதைராமனிடத்திலேபோய் தன்கெம்புக்கல்லைஅபகரித்ததையும்பொய்சாட்சிகளைஏற்படுத்தினதையுஞ் சொல்லிக்கொண்டான் மரியாதைராமன் அந்தமர்மந்தெரிந்துக்கொண்டு வர்த்தகனையும் அவன்சாக்ஷிகளையும்அழைப்பித்து விசாரணைசெய்து அதன்பின்பு வாதி பிரதி சாக்ஷிக்காரரென்றுமூன்றுதிரத்தாராகியஐந்துபேரையும்ஒருவரோடொருவர் பேசாமலிருக்கும்படிக்குத் தனியே சேவகர் கைவசப்படுத்திக் காவலிலேவைத்துக் களிமண்ணாலே அந்த கெம்புக்கல்லைப்போல உருவஞ்செய்துகொண்டு வரும்படியாக உத்திரவுகொடு

த்தான் வாதி அந்தக்கெம்புக்கல்லுக்குத்தகுந்த அளவாகச்செய்துக்கொண்டுவந்தார் கெம்புக்கல்லினுடையவுருவேஎன்றும் பார்த்திராத கடசிக்காரர்மூன்றுபேருக்குள்ளேவண்ணான்தோய்க்கிற கல்லைப்போலும் அம்பட்டன்தீட்டுகிறகல்லைப்போலுமகுயவன் பானைசெய்யும் சக்கரத்தைப்போலும் வேறுவேறுவிதமாகச் செய்துக்கொண்டுவந்தார்கள் அந்தவித்யாசத்தினாலே நியாயாதிபதிக்கு உண்மைதெரிந்து உடைமைக்காரனுக்குக் கெம்புக்கல்லும் மற்றவர்களுக்குத் தகுதியான தண்டனையுஞ்செய்தான் எட்டியுடன்சேர்ந்த இலவுந்தீப்பட்டது என்றபடியேமோசஞ்செய்தபிரதிவாதியுடன்சேர்ந்த சாட்சிக்காரரும் அவனுக்குவந்ததுன்பத்தை தாமும் அனுபவித்தார்கள்.

௰-வது அயலான்பெண்சாதியை தன்பெண்சாதியென்றது.

ஒருவன் தன்பெண்சாதியை அழைத்துக்கொண்டு ஊர்பயணம்போகையில் வழியிலிருக்கிற ஆற்றிலேபுருஷன்முன்னும் பெண்சாதிபின்னுமாகப் போகிறபோது மற்றொருவன் இவர்கள்பின்னாலே இறங்கிவந்தான் இவன்வருவதை அவர்கள் பாராமல்போகிறபோது ஆழமாகவிருக்கிறவிடத்தில் அந்தஸ்திரீயானவள் புடவையை நனையாமல்தூக்கிக்கொண்டுபோகையில் பின்னேவருகிறவன் அவளாடிதுடையிலிருக்கிற மச்சத்தை அடையாளமாகப்பார்த்துக்கொண்டு கரையேறினவுடனே அந்தஸ்திரீயை தன்பெண்சாதியென்று சொல்லி அவள்புருஷன் அழைத்துக்கொண்டுபோகவிடாமல் தடுத்தான் அவ்விருவரும் வழக்காடிக்கொண்டு நியாயாதிபதியான மரியாதைராமனிடம் போனார்கள் அவள்புருஷன் என்பெண்சாதியைத் தன்பெண்சாதியென்றிவன் சொல்லுகிறானென்று பிரியாதுசெய்தான் நியாயாதிபதி அந்தஅன்னியனைக்கேட்கும்போது அவனைத்தனபெண்சாதியென்று சாதித்தான்நியாயாதிபதி உங்களில் யாருக்காவது சாக்ஷியுண்டோவென்று கேட்டானந்தபுருஷாள் நாங்கள் நெடுந்தூரத்திலிருந்து வருகிறபடியால் எங்களுக்குச் சாக்ஷியில்லையென்றான் பழிபாவத்திற்கஞ்சாததுஷ்டனானவன எனக்கு சமீபத்தில்சாக்ஷியில்லை ஆனாலிவளை என்பெண்சாதியென்று ருசுகொடுக்க ஒருதிஷ்டாந்தஞ்சொல்கிறேன் அதென்னவெனில் நானனுபோகசாலியாகையால் இவளிடத்துடையிலே ஒருமச்சமுண்டு ஸ்திரீகளைவிட்டுச் சோதித் தறியலாமென்றான் இப்படிசோதித்தறிந்தபின்பு அந்தஸ்திரீயைப் பெண்காவலிலும் மற்றிரண்டுபேர்களையும் புருஷாள்காவலிலும்வைத்து மறுநாளுதயத்திலே அவ்விருவரையும் ஓரிடத்திற்கழைத்து அவ்விருவர்க்குள்ளே ஒருஸ்திரீயின் கற்பழித்தமகாபாதகனினாளென்று உனக்குமுன்னேயறிவித்தேனல்லவா இன்னுமவன்நிச்சயத்தை சொல்லாமையால் அவனையிப்போதே வெட்டிப்போடென்றுஉத்திரவுகொடுத்தான் அவன்கத்தியையுருவிக்கொண்டுபோகையில் மோசக்காரன்பயந்து உண்மையைச்சொல்கிறேனென்னை வெட்ட

வேண்டாமென்று ஆற்றிலேதான்கண்ட மச்சத்தைக்கொண்டு வியாச்சியந்தொடங்கின உண்மையைச் சொல்லிவிட்டான் நியாயாதிபதி துஷ்டனுக்குத்தகுந்த சிட்சைசெய்வித்து அந்த ஸ்திரீயை சொந்தபுருஷனிடம் ஒப்பித்தான் அடாதகாரியஞ்செய்தால்படாதபாடு படவேணுமென்கிற பழமொழியை அந்த துஷ்டனப்போது பொய்யென்றறிந்திருந்தான்.

௰௧-வது யானைக்கும் பானைக்குஞ்சரியென்றது.

ஒரு துலுக்கனிடத்திலே ஒருவேளாளன் தன்பிள்ளைகலியாணத்திலே ஊர்கோலங்காட்டயானை யிரவலாக வாங்கிக்கொண்டு வந்தான் அந்தயானை ஊர்கோலத்துக்குவந்துகொண்டிருக்கும்போது அகஸ்மீகமாகச் செத்துப்போயிற்று அவ்வேளாளன் உடனே துலுக்கனிடத்திற்குப்போய் தெய்வீகமாகவுன் னுடையயானைசெத்துப்போனதற்கு விலையானாலும்பதிலாக யானையானாலும் உனக்குகொடுக்கிறேனென்றான் அதற்குதுலுக்கன் நீசொன்ன ரண்டுக்கும் நான்சம்மதிக்கிறதில்லை என்யானையே எனக்குவேணுமென்று சொல்லி பின்புமரியாதைராமனிடத்தில் பிரியாதுசெய்தான் மரியாதைராமன் பிரதிவாதியையழைத்துக்கேட்கும்போது அவன்நடந்தஉண்மையைச்சொன்னான் மரியாதைராமன் துலுக்கனைப்பார்த்து தெய்வீகமாகநேரிட்டபடியால் பதிலாகயானைகளிலுபவாங்கிக்கொள் அல்லது விலையாவதுவாங்கிக்கொள்ளென்று பலவிதத்திலுஞ் சமாதானஞ்சொன்னதுக்கு அந்தமூரட்டுதுலுக்கன் இரண்டுக்கும் சம்மதிக்கேன் அந்தயானையேஎனக்குவேண்டும் வேறொன்றும் வாங்கேனென கடவுள்பேரில் ஆணையிட அதைக் கேட்டு வேளாளன் கலங்கினான் பின்பு மரியாதைராமன் ஆலோசித்துநீங்கள் நாளையதினம் வாருங்களென்றனுப்பிவிட்டு இரகசியமாகவேளாளனையழைப்பித்து நாளையதினம்வரவேண்டாம் உன்வீட்டு நடையிலே கதவுவோரமாக பழம்பானைகளை அடுக்கிவைத்துக்கொண்டிரு அந்தத்துலுக்கன்வந்தவுடன் உன்னெதிரிவாரில்லையாகையால் நீபோயழைத்துவாருமென்று அனுப்பிவைக்கிறேன் அவசரமாகவந்து கதவைத் திறப்பான் அப்போது பானைகளெல்லாம் நெரிந்துபோகும் பின்புஎங்கள்பெரியோர்கள்நாள்முதற்கொண்டு ஆண்டுவந்தபானைகளை உடைத்துப்போட்டானென்றழுது அயல் வீட்டாருடன் கூச்சலிட்டு சொல்லிக்கொள் அதற்காக அவனென்ன சமாதானஞ்சொன்னாலும் என்பானையே எனக்குவேணுமென்று நீவந்துபிரியாது செய்துக்கொள்ளென்று சொல்லி யனுப்பிவிட்டான் மறுநாளப்படியே நடந்தபின்பு வேளாளன்வந்துவெகுகாலமாக ஆண்டுவந்தபானைகளை உடைத்துப்போட்டான் என்பானைகளே எனக்குவேண்டுமென்றான் மரியாதைராமன் அந்ததுலுக்கனைப்பார்த்து என்னசொல்கிறாயென்றான் அதற்குதுலுக்கனயானைக்கும்பானைக்கும் சரியாகப்போச்சுதென்றான் கனமூடன்கைப்பொருளழிப்பானென்கிறதை துலுக்கனிடத்திலே காட்டினான்.

௰உ-வது சீட்டைக்கிழித்துவாங்கின கடனையில்லையென்றது.

ஒருகுடியானவன் ஒருசெட்டியினிடத்தில் சீட்டெழுதிகொடுத்து நூறுவிராகன் கடன்வாங்கியிருந்தான் சிலநாட்போனபிறகுசெட்டிகடனைக்கேட்டான் குடியானவன்நாளையுதயத்திற்கு ஊருக்குப்புறங்கொல்லைமேட்டிலிருப்பேன் அவ்விடத்தில் சீட்டைக்கொண்டுவந்தால் முதலும் வட்டியுங்கொடுத்துவிடுகிறேனென்று சொன்னான் அந்தப்படியே சீட்டைக்கொண்டுபோனான் அதைவாங்கிப்பார்க்கிறதுபோலக் கிழித்துபக்கத்திலே மூட்டம்போட்டிருக்கிறநெருப்பிலேபோட்டு உனக்குகொடுக்கவேண்டியதில்லையென்றுபோகச்சொன்னான் செட்டி துன்பத்துடன் மரியாதைராமனிடம சொல்லிக்கொண்டான் அவன்குடியானவனையழைத்து என்சீட்டைக்கிழித்துப்போட்டாயென்றுகேட்டான் அதற்கவன் நானிவனிடத்தில் கடன்வாங்கினதுமில்லைசீட்டைக்கிழித்ததுமில்லையென்று சொன்னான் செட்டியை தனியே யழைத்துச் சீட்டெவ்வளவுநீளமென்று நியாயாதிபதிகேட்டான் ஜாண்நீளமென்று சொன்னான் உன்னைகேட்குப்போது முழநீளஞ்சொல்லென்று சொல்லிவைத்து நியாயஸ்தலத்திலழைப்பித்துச் செட்டியைப்பார்த்து நீ பொய்சொல்லாதே அந்தசீட்டு எவ்வளவுநீளமென்றுகேட்டான் ஐயா நான்மெய்சொல்லுகிறேன் அதுமுழநீளச்சீட்டு அதையுங்கிழித்துப்போட்டு பணமும் வாங்கினதில்லையென்று பொய் சொல்கிறானென்றான் குடியானவனுக்குக் கோபம்பிறந்து அவசரத்திலேதான் ஜாண்சீட்டை முழச்சீட்டென்று பொய்சொல்கிறானே மற்றயிடத்திலே எத்தனை பொய்சொல்லமாட்டானென்றானதைக்கேட்டு நியாயாதிபதி அவரிடத்திலே சீட்டெழுதிக்கொடுத்துகடன்வாங்காதிருந்தாயாகில் ஜாண்சீட்டென்றெப்படியறிந்தாயென்று சொல்லி பொய்சொன்னதற்காக அவனை தண்டித்து செட்டிக்குவட்டியும் முதலும்கொடுத்துவிடும்படி சொன்னான் ஆத்திரகாரனுக்கு புத்திமட்டென்பதற்குகுடியானவன் திருஷ்டாந்தமானான்.

௰௩-வது எலுமிச்சங்காயளவு சாதம்போடச்சொன்னது.

ஒருவன் வழிப்பயணம்போகும்போது ஒரு சத்திரத்திலிருக்கும் பிராமணத்திகையில் நாலுபணங்கொடுத்து எனக்குபசியாயிருக்கிறது எலுமிச்சங்காயத்தனை சாதம் சீக்கிரம்போடென்றான். அந்தப்படியே அவள் எலுமிச்சங்காயத்தனைசாதம இலையிலவைத்தாள் அந்தமனிதனவளைநோக்கி நாலுபணங்கொடுத்துபசாரவார்த்தையாக எலுமிச்சங்காயத்தனைசாதம்போடென்றேன் அதற்கு இப்படிசெய்தாய் இதுவயிற்றிற்குபோதுமாவென்றான் அதற்கவள் எலுமிச்சங்காயத்தனைசாதந்தானேகேட்டாய் ஆகையால் அதற்குமேல் அதிகமாய்ப்போடேனென்றாள் பின்புஅவன்மரியாதைராமனிடத்திற்போய் சங்கதிகளை சொல்லி என்பணத்தைவாங்கிக்கொடுக்கவேணுமென்று பிரியாதுசெய்தான் நியாயாதிபதி அவளையழைப்பித்து இவன்கேட்டபடியே எலுமிச்சங்காயத்தனை

சாதம்போடுகிறேனென்று ஒத்துக்கொண்டாயாளென்றான் அவள் ஆமென்றாள் அலைப்படிசெய்தாயாவென்றான்னானப்படியேசெய்தேன் அவன் வீணாக வழக்காடுகிறானென்று அந்தச்சாதமும் இலையில் அப்படியேயிருக்கிறதென்றுசொல்லி சீக்கிரத்திலோடி இலையோடே அந்தசாதத்தையெடுத்துவந்து காண்பித்தான் மரியாதைராமன் ஓகோ ஒருசாதமாவது எனுமிச்சங்காயத்தனை பெருமன் இல்லாதபடியால் இவன்பணத்தையாவது கொடுத்துவிடு எனுமிச்சங்காயத்தனை பெருமனுள்ள ஒருசாதமாவது போடென்றான் அவள் அந்ததீர்ப்பைக்கேட்டுபயந்து அவன்கொடுத்தநாலுபணத்தையும் யாதொருதடையுஞ்சொல்லாமல் கொடுத்துவிட்டாள் மரத்தின்பழம் மரத்தண்டையேவிழும் என்கிறபடியே பணத்திற்குரியவனிடத்தே பணஞ்சேர்ந்தது.

௧௪-வது, இரவல்வாங்கினமோதிரத்தை அறியேனென்றது.

ஒருவன் கலியாணத்திற்குப் போகும்பொருட்டு மற்றொருவனிடத்தில் இரவலாக ஒருபொன்மோதிரம் வாங்கிக்கொண்டுபோனான் சிலநாள் போனபின்பு மோதிரக்காரன் இரவலாக வாங்கிக்கொண்டவனுடையகைவிரலிலே தன்மோதிரத்தைக்கண்டு கேட்கும்போது என்மோதிரமாச்சுதே என்னிடத்தில இரவலாகவாங்கினதென்று ஏன்பொய்சொல்லுகிறாய் போவென்றான் சொந்தக்காரன் விசனத்துடனே மரியாதைராமனிடத்திற்போய்ச்சொல்லிக்கொண்டான் அந்நியாயாதிபதி பிரதிவாதியையழைத்து விசாரிக்கும்போது நானிரவலாகவாங்கினதில்லை என்சொந்தஉடமையென்றுசாதித்தான் அவனுக்கு சாக்ஷியில்லாமையாலே உண்மையை வெளிப்படுத்த ஒரு மத்தியஸ்தனை அழைப்பித்து இந்தமோதிரத்தை அதிகமாக உரைத்து மாற்றையும் விலையையுங் குறைத்துச் சொல்லென்று அனுப்பிவிட்டு பிரதிவாதிகளையும் சேவகன்வசப்படுத்தி மத்தியஸ்தரிடத்திலேபோய்மதிப்பிட்டு இவ்விரண்டுபேருக்கும் பேர்பாதியாகக்கொடுத்து விடுவோமென்று அனுப்பினான் மத்தியஸ்தன் உரைக்கிறபோது சொந்தக்காரன் பொன்னதிகமாக உரைக்கிறானென்று பதைத்தான் மாற்றுச்சொல்லுகிறபோது குறைத்துச்சொல்லுகிறாயென்று கூவினான் விலைசொல்லுகிறபோது என்னுடமையை இப்படி அனியாயமாக விலைமதிக்கவும் நேரிட்டதாவென்று அழுதான் மற்றொருவன்சும்மாயிருந்தான் இதனாலே அழுதவன் உடமைக்காரனென்று அவன் பட்சமாய்த் தீர்ப்புசெய்தான் (தான்தேடாப்பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை) யென்பதை அந்தமோசக்காரன் தன்னிடத்திலே காட்டினான்.

௧௫-வது, கோழித்திருடி அறியேனென்றது

ஒருத்தியினுடையகோழியை அண்டைவீட்டுக்காரி திருடிக்கொன்றுதின்றுவிட்டாள் அவள்வீட்டுக்குள்ளேபோனகோழி மறுபடியும் வராமற்போனதைப்பார்த்துக்கொண்டிருந்த சொந்தக்காரி அந்ததிருடியினிடத்திற்குப்போய் என்கோழிஉன்வீட்டுக்கு

ள்ளேவந்ததே அது எதோவென்றுகேட்க அவள் பார்க்கவில்லையென்றுசாதித்தபடியாள் மரியாதைராமனிடத்திற்குப்போய் பிரியாதுசெய்தாள் அந்தத்திருடியை அழைப்பித்து கேட்டபோது நான் அந்தகோழியைபார்க்கவேயில்லையென்று சாதித்தாள் நியாயாதிபதி சாக்ஷியில்லாமையினாலே அவ்விரண்டுபேரையும் வீட்டிற்குப்போகச்சொல்லி கொஞ்சதூரத்திலே போகிறபோது கிட்டயிருக்கிறவர்களைப்பார்த்து ஒரு ஸ்திரீயானவள் கோழியைத்திருடிதின்றுவிட்டு அவள்மயிரை தலையிலேவைத்துக்கொண்டு இந்தசபையிலேநின்றுநானறியேனென்றுசாதித்துவிட்டுப்போறாளே அவளுடையதைரியத்தைப் பார்த்தீர்களோவென்று அவளுக்குக் கேட்கும்படியாகச்சொன்னான் அந்ததிருடி அந்தச்சொல்தன்காதிலேவிழுந்தமாத்திரத்திலே கையினாலேமெள்ளத்தன்கொண்டையைத்தடவிப்பார்த்தாள் அதைக்கண்டு நியாயாதிபதி அந்த திருடியைப் பிடித்துக்கொண்டுவரச்சொல்லி அவள வாலயக்கொண்டே திருட்டைவெளிப்படுத்தி அதற்குத்தகுந்த அபராதம்வாங்கிக்கொடுக்கும்படி உத்திரவுசெய்தான் (பொய்நின்று மெய்யையேவெல்லலுமா) என்றதை அத்திருடி அன்றைககுத்தான் நிஜமென்று நம்பினாள்.

௧௬-வது, வைத்தபணத்தை திருடிக்கொண்டு அறியேனென்றது

ஒரு பிராமணன் யாத்திரைப்போக நெடுநாளாக பிச்சையெடுத்து சம்பாதித்த ஆயிரம் பூவராகனையும் ஒருதவலைக்குள்ளேபோட்டு மேலேதுவரம்பருப்பை நிறையப்போட்டு தனக்குவிசிதமாயும் நம்பிக்கையாயுமிருக்கு ஒருகோமுட்டியினிடத்திலே தானுந்தன்பெண்சாதியுமாக எடுத்துக்கொண்டுபோய் இந்தத் தவலையிலிருக்கிற துவரம்பருப்பைத்தொடாமல் பத்திரமாகவைத்துக் காப்பாற்றி நாங்கள் யாத்திரைபோய்வந்த பிற்பாடு எங்கள்கையிலேகொடுமென றுசொல்லிவிட்டு யாத்திரைபோய் விட்டார்கள் ஒருநாளிரவில் கோமுட்டிவீட்டில் விருந்தாளிகள் மிகுதியாய்வந்தார்கள் அந்தவேளைக்கு துவரம்பருப்பு எங்கு மகப்படாமையினாலே பிராமணன்வைத்த துவரம்பருப்பையிப்போது எடுத்துக்கொண்டால் பதிலுக்குகொடுத்துவிடலாமென்று கோமுட்டி தன்பெண்சாதியை எடுத்துவரச் சொன்னான் அவள் தவலையை யெடுத்துக்கொண்டுவந்து கொட்டுகிறபோது கீழேபருப்பும மேலேபூவராகனுமாக விழுந்ததுகள் அவ்விரண்டுபேரும் சந்தோஷத்தையடைந்து பருப்பையும் வராகனையும் எடுத்துக்கொண்டு மறுநாள் வேறேதுவரம்பருப்புச்சம்பாதித்து தவலைநிறையப் போட்டுவைத்தார்கள் யாத்திரைபோன பிராமணன் தன்பெண்சாதியுடன் சிலமாதங்கழித்துவந்து கோமுட்டிவீட்டிலேவைத்ததவலையை வாங்கிக்கொண்டுபோய் சோதித்து தான்வைத்த பூவராகனைக் காணாமல்மிருந்த விசனத்தையடைந்து கோமுட்டிவீட்டிற்குப்போய் அவனுக்கும் அவன்பெண்சாதிக்கும் இரக்கம்வரும்படியாகச் சொல

யிப் பணம்கேட்க அவர்கள்நீங்கள்வைத்ததவலையைக் கொடுத்து விட்டோம் நாங்கள்மற்றொன்றறியமாட்டோமென்று சொல்லிய படியினால் மரியாதைராமனிடத்திற்போய் பிரியாதுசெய்தார்கள் அவன்கோமுட்டியை யழைப்பித்து அநேகஉபாயங்களினாலே விசாரணைசெய்து உண்மை வெளிப்படாமையினாலே தனக்குள்ஒரு யுக்திசெய்துக்கொண்டு பூதத்தைப்போல ஒருகூண்டுசெய்து அதற்குள் ஒருஆளைஒளித்துவைத்து கோமுட்டியையும்அவன்பெண் சாதியையும் அந்தக்கூண்டையுமெடுத்துக்கொண்டுபெரியதேவாலயத்தை பிரதக்ஷணமாகவந்து சத்தியம்செய்யும்படியாகஉத்தரவுகொடுத்தா னவர்கள் தலைமுழுகி அந்தபூதத்தையெடுத்துக்கொண்டு பாதிதூரம்போகையில் கோமுட்டி தன்பெண்சாதியைப்பார்த்து ஓகோ என்னகாரியம்செய்துவிட்டோம் நாம்பொய்சத்யம் செய்யும்படியாகவந்துநேரிட்டதே இந்தகூண்டுக்குள்யிருந்தவன் அதைக்கேட்டு நியாயாதிபதிக்குத்தெரியப்படுத்தினான் நியாயாதிபதிபயமுறுத்தி அவர்களைக்கொண்டே நிஜம்வெளிப்படுத்தி பிராமணனுக்கு அவன்வைத்த ஆயிரம்பூவராகனையும் வாங்கிக் கொடுத்து கோமுட்டிக்கு தகுதியான தண்டனையுஞ்செய்தான் நீராதவழக்கிற்கு தெய்வமேசாக்ஷியென்பது இந்தவழக்கில் விளங்கிற்று.

௧௭-வது, நெல்லொப்பந்தக்காரன் விலை மோசம் செய்தது.

ஒருவர்த்தகன் ஒருகுடித்தனக்காரனிடத்திற்போய்நெல்வாங்கிக்கொள்கிறேன் மாதிரிவாங்கிக்கொண்டுவாவென்றான் அவன் ஒருசின்னக்கூடையில் குறுணிநெல்லைக் கொண்டுவந்து காண்பித்தா னிதுவல்லாமலின்னம் வேறே யுண்டோவென்று கேட்டான் வேறுகிடையாது நீஒருவராகனுக்குவாங்கினாலும்இதுதான்பத்து வராகனுக்கு வாங்கினாலும் இதுதானென்றான் வர்த்தகன் பத்து வராகனை கொடுத்துவிட்டுவீட்டிற்குப்போய் பொதிமாட்டையோட்டிக்கொண்டுவந்து எனபது வராகனுக்கும் நெல்லையளவென்று கேட்டான் முனமாதிரிகாட்டினான் ஒருகூடைநெல்லைக் கொண்டு வந்துகொட்டி எடுத்துப்போவென்றான் நானப்போதுதானே நீஎவ்வளவுதொகைக்குவாங்கினாலும் இதுதானென்றுசொன்னேனே அதற்குசம்மதப்பட்டுதானே பத்துவராகனைக்கொடுத்தாய் ஆகையால் இதையெடுத்துக் கொண்டுவந்தாய் ஆகையால் இதையெடுத்துக்கொண்டுபோவென்றான் வர்த்தகன் மரியாதைராமனிடத்திலே பிரியாது செய்துக்கொண்டான் அந்நியாயாதிபதி குடித்தனக்காரனை அழைப்பித்து விசாரித்தபோது தான்சொன்னபிரகாரஞ்சரியாய் நடந்ததாகச்சொன்னான் நியாயாதிபதி இதற்குத்தீர்ப்புசொல்ல ஒருமாதஞ்செலலும் அதுவரைக்கும் நீங்களிரண்டுபேரும் ஒருவீட்டிலே சாப்பிட்டுக் கொண்டிருங்களென்று திட்டஞ்செய்து வர்த்தகனைப்பார்த்து சமையல் பண்ணுகிற சாதத்திலே வேளைக்கு வேளையும் சாப்பிட்டு குடித்தனகாரனுக்கும் பாதிசாதம்போடென்றுசொல்லி அப்புறம்ரகஸ்யத்திலே நீவயிறுநிறையச்

சாப்பிட்டுவிட்டு அவனுக்குஒருசாதத்திலே பாதிசாதம்பிட்டுவையென்று புத்திசொல்லிக்கொடுத்து அனுப்பிவிட்டான் அப்படியேசெய்தபடியாலிரண்டுவேளையும் பட்டினியிருந்துபார்த்து பசிவேதனையைபொறுக்கமாட்டாமல் நியாயாதிபதியினிடத்திலேசொல்லிக்கொண்டான் அவன்வர்த்தகனையழைப்பித்து நீயேன் அவனுக்குசாப்பாடுபோடவில்லையென்றுகேட்க உங்களுத்தரவின்படியே நான்பாதிசாதம்போட்டேன் ஆனாலிவர் சாப்பிடவில்லையென்றான் அதற்கு குடியானவன் இவனொருசாதத்தில் பாதிகிள்ளிவைத்து சாப்பிடச்சொன்னால எப்படிசாப்பிடுகிறதென்றான் அவன் ஒருகூடையில்கொண்டுவந்து எவ்வளவுதொகைக்கு வாங்கினாலும் இதுதானென்று மாதிரிகாட்டினநெல்லைப் பத்துவராகனுக்கு கொடுக்கவந்தானே ஆகையால் நீசொன்னபடிக்கு அப்படிபாதிசாதந்தான்போடுவேனென்றான் அதைக்கேட்ட நியாயாதிபதி பிரதிவாதியைப்பார்த்து ஊர்விலைப்படி அவனுக்கு பத்துவராகனுக்கு நெல்லையாகிலுபகொடுத்துவிடு இல்லாவிட்டால் ஒருமாதம்வரைக்கும் அவன்போடுகிற சாதத்தையாகிலுஞ் சாப்பிட்டுக்கொண்டிருவென்றான் அதுகேட்டு பிரதிவாதி எதிருத்தரவுகொடுக்கவழியில்லாமல் ஊர் விலைப்படி நெல்லைக் கொடுக்கவே ஒத்துக்கொண்டான் (அழுக்கை அழுக்குக்கொல்லும் இழுக்குவெல்லும்) என்கிறது இவ்வழக்கிலே நிசமாக நம்பப்பட்டது.

௧௮-வது, ஒருவன்காதுக்கடுக்கனை மற்றொருவன்திருடியது.

ஒரு சத்திரத்தில் இரண்டுபேர் வழிபோக்கர் ஒருவர்க்கொருவர் எதிர்முகமாக தலையைவைத்துப் படுத்துக்கொண்டார்கள் நித்திரையிலேவலக்காதுகீழாகப்படுத்திருந்தவனுடைய இடக்காதுகடுக்கனை இடக்காதுகீழாகப் படுத்திருந்தவன் கழற்றி வலதுகாதிலே போடடுக்கொண்டபிற்பாடு கடுக்கனையிழந்தவன் என்கடுக்கனை ஏன்கழற்றிக்கொண்டாயென்றான் இப்படி கலகப்பட்டு கடுக்கனையிழந்தவன் மரியாதைராமனிடத்திலே சொல்லிக்கொண்டான் நியாயாதிபதி சமஸ்தானத்தில திருடனையழைத்துக்கேட்டபோது அவனும் அப்படியே சொன்னபடியினாலே நீங்களிருவரும் எப்படிபடுத்துக்கொண்டீர்களோ அப்படிபடுத்துக்கொண்டுகாண்பியுங்களென்றான் அப்படியேகாண்பித்தபோது திருடனைப்பார்த்து உன்னிடதுகாது கீழேயிருந்தபடியால் அதிலிருந்து எப்படிகழட்டலாம் அவனிடதுகாது மேலேயிருந்தபடியால் எளிதாகக்கழற்றிக்கொண்டாய் நீதான் திருடனென்றுசொல்லி உடமைக்காரனுக்கு கடுக்கனை வாங்கிக்கொடுத்து திருடனை இருபத்திநாலடியடித்து ஆறுமாதங்காவலிலிருக்கச்செய்தான் திருடன் பொய் சொன்னாலும் பொருந்த சொல்லவேணும் என்கிறதைக் கற்றுக்கொள்ளவுந் தெரியாமற் போயிற்றேயென்று துன்பத்தையடைந்தான்.

௧௬-வது, ஒருவன் மற்றொருவன் பசுவின்கன்றுகளை மாற்றியது.

ஒருசமுசாரிக்கு ஒருபசுமந்தையிருந்தது அதன்பக்கத்தில் மற்றொருசமுசாரிக்கு பத்துபசுக்களிருந்தது மந்தையைவைத்துக்கொண்டிருந்தசமுசாரி தானில்லாதபோதெல்லாந் தன்மந்தையை பத்துபசுக்களை வைத்துக்கொண்டிருக்கிறவனைப் பார்த்துக்கொள்ளச்சொல்லுவான் இப்படியிருக்கையில் அவனில்லாததருணப பார்த்துத் தன்மூன்றுசேங்கன்றை மந்தைபசுக்களி லூட்டவிட்டு அதுகளில் மூன்றுகிடாரிகன்றுகளை மாற்றிக்கொண்டான் பின்பு சிலநாளைக்குள்ளே நோய்வந்து அந்தமந்தைப்பசுக்களெல்லாம் இறந்துப்போச்சுதுகள் பத்துப்பசுக்கள்வைத்துக்கொண்டிருக்கிறவன மாற்றிக்கொண்ட மூன்றுகிடாரிகளும்பெரிய எருதுகளாய்க்கன்றுபோட்டுக் கறந்துக்கொண்டிருந்ததுகள் இப்படியிருக்கிறகாலத்தில் ஒருநாள் மந்தையில் பசுவைத்துககொண்டிருந்தவன் பால்மோரில்லாமையினால் எனக்குக்கொஞ்சம் பால்வார்க்கவேணுமென்று பத்துப்பசுககள் வைத்துக்கொண்டிருக்கிறவனைக்கேட்டான் அவன் ஒருபசுவின்பாலை கறந்துகொடுத்தான் அதை சாப்பிட்டவுடனே இப்பொழுது பால்கறந்தபசுவென்னுதென்று வழக்கிட்டு மரியாதைராமனிடத்திற்குப்போய் பிரியாதுசெய்தான் அந்த நியாயாதிபதி அவனையழைப்பித்து இவன்பசுவை நீயேன் அபகரித்தாயென்றுகேட்டான பிரதிவாதி அப்படி நான்செய்யவில்லை செய்ததாகச் சாட்சிகளைக்கொண்டு வாதிருசுப்படுத்தினால் தண்டனைக்குள்ளாவேனென்றான் நியாயாதிபதி வாதியைப்பார்த்து உன்பசுவென்றதற்குக் காரணமென்னவென்று கேட்டான் பாலினுடையருசியெனக்குத்தெரியுமென்றான் அதைக்கேட்டவுடனே நியாயாதிபதி இருவரையும் பதினைந்துநாள்பொருத்துவாருங்களென்று அனுப்பிவிட்டு ஆட்டெருவும் மாட்டெருவும் குப்பையெருவும் இம்மூன்றையுந்தனித்தனி கீரைபாத்திலேபோட்டு கீரையை விளைத்துப் பயிராக்கிக்கொண்டு அவ்விருவரையும் அழைப்பித்து இந்தமூன்று கிடைபாத்தியிலிருக்கிற கீரைகளைப்பிடுங்கி ஒன்றாய்க்கலந்து சமையலுஞ்செய்து பசுவின்தயிர் ஆட்டுத்தயிர் மூன்றையும் ஒன்றாய்க்கலந்து இருவருக்கும் விருந்துசெய்கிற பாவனையாய்ச் சாப்பிடச்சொல்லி இதுகளை வட்டித்தார்கள் அப்போது பிரதிவாதி சீக்கிரமாகச் சாப்பிட்டுப்போனான் அவ்வாதியைப்பார்த்து சாப்பாடு எப்படியிருந்ததென்றுகேட்க அவன் சொல்லுகிறான் (மூவெருவின் கீரைப்பாடு முப்பாலின்றயிரும் நாலுருசிகண்டேன்) என்றான் நியாயாதிபதி இவன்சொன்னபுத்தியினாலே நிஜத்தை அறிந்துக்கொண்டு பிரதிவாதியைப்பார்த்து நீ உண்மையைச்சொல்லாவிட்டால் தண்டனைக்குள்ளாவாயென்று கேட்க பிரதிவாதி மந்தைப்பசுக்களிலே மூன்று சேங்கன்றை ஊட்டவிட்ட மூன்றுகிடாரிகன்றைமாற்றிக்கொண்டேனென்றான்

அதுகேட்டு நியாயாதிபதி வாதிபட்சம் தீர்ப்புசெய்தான் (அறிவுள்ளவனுக் கறிவதொன்றில்லை) என்றபடி வாதி அதிக புகழ்பெற்றான்.

## உ௰-வது, நால்வர் பொதுவிலிருந்த இரத்தினத்தை அவர்களி லொருவன் திருடியது.

ஒருவன் தன்மரணகாலத்திலே புத்திரர்நால்வருக்கு பொதுவிலே நாலாயிரம் வராகனையும் சமமானநான்கு இரத்தினங்களையும் ஒருபெட்டியிலேவைத்துப்பூட்டி தன்பெணசாதியினிடத்திலசாவியைக்கொடுத்து ஒருமையாயிருக்கிறவரைக்கும் இருக்கட்டும் விரோதிக்கிறகாலத்திலே பங்கிட்டுக்கொள்ளட்டுமென்று சொன்னான் பிற்காலத்திலே பிள்ளைகள் தங்களுக்கு சிலவுக்குவேண்டியபோது நாலுபேருமாகச்சேர்ந்து சாவியைவாங்கித்திறந்து எடுத்துக்கொள்ளுவார்கள் அப்படிசெய்யும்போது ஒரு தடவையில் இளையவன் ஒரு ரத்தினத்தை திருடிக்கொண்டான் அதைக்குறித்து நாலுபேருஞ் சச்சரவுபட்டு மரியாதைராமனிடத்திற்போய் சொல்லிக்கொண்டார்கள் அந்த நியாயாதிபதி இவர்களைச்சிலநாள் தன்விட்டிலே வைத்துக்கொண்டிருந்து ஒருகதைசொன்னான் அதாவது ஒருராசகன்னிகை தான் படித்து முடிந்தவுடனே வித்தியாகுருவுக்குத் தட்சணை கொடுக்கப்போனாள் அவனதிகர்ப்பவதியாய்கேட்பதற்கு நீயாதொருதடையுஞ் சொல்லுகிறதில்லையென்று வாக்குகொடுத்தால் தட்சணையெடுப்பேனென்றான் அப்படியே ஆகட்டுமென்றாள் அதற்கு அவன் உன்னோடொருதரங் கூடவேண்டுமென்றான் நீ வித்தியாகுருவாகையால உமதுகருத்தின்படி நடந்துக்கொள்ளுவது எனக்கு கடமைதான் ஆனாலெனக்குச் சோபனஞ் செய்யும்போது முன்னே உமதிஷ்டத்தை நிறைவேற்றாமல் நான் என்புருஷனைத் தொடுவதில்லையென்றாள் அப்படியே அவளுக்குச் சோபனஞ்செய்யும்போது இராத்திரிபடுக்கைக்குப் போனவிடத்தில் புருஷன் சரசஞ்செய்யததொடங்கினான் அதைக்கண்டு அவள்புருஷனைநோக்கித் தான் வித்தியாகுருவுக்கு வாக்குக்கொடுத்திருக்கிறதைச் சொல்லித்தடுத்தாள் புருஷன் அவளுடைய நிலையைக்கண்டு யோக்கியவதியென்று சந்தோஷப்பட்டுச் சொன்னசொல்லைக்காப்பாற்றும்படியாக உத்திரவுகொடுத்து அனுப்பினான் அவள்போகும்போது வழியிலேதிருடன் மடக்கிக்கொண்டான அவனுக்குத் தான் போகிற காரியததை நிறைவேற்றிக்கொண்டுவருமபோது தன்னுடமைகளையெல்லாம் கழட்டிக்கொடுக்கிறேனென்று பரவசஞ்செய்து கொடுத்து விட்டுப்போய் வித்தியாகுருவைக்கண்டு உமதிஷ்டத்தை நிறைவேற்றவந்தேன் தயவுசெய்து என்னைச்சீக்கிரத்தில் அனுப்பவேண்டுமென குருவானவர்

அவள் நிலைமையைக்கண்டஞ்சி அம்மா நீ சற்புத்திரி குருபக்தி
உனக்கிருக்குதோ இல்லையோவென்று சோதிக்கும்பொருட்டு அ
ப்படிப்பட்டகாரியத்தை உனக்குச்சொன்னதேயல்லாமல்வேறில்
லைநீசுகமாகப்போய் உன்புருஷனிடத்திற்சேரென்று ஆசீர்வாதம்
பண்ணி அனுப்பிவிட்டார் அப்படியே வரும்போது திருடனிடத்
தில்வந்து தன்னுடமைகளையெல்லாம் கழட்டிக்கொடுத்தாள் அ
வன்பயந்து இப்பேற்பட்ட கற்புடைய உத்தமியை உலகத்திலே
கண்டதில்லையென்று அதிசயப்பட்டு அந்த உடமைகளுடனே த
ன்னிடத்திலிருந்த உடமைகளிற் சிலதுகொடுத்தனுப்பிவிட்டாள்
பின்பு புருஷனிடத்தில்வந்து போனவிடத்தில் நடந்தவர்த்தமான
மெல்லாஞ்சொல்லப் புருஷனதிகசந்தோஷமுற்றான் பின்பு இருவ
ருங்கூடிச் சுகத்திலேயிருந்தார்கள் இவர்கள்நாலுபேருக்குள் யா
ர்யோக்கியனென்றுகேட்டான் மூத்தவன் குருயோக்கியனென்றா
ன் அவனுக்கிளையவன் திருடனேயோக்கியனென்றான் இதுகளைக்
கேட்டவுடனே நியாயாதிபதி பாலைக்குடித்தவனுக்கு பாலேப்பம்
வரும் கள்ளைக்குடித்தவனுக்கு கள்ளேப்பம்வருமென்ற பழமொ
ழிப்படியே திருட்டிலிச்சையுள்ளவன் திருடனை யோக்கியனென்
றுசொன்னானென்று அறிந்து இளையவன்வாயைக்கொண்டு உண்
மையை வெளிப்படுத்தி இரத்தினத்தைவாங்கி மற்றவர்களிடத்தி
ற்கொடுத்து திருடினவனுக்குத்தகுந்த தண்டனையுஞ் செய்தான்.

உக-வது, நவமிபுருடனுடையபெருமையைத்தெரிவிக்குதல்.

ஒருகுடியானவன் நாட்டுப்புறத்திலே ஒருபெண்ணை விவாக
ஞ்செய்து இருவரும் வாழ்ந்துக்கொண்டிருக்கையில் அந்தப்பெ
ண்ணை பத்துதினத்திற்குள் அனுப்புவிக்கிறேனென்று சொல்லித்
தன்பெண்ணை அழைத்துக்கொண்டுபோனான் ஒருமாதபரியந்தம
அனுப்பாததினால் குடியானவன் தன்பெண்சாதியை அழைத்துக்
கொண்டுவர மாமியார் வீட்டுக்குப்போய் தன்பெண்சாதியை அ
னுப்பும்படிகேட்டான் இன்றையதினம் நவமிதிதியாகையால ஊர்
பிரயாணம்போகக்கூடாதுயென்று புரோகிதலசொல்ல மாமியா
னவளப்படியே வேண்டியமட்டுஞ்சொன்னாள் என்பெணசாதியை
நானழைத்துக்கொண்டுபோனால் நவமி யென்ன பண்ணுமென்று
சொல்லி உதாசினமான வார்த்தைகள் பேசினான் ஓரேமூர்க்கமா
ய் தன்பெண்சாதியை அழைத்துக்கொண்டுபோனான் வழியில்வ
ரும்போது பலவகைதொந்தரவினால் தன்பெண்சாதியைமரத்தடி
யில்வைததுவிட்டு குளத்தருகேபோனான் அத்தருணம் நவமி புரு
ஷன் அவனைப்போல ரூபங்கொண்டு பெண்ணை அழைத்துக்கொ
ண்டுபோனான் போய்க்கொண்டிருக்கையில சொந்தபுருஷன வந்
துமரத்தடியிலிருந்த பெண்சாதிகாணாமலதிகைத்து வழிபார்த்து
ஒரு புருஷன் பின்னே போகக்கண்டு ஓடி அருகில்வந்து எண்டா

என்பெண்சாதியை இட்டுக்கொண்டு போறாயென்று கேட்டான். அவன் என் பெண்சாதியாச்சே நீயாரடாவென்றுகேட்டான் அவ்விருவரையும்பார்த்து அந்தஸ்திரீயானவள் இவர்களிருவரும் ஏகரூபமாய் இருக்கப்பார்த்து தன்புருஷனின்னாரென்று குறிப்புகாணமாட்டாமல் திகைத்து நின்றுவிட்டாள் அவர்களிருவரும் சச்சரவுபட்டு மரியாதைராமனிடத்தில் பிரியாது பண்ணிக்கொண்டிருந்தார்கள் அதுவறிந்து பிரதிவாதிகளைப்பார்த்து அவயவங்களும் ரூபங்களும் ஏகரூபமாய்க்கண்டு அந்தஸ்திரீயைப்பார்த்து இவ்விருவர்களிலே உன் புருஷன் யாரென்றுகேட்டான் அந்த ஸ்திரீயானவள் ஐயாநியாயாதிபதியே இவ்விருவர்கள் ஒரேரூபமாயிருக்கிறபடியால் எப்படியாகிலும் கண்டுபிடித்து என் புருஷனை என்னோடுகூட சேர்க்கவேணுமையாவென்று மிகவும் வேண்டினாள் அதற்கு நியாயாதிபதி தன்புத்தியினாலே ஆலோசித்து இதுதெய்வமாய்கையென்று கண்டுகொண்டு இவர்களை நாளையதினம்வரும்படி திட்டஞ்செய்தனுப்பிவிட்டுத் தன்னிஷ்டதேவதையைத் தியானித்து ஒருமண்பானையைச் சுண்டுவிரலபருமன் மூக்குக்காகமுள்ளதாய்ச்செய்துக்கொண்டுவாச்சொல்லி குயவனுக்கு உத்திரவுபண்ணினான் அவனப்படியேசெய்துக்கொண்டுவந்து கொடுத்தான். மறுநாட்காலையில் நியாயாதிபதிசமஸ்தானத்திலுட்கார்ந்துக்கொண்டிருக்க மூவரையும் அழைத்து வரும்படிசெய்து உபயவாதிகளைப்பார்த்து ஓய் புருஷர்களே இந்தஸ்திரீக்கு புருஷன் நான்தானென்று பெருவழக்கிட்டுச் சொல்லுகிறபடியால் அதோசபையில்வைத்திருக்கிற கரகபாண்டத்தில் நுழைந்து கரகமூக்குவழியாகவருகிற புருஷனே அவனிந்தஸ்திரீயின் புருஷனென்று நிச்சயித்துக்கொள்ளலாம் சொந்தபுருஷனானவன் இது அசாத்தியமானகாரியமென்றுபேசாமல் சபையிலே தலையிரக்கங்கொண்டு சும்மாயிருந்தான் நவமிபுருஷனானவர் எழுந்திருந்து கரகத்தின மூக்கின்வழியே வெளியிலேவந்து நின்றார் அப்போது மரியாதைராமன சிம்மாசனத்தைவிட்டிறங்கி அந்தமகாபுருடனை பிரதட்சணநமஸ்காரஞ்செய்து நீ எந்ததேவனோ ஓ மகாபுருடர் உமது நிச்சயத்தை வெளிப்படுத்துமையாவென்று பிரார்த்தித்தான். அப்போது நவமிபுருடன் இவன்பெண்சாதியை யிட்டுக்கொண்டு வரச்சே புரோகிதனின்றைக்கு நவமிபிரயாணமாகாதென்றுசொல்ல என் பெண்சாதியை நவமியென்னசெய்யலாமென்று துராக்கிரதமாக யிட்டுக்கொண்டுவந்தான் ஆகையால் நான்பரீட்சைசெய்யவந்தேனென்றான் இந்தச்சூட்சத்தையறிந்து நியாயத்தைக்கண்டுபிடித்தாயே நீயேசத்தியவாதி நீ இம்மையிலே சவுக்கியமும் மறுமையிலேமுத்தியும் பெறுவாயென்று ஆசீர்வாதஞ்செய்து தன்னிருப்பிடத்திற்கெழுந்தருளினார் பின்பு நியாயாதிபதி அவனைப்பார்த்து நீபெரியோர்கள் வார்த்தையைத்தட்டி முரட்டுத்தனமாய் நடந்தபடியினாலே இந்த அவஸ்தைவந்தது இனிமேல அப்படி துராக்கி

ரக்ஞ் செய்யாதேயென்று புத்திசொல்லி அவன் பெண்சாதியை அவனுடன் கூட்டியனுப்பிவிட்டார் நாள்செய்தது நல்லுற்றார்செய்ய மாட்டார்களென்கிற பழமொழிக்கு அத்தாட்சியாயிற்று.

மரியாதைராமன்கதை-முற்றிற்று.

---

## உ-வது, அத்தியாயம் இராயர் அப்பாஜிகதை.

### க-வது, அப்பாஜிக்கு முதல்மந்திரிபட்டங்கொடுத்தது.

இராயர் ராஜரீகம் பண்ணுகிறகாலத்திலே தமக்குள்ளடங்கிய குறுநிலமன்னவர்களையெல்லாம் வரச்சொல்லி உத்திரவு செய்தார் மற்றவர்களெல்லாரும் வந்தார்கள் அவ்வொருவனுக்கு பதிலாக அவனிடத்தில் மந்திரியாயிருந்த அப்பாஜிவந்தான் எல்லோரும் இராயரை தரிசித்துக்கொண்டு வருகையில கடைசியில் அப்பாஜிவந்தான் உன்பேரென்னவென்று கேட்கும்போது என்பேர் அப்பாஜி எஜமானுக்கு பதிலாகவந்தேனென்றான் முதலாளிவராமல் இவனையனுப்பினானென்று கோபம்கொண்டு அதைக்காட்டாமல் இராயர் உன்னெஜமானையழைப்பியென்று உத்திரவுசெய்தார் அப்படியேயழைத்து நாலுநாழிகைவழிக்கப்புறம் ஒரூரில் நிறுத்திவைத்தான் இப்படியிருக்கையில் ஒருநாள் இராயர் கசாப்புக்கடைமார்க்கமாகச்சவாரிபோகிறபோது அந்தக்கடைக்காரன் ஆட்டைகட்டி உரிக்கிறதைப்பார்த்து உன் எஜமானை சீக்கிரத்தில் அழைப்பியென்று அப்பாஜியுடனே சொன்னார் கசாப்புக்கடையண்டையிலேபோகிறபோது உத்திரவுசெய்தபடியினாலே ஆட்டைக்கட்டியுரிக்கிறதுபோலே தன்னெஜமானைக்கட்டியுரிக்க நினைத்திருக்கிறதாகத்தோண அப்பாஜி சீக்கிரத்தில் தன்னெஜமானை ஊருக்குப்போய்விடச்சொல்லி சமாச்சாரம் எழுதிவிட்டான் அப்படியே அவன்போய் ஊரிலேசேர்ந்தான் கொஞ்சநாள்போனபிறகு இராயர் சந்தோஷமாயிருக்கிறகாலத்தில் அப்பாஜியைப்பார்த்து உன்னெஜமான்வந்தானாவென்றுகேட்டார் இன்னம்வரவில்லையென்றுசொன்னான் என்னத்தினாலே ஆலசியமென்றுகேட்டார் ஐயா என்னெஜமானை ரட்சிக்கிறேனென்று வாக்குகொடுத்தால் ஆலயத்துக்கு காரணஞ்சொல்லுகிறேனென்றான் உன்னிஷ்டப்படியே கொடுத்தேனென்றார் என்னெஜமான்சமீபத்தில்வந்திருந்தார் தாங்கள்கோபங்கொண்டிருக்கிறதைக்கண்டு ஊருக்குப்போகச்சொல்லி எழுதியனுப்பிவிட்டேனென்று எனக்குக்கோபம்வந்தபோது உனக்கு எப்படித்தெரிந்ததென்றார் கசாப்புக்கடையிலேபோகும்போது ஆட்டையுரித்துக்கொண்டிருக்கிறது தங்கள்பார்வையில்

பட்டமாத்திரத்தில் அழைக்கச்சொல்லி உத்திரவுசெய்தபடியினுலே ஆட்டையுரிக்கிறதுபோல என்னெஜமானைக்கட்டியுரிக்க நினைத்ததாக என்புத்தியிலேதோன்றினதென்றுரைக்க இராயர் அதுகேட்டுமெத்த ஆச்சரியப்பட்டு அப்பாஜியை தன்னிடத்தில் மந்திரியாகவைத்துக்கொண்டு அவனெஜமானையும் ரட்சித்தாராகையினுலே புத்தியுள்ளவர்க்குச் சித்தியாகத்தக்கது ஒன்றில்லையென்றறியவும்.

## உ-வது, உத்தியோகத்துக்கு தக்கசுகமென்றது.

ஒருநாள் இராத்திரியெல்லாம் விடாமழைப் பேய்ந்துக்கொண்டிருந்தது விடியற்காலத்திலேமழைவிட்டபின்பு இராயரும் அப்பாஜியும்புறப்பட்டு ஊருக்குப்பின்னுல் காட்டுவெளியே வெள்ளத்தின் சிறப்பைப் பார்க்கப்போனுர்கள் அங்கே ஓரிடையன் தன் மந்தையினண்டையிலே தலைபக்கத்திலே ஒருகல்லும் இடுப்பின்கீழே ஒருகல்லும் கால்பக்கத்திலே ஒருகல்லும் வைத்துக்கொண்டு ஜம்பங்குடையை மேலேமூடிக்கொண்டு தன்கீழேஓடுகிறவெள்ளத்திலே தலைமயிரலைய நித்திரைசெய்துக்கொண்டிருந்தான் இராயர்பார்த்து ஆச்சரியப்பட்டு அதிகநித்திரையிலிருக்கிருனெனன அது கேட்டு இப்படிப்பட்ட வெள்ளத்திலே தலைமயிரலைய கீழே வெள்ளம்ஓட கல்லுகள் உடம்பிலேயுறுத்த நித்திரைபிடிக்குமோவென்றுகேட்டார் அதற்கு அப்பாஜி உத்தியோகத்துக்குத் தக்கசுகமென்ருர் இராயரதைசோதிக்கும்படியாக அந்தமுரட்டிடையனைத்தன்னரண்மனைக்கழைப்பித்துப் பெரிய உத்தியோகம்கொடுத்து போஜனம் ஆபரணம் வாகனம் இவைமுதலாகிய ராஜோபசாரங்கள் தனக்குநடந்துவருகிறதிலும் அவ்விடையனுக்கு நாளுக்குநாள் அதிகமாக நடந்துவரு படியாக திட்டஞ்செய்துவெளியில் காற்றுமழை பனிபிவைகளால் யாதொரு வருத்தமும் இல்லாமல் அவனைச்சிலகாலம்வைத்திருந்து அதன்பினபு அவன்வீட்டுவாசற்படியே பச்சைவாழைப் பட்டைகளைப் போட்டுவித்தார் அவனதன்மேல்நடந்து உள்ளேபோனமாத்திரத்திலே அவனுக்கு ஜலதோஷமும் காச்சலுங்கண்டு மிகவருத்தப்பட்டதை இராயர் அப்பாஜிசொன்னதுசரிதானென்று சந்தோஷப்பட்டு ஒரு லவத்தியனைக்கொண்டு குணப்படுத்திவிட்டார்.

## ௩-வது, இவளுக்கும் ஒருபுருஷனிருப்பானென்றது.

இராயரும் அப்பாஜியும் ஒருநாள்சாயங்காலம் ஒருவீதியில் வேடிக்கையாகப்போகையில ஒருதிண்ணைமேலே ஒருதரித்திரகுரூபியாயும் சமீபத்தில் வந்தவரெல்லாம அசங்கியப்படத்தக்க கெட்டநாற்றமுடையவளாயும் படுத்துக்கொண்டிருக்கிறதை இராயர்கண்டு இவளையும் ஒருவன் சேருவானுவென்றுகேட்டார் அப்பாஜி

இவளுக்கும் ஒருபுருஷனிருப்பானென்றுசொன்னான் அவன் எப்படிப்பட்டவனோ அவனைப்பார்க்க எனக்கு இச்சையுண்டாயிருக்கிறதென்றுசொன்னான் அப்புறம் கொஞ்சதூரம்போகையில் நல்லவேஷ்டியுந் தலைப்பாகையும் உத்தரியமும் உடையவனாய்கையிலே வெற்றிலைப்பாக்கு எடுத்துக்கொண்டுவருகிற ஒருவன் கையிலிருந்த உலர்ந்தசுண்ணாம்புக்கு ஈரமுண்டாகத் தெருச்சாக்கடைநீரை அருவருப்பில்லாமல் அள்ளியிட்டுக் கொண்டான் அதை அப்பாஜிபார்த்துசுவாமி இவன் அவளுக்குநாயகனென்றான் அதைச்சோதிக்க அவனுக்குப்பின்னாலேதிரும்பிவந்தார்கள் அவன்சரேலென்றுபோய் அவள்பக்கத்திலேயுட்கார்ந்து அவளுக்கு வெற்றிலைபாக்குக்கொடுத்து சரசஞ்செய்துக்கொண்டிருந்தான் அதைக் கண்டு இராயர் அப்பாஜியின் புத்திநுட்பத்தை மெச்சினார்.

## ச-வது, தண்டைசதங்கையும இடவேணுமென்றது

ஒருநாள் இராயர் பெண்சாதி அப்பாஜியின் உத்தியோகத்திற்கு மற்றொருவனைக்கொண்டுவந்துவிட்டு இராயருக்கு சிபார்சு செய்தாள் இராயர் அப்பாஜிவல்லமைஇவனுக்குண்டோவென்று கேட்டார் அதற்கவள் அதிக்மாகவேயிருக்குமென்ற நினைக்கிறேனென்றாள் ஆனால்பரீட்சைசெய்வோமென்று அவளைப்போகும்படி உத்திரவுகொடுத்தார் பின்பு ஒருநாள் இராத்திரி அந்தப்புறத்திலே இராயர்புத்திரன் அவர்மார்பிலுமுகததிலும் காரியுமிழ்ந்து பாதத்தாலுதைத்து விளையாடிக்கொணடிருநதது சூரியோதயமானபின்பு இராயர் அப்பாஜி உத்தியோகத்திற்கு வநதமனிதனை யழைப்பித்து அவனைப்பார்த்து இராத்திரி ஒருவன் என்முகத்திலும் மார்பிலும் காரியுமிழ்ந்து காலாலுதைத்தான் அவனை என்ன செய்யலாமென்றார் அவன் உலகத்துக்கெல்லாம இறைவனாயிருக்கின்ற உங்களை இப்படி அலட்சியம செய்தவன்வாயில் ஈயத்தைவுருக்கிவார்த்து கால்களைவெட்டிவிடவேணுமென்றான் அவனையப்புறம்போகச்சொல்லி அப்பாஜியையழைத்து முன்னவனைக்கேட்டபடியேகேட்க அதற்கு உங்களை உதைததபாதமெதுவோ அதற்கு பொற்சலங்கை தண்டைகொலுசும்போட்டு உஙகள்மேல் உமிழ்ந்தவாயெதுவோ அதனைமுத்தமிட்டுக் கொள்ளவேண்டுமென்றான் அதன்பின்பு இராயர் நீ சிபார்சுசெய்த மனிதனை அப்பாஜியிலும் வல்லவனென்று புகழ்ந்தாயே இவ்விருவர் விவேகத்தைப்பாரென்றுகேட்டார் அதற்கவள் ஒரு பரீட்சைதானே எப்படி நிச்சயிக்கலாமென்றாள்.

## இ-வது, இகழ்ச்சியாகக்கொண்டவனை புகழ்ச்சியாகக்கொண்டது

ஒருநாள் இராயர் சபையிலே ஆடல்பாடல்களிலே வல்லவர்களாகிய மூன்றுபேர்கள் தாசிகள் தெற்கேயிருந்து தங்கள் வித்தையினுடைய பெருமைகளைக காண்பித்தார்கள் இராயர் அவர்களைப்பார்த்து மெச்சி வெருமதிகள்செய்தார் அந்தமூன்றுபேரி

ல் ஒருத்தி இந்த மகாராசாவின் குணம் வேரும் விறகுமடியென்
ருள் மற்றொருத்தி முள்ளுமுரடுமடியென்றாள் வேறொருத்தி கல
லுங்கரடுமடியென்றாள் இராயர்பெண்சாதி சிபார்சுசெய்தமனித
ரை அழைத்து இவர்கள் சொன்னதற்கு நாம் செய்யவேண்டிய
தென்னவென்று கேட்டார்கள் இராஜாதிராஜாகிய உங்களை இ
ப்படி தூஷணமாகச்சொன்னபடியால் இம்மூன்றுபேரையும்மொ
ட்டையடித்துத் துரத்திவிடவேணுமென்றான் அப்பாஜியையழை
த்துகேட்டதற்கு சுவாமி அவர்கள் சொன்னவாக்கியங்கள் தூஷ
ணமல்லவே வேரும விறகுமென்றது விறகைப்போலவும வேருள்
ளதாயுமிருக்கிற அடிக்கருமபைப்போல மதுரமுள்ள குணமென்
றதாம் முள்ளுமுரடுமென்றது முள்ளையும் முரட்டுருபத்தையு
டைய பிலாப்பழத்தைப்போல ருசியுள்ள குணமென்றதாம் கல்
லுங்கரடுமென்றது கல்லுருவமாகியுங் கடாயுமிருக்கின்ற கண்
டைபோலச்சுவையுள்ள குணமென்பதாம் ஆகையால் உங்களு
டைய நிஜமான குணத்தைப் புகழ்ந்ததற்காக அதிகவெகுமதிசெ
ய்யவேண்டுமென்றான் இராயர் சந்தோஷித்து அவ்விருவர் சொ
ன்னதுகளைப் பெண்சாதிக் கறிவித்தார் அவள் இன்னமொருபரீ
ட்சை பெரிதாகச்செய்தாலதான் எனக்குசந்தேகந்தீருமென்றாள்.

௯-வது மயிருஞ் சாம்பலும் பிரவரசர்களுக்குக்கொடுத்தது

ஒருநாள் இராயர் அந்தபுரத்தில் தனபெண்சாதியைப் பக்
கத்திலே வைத்துக்கொண்டு மயிருஞ்சாம்பலும்வைத்து இரண்டு
பொட்டளத்தைக்கொடுத்து கன்னடதேசத்து ராசாகையிலிதை
கொடுத்து கண்டுகொண்டுவாவென்றனுப்பினார் மற்றொருபொட்
டளத்தை அப்பாஜிகையிலே கொடுத்து இதை தெலுங்குதேசத்
து ராஜாகையிலேகொடுத்து கண்டுகொண்டு வரச்சொல்லியனுப்
பினார் அந்தசிபாரசுக்காரன் கன்னடதேசத்திற்குப்போய் அதை
அவ்வரசனகையில் கொடுத்து இராயர் உமக்குக்கொடுத்துவரச்
சொன்னாரென்றான் அதை அந்த இராஜாபிரித்துபார்த்து இதெ
ன்னவென்று கேட்டான் எங்களிராயர்எமதரசாட்சிக்குமுன்னே
நீயும் இராஜாவென்றுபேர்வைத்திருக்கிறதைவிடசாம்பலைத்தொ
ட்டுக்கொண்டு மயிரைப்பிடுங்கிச் சேவகஞ் செய்யலாகாதாவென்
று தெரிவிப்பதற் கடையாளமாக அனுப்பியதுபோலத்தோன்று
கிறதென்றான் அந்தச்சொல்லைக்கேட்டபோதேகோபம்பிறந்துகண்
கள்சிவந்து அந்தக்கன்னடதேசத்து ராசன் தன்னுடைய சேனை
களைக்கூட்டிக்கொண்டு சண்டைக்குவந்தான் அப்பாஜி அந்தபொ
ட்டளத்தைப் பிரித்துப்பார்த்து ரத்தினமிழைத்த தங்கபாணியி
ல் வைத்துப்போட்டுச் சீலைசுற்றிப் பல்லக்கின்மேலவைத்து சப்த
சாமரநிர்த்தந கீதவாத்தியத்துடனே கொண்டுபோய் தெலுங்கு
தேசத்து ராசனைக்கண்டு இராயரவர்கள் ஒரு எக்கியமபண்ணின
விபூதியும் எக்கியசபமோமமாகிய பிரசாதமும் உம்முடைய க்ஷே
மத்திற்கனுப்பினாரென்றான் அதையவன்வாங்கி சந்தோஷமடைந்

அப்பாசிக்குச் சகலவெகுமதியுஞ்செய்து தாயாருக்கு அநேகவெகுமதியுஞ்செய்து தன்னுடைய ஆனைசேனைகளைக்கூட்டி அப்பாசியைச்கொண்டுபோய் இராயரிடத்தில்விட்டுவரச்சொன்னான் அப்பாசிவருகிறதற்குமுன்னே கன்னடதேசத்து ராசாவினுடைய தண்டுவந்து கோட்டையைச் சுற்றிக்கொண்டு சண்டைக்கு ஆரம்பித்தார்கள் இராயர் அந்தருணத்தில் அப்பாசியில்லையே யென்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அப்பாசிவந்துவிட்டான் அவன்பின்னேவந்தசேனையையும் தமதுசேனையைக் கூட்டிக்கொண்டு ராசாவைத்துரத்திவிட்டார் இராயர்பெண்சாதி நடந்தவர்த்தமானங்களைக்கேட்டு ஐயுற்று இராயரைப்பார்த்து நானொருமூடனைக் குறித்து சிபார்சுசெய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று மிகுந்தவணக்கத்துடன் கேட்டுக்கொண்டாள்.

எ-வது, குடப்பூசினிக்காயும்நடக்கீரையும்குழிகிணறுமனுப்பியது

டில்லிபாட்சாவானவன் இராயரிடத்திலிருக்கிற அப்பாசியினுடைய உபாயதந்திரங்களையும் யுக்திவிசேஷங்களையும் புத்திநுட்பத்தையுங் கேள்விப்பட்டதைப் பரிசோதிக்கும்படியாகக் குடப்பூசினிக்காயும் நடக்கீரையும் குழிக்கிணறும் சீக்கிரத்தி லனுப்பவேண்டுமென்று இராயருக்கெழுதியனுப்பினான் அந்த நிருபம் இராயரிடத்திற்குவந்தது அவர்படித்துப்பார்த்து அப்பாசிக்குக்காண்பித்தார் அப்பாசி அப்படியேசெய்வோமென்று சொல்லிவிட்டுப்போய் ஒரு பூசினிப்பிஞ்சைக் குடத்துக்குள்ளேவிட்டுவளர்த்து அது அக்குடத்துக்குள்ளேதான் பழுக்கும்படிசெய்து ஒரு வண்டியின்மேல் முழவுயரம் மண்பரப்பி பாத்திகட்டி கீரையை விதைத்து அக்குடத்தையும் வண்டியையும் இராயரிடத்திற் கொண்டுபோய்க்காட்டி இதுகளை பாட்சாவுக்கனுப்பி இத்தேசத்திலிருக்கிற குழிக்கிணறு அத்தேசத்திற்குப் புதிதாகையால் அத்தேசத்துக்கிணறுகளிலே ஒன்றையனுப்பினால் பிணைபோடுகிறோமென்றெழுதியனுப்பச்சொன்னான் இராயர் சந்தோஷப்பட்டு அப்படியே செய்தார் பாட்சா இந்த ஓலையையும் பூசினிக்குடத்தையும் கீரைவண்டியையும்பார்த்து மிகவும் அப்பாசியின் வல்லமையை மெச்சிக்கொண்டான்.

அ-வது, விக்கிரகங்களைப் பரிட்சித்தது.

டில்லிபாட்சாமறுபடியும் அப்பாசிவல்லமையை அறிதற்பொருட்டு ஒருமாதிரியான மூன்று விக்கிரகங்களையும் இதுகளிலே எதைப்போலிருக்கிறவன் உத்தமன் எதைப்போலிருக்கிறவன் மத்திமன் எதைப்போலிருக்கிறவன் அதமனென்று பரிட்சித்தந்தவிக்கிரகங்களி லெழுதியனுப்புகிறதென்று ஒரு காகிதத்தையும் இராயருக்கனுப்பினான் அந்த நிருபத்தை வாசித்துப்பார்த்து சபையோருக்கெல்லாம் அந்த விக்கிரகங்களைக்காண்பித்து குறைதிசய

ங்களைச் சோதிக்கச்சொன்னார் மூன்றும் ஒரேமாதிரியாகவிருக்கிறபடியால் அதுகளிற்பேதங்கண்டுபிடிக்காமல் மயங்கினார்கள் அப்பாஜி அந்த விக்கிரகங்களுடைய கரசரணாதி அவயவங்களையெல்லாம் உற்றுப்பார்த்து காதுகளிலே சிறிது துளையிருந்ததையறிந்து மெல்லியயிர்க்கை அத்துளையில் நுழைத்து பார்க்குமளவில் ஒன்றுக்குவாய்வழியாகப்புறப்பட்டது வேறொன்றுக்கு வெளிப்படாமல் உள்ளேபோய் விட்டதைப்போலக் கேட்டசமாசாரத்தையுள்ளடக்கினவன் உத்தமனென்றும் மற்றொருகாதின் வழியாகச் செலுத்துகிறவன் மத்திமனென்றும் வாயின்வழியாகப் புறப்பட்டதைப்போலத் தான் கேட்ட சங்கதியை யடக்காமல் வெளியே கொட்டுகிறவன் அதமனென்றும் நிச்சயந்தந்தபடியே அந்தப்பதுமைகளின்மேலே எழுதியனுப்பிவிடச்சொன்னான் இராயர் அதிகசந்தோஷத்தையடைந்துபாட்சாவினிடத்திற்கனுப்பினார் இதைப்பார்த்து பாட்சா அப்பாஜியைக்குறித்து சந்தோஷித்தான்.

௯-வது, பாட்சாவினுடைய தாசியைவென்றது.

டில்லிபாட்சாவானவன் மறுபடியும் அப்பாஜி சாமார்த்தியத்தைப் பரீட்சிக்கும்பொருட்டாகப் பாதசங்கீதங்களிலே கெட்டிக்காரியாகிய ஒருதாசியையழைத்து அவளுக்குவேண்டியதிரவியங்கொடுத்து நீர் இராயர்சபைக்குப்போய் இன்னவிதமான அவமானஞ்செய்துவாவென்றனுப்பினான் அவளப்படியே சம்மதித்து இராயர் சபைக்குவந்து சபையாருக்கும் இராயருக்கும் அநேகவிதமான நாட்டியங்களைச்செய்து அநேகவிதமான நடனங்களையும் செய்து அநேகவிதமான கீர்த்தனைகளைப்பாடினாள் இராயருக்கு அவள்மேலே அதிக விசுவாசம்பிறந்தது உனக்கு வேண்டுவதைக் கேள் யாதொருதடையுமில்லாமல உனக்குக்கொடுப்பேனென்றார் அதைக்கேட்டு சத்தியபூமியாகிய என்னாண்டவரே எனக்குமற்றொன்றும்வேண்டுவதில்லை உங்கள் சிம்மாசனத்தின்மேலே ஒருதரமலபாதைசெய்யும்படியாக ஒருவர்மாத்திரமனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றுகேட்டாள் இராயர் அந்தசொல்லைக்கேட்டு மிகவும் விசனமடைந்து நீ கேட்டவரத்தைக்கொடுத்தேன் நாளைக்கு அந்தப்படியேசெய்யென்றவளையனுப்பிவித்து அப்பாஜியையழைப்பித்து நடந்தசங்கதியைச்சொன்னார் அப்பாஜி நீங்களிதற்கஞ்சவேண்டாம் நான் உபாயஞ்செய்து அந்ததாசியைத் துரத்திவிடுகிறேனென்றும் நாளையுதயத்திற்கு அந்ததாசிவந்தவுடனே அவளைப்பார்த்து நீ இந்தசிம்மாதனத்தின்மேலே இராயர் உத்திரவுகொடுத்தபடி மலபாதைமாத்திரஞ்செய்யவேணும் சலபாதைசெய்வாயேயானால் உனக்குச்சிரச்சேதம் வருமென்றுசொன்னான் அப்பாஜிசொன்னபடிசெய்வது முடியாதகாரியமாயிருக்கிறபடியால் அவள்வெட்கி அவமானப்பட்டுபோய் விட்டாள் இராயரதைக்கேட்டு அளவற்ற சந்தோஷத்தையடைந்தார்.

## ௰-வது, பாட்சாவின் மந்திரியை வென்றது

ஒரு முரட்டுத்துலுக்கச்சேவகன் மழைக்காக ஒருவீட்டுத்திண்ணையிலுட்கார்ந்தான் அவன்பக்கத்திலே ஒரு க்ஷயரோகிவந்து டகார்ந்துதிரும்பினான் அந்தமுரடன் கோபத்துடனே கத்தியையுருவிக்கொண்டு அந்தநோயாளியை ஓரேவெட்டாகத்துண்டித்தான் அதைக்கண்டு சமீபத்திலிருந்த எல்லோருங் கூடிப்பிடித்துக்கொண்டுபோய் இராயரிடத்தில் ஒப்புவித்தார்கள் இராயரிவனை ஏன்வெட்டினாயென்றுகேட்டார் அவனைநான் திரும்பாதேயென்றுசொன்னேன் என்பேச்சைத்தள்ளித்திரும்பினான் அதனாலேவெட்டிப்போட்டேனென்றான் இராயரிந்தமூடத்தனமானபேச்சைக்கேட்டுசிறித்து அப்பாஜியைப்பார்த்து இவனுக்கென்னதண்டனைவிதிக்கலாமென்றுகேட்டார் இவனை ஒன்றுஞ்செய்யாமற் காவலிலேவைத்து நாள்தோறும் இரண்டுசேர் மாமிசமும் ஒருசேர்நெய்யும் அதற்குத்தக்க சாமான்களுங்கொடுத்துச்சாப்பிட்டு கொழுப்பேறும்படி செய்துவந்தால் நலலதருணத்திற் குதவுவானென்றுசொன்னான் அப்படிசெய்துக்கொண்டு வருகிறகாலத்தில் ஒருநாள்பாட்சாவானவன் தன்னுடைய மந்திரிகளை நோக்கி மதியூகியாகிய அப்பாஜியினுடைய வல்லமையினாலே இராயர் நமக்குக்கீழ்படிந்துநடந்துபகுதிகட்டாமலிருக்கிறான் அவனைஜெயிப்பதற்கு ஆருக்காவது வல்லமையுண்டாயிருந்தால் சொல்லுங்களென்றுகேட்க அவர்களில் ஒருவன் நான்செயித்து வருகிறேனென்றுசொல்ல அவனோடே தன்னுடைய திரளானசேனைகளைக்கூட்டி இராயரைசெயித்துவரும்படியனுப்பினான் இராயருடையபட்டணத்திற்குச்சமீபத்தில்வந்திறங்கி தான்வந்தசேதியைத் தூதர்களாலே இராயருக்குத்தெரிவித்தான் அப்போது இராயர் தம்மருகிலிருந்த அப்பாஜியைப்பார்த்து இவன்ராட்சதனைப்போல மகாதுஷ்டனாகவும் மிகுந்தவுபாயக்காரனாகவும் அதிகசேனைகளோடு கூடிவந்திருக்கிறானே இப்படிப்பட்டவிபரீதம் ஒருநாளுமில்லையே இதற்கென்னசெய்யலாமென்றுகேட்டார் அதற்கப்பாஜி முன்னாலே கொழுப்பேறவைத்திருந்த முரட்டுத்துலுக்கனையழைத்து நானெவ்வளவு இப்பஞ்சையின்மேலே இப்படியாகத் தண்டெடுத்துக் கொண்டுவரலாமா நான்பகுதிபணத்தைச் செலுத்திப்போடுகிறேனென்று இராயரைக்கொண்டு சமாதானமானகடிதம் எழுதிவைத்து அந்த முரடன் கையில் கொடுத்து பாட்சாவின் மந்திரியிடத்திற்கனுப்பினான் அவனந்த சமாதான கடிதத்தைக் கையிற்பிடித்துக்கொண்டுபோய் மந்திரிகையில்கொடுத்தான் அதைமந்திரிவாங்கிப்படித்துப்பார்த்து எவ்வளவுஞ்சவுந்தரியமில்லாத இந்தப்பஞ்சையின்மேலே தண்டெடுத்து வந்தோமென்று இராயரை யிகழ்ந்து காரியுமிழ்ந்தான் அந்தமுரட்டுத்துலுக்கன் தன்னைநிந்தித்துக் காரியுமிழ்ந்தானென் றெண்ணிகொண்டு தன் கத்தியினாலே மந்திரியை இரண்டாகவெட்டிப்போட்டான் அவனருகிலிருந்தவன் அ

ந்தமுரடனை வெட்டிப்போட்டான் மந்திரியிறந்துபோகவே தண்டு முறிந்து ஓடிப்போய்விட்டது இராயர் இந்தச் சமாச்சாரத்தையறிந்து அப்பாஜியினுடைய புத்தியை புகழ்ந்துகொண்டான்.

௰௧-வது, அப்பாஜியை இராயர் மீட்டுக்கொண்டது.

அந்த பாட்சாவானவன் அப்பாஜி துணையாயிருக்கிறவரைக்கும் இராயனைசண்டையிலேவெல்லக்கூடாது ஆகையால் மோசஞ்செய்து வெல்லவேண்டுமென்றுநினைத்துவிலையுயர்ந்த ஆயிரங்குதிரைகளுடனே ஆயிரத்தெட்டு சேவகர்கள் ஆயுதங்கள் மறைத்துக்கொண்டு அக்குதிரைகளை விற்கிறவர்களைப்போலபோய் மோசஞ்செய்து இராயனைப்பிடித்துக்கொண்டுவரும்படியனுப்பினான் அவர்கள் அதைக்கொண்டுபோய் இராயர்பட்டணத்துக்குக் காதவழிதூரத்திலிறங்கி இராயருக்குச்சமாச்சாரம் அறிவித்தார்கள் இராயர் ஒருநாள்சாயங்காலம் சிலபேர் குதிரைபரீட்சைக்காரரை இட்டுக்கொண்டுவந்து குதிரைகளைப்பார்த்து இந்தக்குதிரைகள் என்னவிலையென்றார் ஒவ்வொரு குதிரை ஆயிரவராகன் எல்லாம் ஒருமாதிரிநடையாகையால் ஒன்றிலேதான் நீங்கள் பரீட்சைபண்ணவேணுமானால் ஒருகுதிரையின்மேலேறிக்கொண்டு சவாரிபண்ணுங்கள மறுகுதிரைகளெல்லாம் அதற்குச்சரியாகவிட்டுக்கொண்டுவருகிறோம் பாருங்களென்று அப்படியே ஒருகுதிரையின்மேலேறிக்கொண்டு நாலுகாதவழிபோனபின்பு இராயனை ஒருபல்லக்குள்ளே எடுத்துப்போட்டுக்கொண்டு பாட்சாவினிடத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள் அப்பாஜி அதைக்கேள்விப்பட்டு அதிகவிசனத்தையடைந்து இதற்கென்னசெய்வோமென்று ஒருவுபாயந்தனக்குள்ளே யோசித்தான் பட்டணத்துக்குள்ளேபோய் நானே அப்பாஜி என்னிராயனைவிட்டுக்கொண்டு பாட்சாவைப்பிடித்துக்கொண்டுபோக வந்திருக்கிறேனென்று எல்லோரும் கேட்கும்படியாகச்சொல்லி ஓமென்றுகூவியெழுப்பி குதித்துக்கொண்டுதிரியத்தொடங்கினான் இப்படியேபாட்சாவின்சபைக்குமுன்னேயும் அரண்மனைக்குப்பின்னேயும் சொல்லிக்கொண்டு திரிகையில் ஒருநாள் பாட்சாவானவன்பார்த்து இவனுண்மையாகவே பயித்தியக்காரனோ இதைப்பரீட்சிக்கவேண்டுமென்கிறதாகச் சேவகர்சிலரை இவனெங்கேசாப்பிடுகிறானென்று அவனறியாமலவன் பின்னேபோய்ச்சோதித்துவாருங்களென்றனுப்பினான் வேஷதாரன் இராத்திரிபத்துநாழிகைக்குமேல்பிச்சையெடுத்து அரிசியும் ஒரு பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு சுடுகாட்டுக்குப்போய் ஓரடுப்புவைத்துபிணம்வேகிறகொள்ளியினாலே சோறுசமைத்துக்கொண்டிருக்கும்போது கோட்டுவரக்கண்டு ஏந்தம்மைநிதி ஆளிப்புப்பட்டது என்கிறவாக்கியப்பிரகாரம் வேவுகாரர்கள்வந்து இருப்பார்களென்று புத்தியினால்தெரிந்து அங்கேயுமப்படியேகூவிச் சோற்றுப்பாத்திரத்தையுடைத்துவிட்டு ஓடிப்போனான் அச்சேவகர்க

ள்போய் பாட்சாவுக்குத்தெரிவிக்கப் பயித்தியக்காரனென்றே நி
ச்சயித்துக்கொண்டான பின்பு அப்பாஜி ஒருபெரியகப்பலின்மே
லே சிலவிலையுயர்ந்த இரத்தினங்களை ஏற்றிக்கொண்டுவருகிறது
போலக்கொண்டுவரும்படி எழுதியனுப்பினான் இப்படியேகொண்
டுவந்து கப்பலில்மீந்தவர்கள் சிலரத்தினங்களை எடுத்துக்கொண்
டுவந்து பாட்சாவிடத்திற்குப்போய்காண்பித்தார்கள் பாட்சா இ
ரத்தினபரீட்சைக்காரரைக்கொண்டு ரத்தினங்களைவிலைமதிக்க இ
ராயரொருத்தருக்கேதகுமேயல்லாமல்மற்றவர்களுக்குத் தகுமோ
வென்றதை பாட்சாகேட்டு உங்களிடத்திலின்னுமிருக்கின்ற இர
த்தினங்களையெல்லாம் கொண்டுவாருங்களென்றான் அதற்கு வர்
த்தகர்நாங்கள் விஸ்தாரமாக ரத்தினங்கள்கொண்டு வந்திருக்கிற
படியால் நீங்கள் அங்கேவந்து பார்த்து உங்களுக்கு வேண்டியது
களை எடுத்துக்கொண்டு வரலாமென்றார்கள் அப்படியே ஆகட்டு
மென்றுபாட்சா இராயரையும் இன்னுஞ்சிலரத்தினபரீட்சைக்கா
ரரையுமிட்டுக்கொண்டு கப்பலுக்குப்போனார்கள் பயித்தியக்கார
னாகிய அப்பாஜிகூடப்போய் அங்கேயுமப்படியே கூவிக்கொண்டி
ருந்தான் அந்தருணத்தில் கப்பல்காரர்கள் லங்கரைத்தூக்கிப்பா
யைவிரித்துப்போட்டார்கள் கப்பல் இராயர்சீமையில்வந்து சேர்
ந்தது பாட்சாவை இராயாரண்மனைக்கு இட்டுக்கொண்டுபோய்
வெகு மரியாதைகள்செய்து சிலநாள் வைத்துக்கொண்டிருந்தார்
பாட்சா தனக்குச்செய்த மோசத்தைபற்றி அப்பாஜியுக்திகளை
மெச்சிக்கொண்டு இராயரைப்பார்த்து இனிமேலுன்மேஜாலிக்குவ
ருகிறதில்லையென்று உத்திரவுகொடுத்து விட்டுப்போய்விட்டான்
இராயர் அப்பாஜியைத்தழுவிக்கொண்டு நீயே யென்பங்கு தெய்
வமென்று கொண்டாடினார்.

## ௰௨-வது, கற்றறிமேழைமுதலான பொருள்களைச்சம்பாதித்தது.

ஒருநாள் இராயர் தமதுமந்திரியாகிய அப்பாஜியை யழைத்
து கற்றறிமோழையை நட்புசேவகன்தாதிபிற்சாதியிற்றார் ஊர்தி
ரிகின்றகாய்மணிதரிற்கழுதை சிம்மாசனமேறுகின்றதடா இவ்வே
ழும் உன்னாலே சம்பாதிக்கக் கூடுமாவென்றுகேட்டார் அதற்கப்
பாஜிசம்மதித்து உத்திரவுபெற்றுக்கொண்டு வேறொருபட்டணத்
தில ஒருபண்டிதரிடத்திலேபோய் நாலாயிரம்வராகன்கொடுத்து
நான்கேட்குஞ்சமயத்தில கொடுவென்றுசொல்லிப் பின்பு ஒருதா
சியிடத்திற்குப்போய் ஒருராத்திரிபடுக்கைக்கு நீயென்னகேட்பா
யென்றுகேட்க அதற்குத்தாசி ஆயிரம்வராகன் கொடுக்கவேண்டு
மென்றாள் அதற்கப்பாஜிசம்மதித்து அப்படியேகொடுத்து படுக்
கைவீட்டுக்குப்போகும்போது அவளுடனேசொல்லுகிறான் நானு
ன்னைக் கூடினவுடனே இந்தக் கட்டாரியினாலே என்னைக் குத்திப்
போடென்றுசொன்னான் அதற்குத்தாசி ஆயிரவராகனை வாங்கிக்
கொண்டு என்னுடையதிரேகத்தை இந்தராத்திரிக்கு உமக்குசுவா

தினப்படுத்தினதினலே உம்முடைய இஷ்டப்படி செய்யலாமென்
ருள் அப்பாஜி எனக்கிஷ்டமானநாளில வருவேனென்று சொல்லி
அவளிடத்திலிருக்கும் நாய்க்குத் தன்கையிலிருந்த பலகாரத்தில்
கொஞ்சம்போட்டு அப்பால்ராஜவீதியில்போகும்போது அந்தப்
பட்டணத்துராசாவின் குமாரத்தி அப்பாஜியைக்கண்டு அவனதி
ரூபவானகையால் அப்பொழுதே தன்தகப்பனிடத்திற்போய் எ
னக்கிஷ்டமானபுருஷனை நான் கலியாணம் பண்ணிக்கொள்ள நீர்
சம்மதித்தபடி இப்போது நான்கண்ட புருஷனுக்கு என்னைக்கலி
யாணம்பண்ணிக்கொடுமென்றுசொல்லத் தகப்பனப்படியே அப்
பாஜிக்குத் தன்குமாரத்தியைக்கலியாணம்பண்ணிக்கொடுத்தான்
இராத்திரிபடுக்கைக்குப்போனபோது பெண்சாதி உன்னேடுகூடி
யவுடனே இந்தக்கட்டாரியினல் உன்னைக்குத்திப்போடுவேனென்
றுசொல்ல கூகூவென்றுபயந்துகூவினள் அவள் தகப்பனகிய ரா
சா அந்தக்கூச்சலைக்கேட்டுத் தன் குமாரத்தியினிடத்திற்குவந்து
என்னவென்றுவிசாரிக்க அவள் தன்புருஷனகிய அப்பாஜி சொ
ன்னதை சொன்னள் அப்பொழுது ராசா மந்திரியுடனே இதற்
கென்னசெய்யலாமென்றன் மந்திரி இவனைச்சிரச்சேதம் பண்ண
வேணுமென்றன் அரசன் அப்படியே கொலைசெய்வோருக்கு உ
த்திரவுகொடுத்தான் பின்பவர்கள் கட்டியிழுத்துக்கொண்டுபோ
கையில் அச்சேவகருக்கு அனேகவுபசாரஞ்சொல்லி இந்த ராசா
வுடனே ஒருபேச்சுருசுவிலேபேசவேணும் அதற்குசாவகாசங்கொ
டுங்களென்றுகேட்டான் கூடாதென்று இழுத்துக்கொண்டு போ
னர் பண்டிதன் வீட்டண்டையிலேபோகும்போது அவனையழை
த்து என்நாலாயிரம் வராகனையும் கொடுவென்றுகேட்க இவனுக்
குசிரசாக்கினைவந்ததையறிந்து உன்னைக்கண்டவனர்போவென்ற
ன் அப்புறம் தாசிவீட்டண்டையிலேபோகும்போது அங்கிருந்த
நாய் அப்பாஜியைப்பார்த்து வீட்டுக்குள்ளே நுழைந்து தாசிகா
லைச்சுற்றிக்கூவி தெருவிலழைத்துக்கொண்டுவந்து அந்ததாசி அ
ப்பாஜியைப்பார்த்து நடந்தவர்த்தமானஙகளை விசாரித்துந்தசேவ
கர்க்கு இரண்டுநாழிகைவரைக்குங் கொல்லாமல் வைத்திருககும்
படியாய் பேருக்கு நூறுவராகன் கொடுத்து இராசாவினிடத்திற்
குப்போய் நீஙகள்கொல்ல உத்திரவுகொடுத்தவனையழைப்பித்து
அவன்வாய்பிறப்பு விசாரித்துசெய்தால் நலலதென்றள் அபபடி
யே ராசா அவனையழைபபித்து விசாரிக்குமளவில இராயர் அழி
மையான சிலபதார்த்தஙகளைச் சம்பாதிக்கும்படியனுபபினர் என்
அதிஷ்டவசனத்தினலே உமதுபட்டணத்திலே அவைகளெல்லா
ங்கிடைத்ததுகள் ஆகையால இந்தச்சமாச்சாரத்தை இராயரவர்
களுக்கும் அறிவிக்க உத்திரவுகொடுமென்றுகேட்டான் அவ்வரச
ன் இராயரால் அனுபபபபட்டவனென்கிறபடியால் அஞ்சி அப
பாசிக்கு வெகுமரியாதைசெய்து அனுபபினன அபபாஜி இராய
ரிடத்திற்குபபோய் நடந்தசஙகதியெல்லாம ஆதியந்தமாகச் சொ

ல் அவ்வரசன்முதலாகிய ஏழுபேரையு மழைப்பித்து இப்பண்டிதன் சகலமுபகற்றிருந்தும் என்கையில்வாங்கினபணத்தை சமயம்பார்த்து மோசஞ்செய்தபடியால் கற்றறிமோழையாகும் இந்ததாசிவீட்டுநாய் என்கையிலிருந்து ஒருதரங்கொடுத்த பலகாரந்தின்றபடியால் கைநட்புமறவாமல் உதவிசெய்தபடியால் கைநட்புச்சேவகனாகும் இந்தத்தாசி குலஸ்திரீயில்லாதிருந்து ஆபத்திலே என்தலையைக்காத்தபடியால் தாசியிற்சாதிபாகும் இவ்வரசன்மகள் குலஸ்திரீயாகவிருந்தும் தலைக்கு ஆக்கினைநேரும்படிச்செய்தபடியால்சாதியிற்றாசியாகும் இச்சேவகர்கள் நானென்னசொல்லியுங்கேளாமல் லஞ்சம்வாங்கிவிட்டபடியால் ஊர்திரிகிறநாயாவார் இபமாதிரிமனிதனாயிருந்தும என்வாய்ப்பிறப்பைக்கேளாமல் கொலைச்சொன்னபடியால் மனிதரிற்கழுதையாகும் இவ்வரசன் பகுத்தரிவில்லாமல் சிம்மாசனத்தின்மேலே ஏறியிருக்கிறபடியால் சிம்மாசனமேறுகிற கிடாவாகுமென்று சொன்னான் இதுகளைக்கேட்டு இராயர் சந்தோஷமடைந்தார்.

௫௩-வது, மனக்கவலை பலக்குறைச்சலென்பது.

இராயருடைய பட்டணத்தில் தாயார் யாதொருகுறைவுமில்லாமல் போஷிக்கப்பட்டுக்கொண்டு யாதொருகவலையுமில்லாமலிருந்த ஒருவாலிபனானவன் தனக்குமுன்வருகிற யானைகளுடையகொம்புகளைத் தன்னுடையகைகளினால்பிடித்து பத்துமார்தூரம்பின்னிட்டுப்போகும்படி தெட்டிவிட்டுப் போகிறதைப்பார்த்து இராயர் அப்பாஜி இவனிப்படிசெய்வதென்ன காரணம் இவ்வளவுவல்லமை இச்சிறுபயலுக்கு எப்படியிருக்கலாமென்றுகேட்கக்குடும்பக்கவலையில்லாததால் அவ்வளவுபலத்துடனிருக்கிறானென்று சொன்னான் பின்பு அவ்விருவரும் அந்தப்பிள்ளையாண்டானுடையதாயாரையழைப்பித்து உன்னுடையபிள்ளை சமுசாரகாரியங்களை நிர்வாகம்பண்ணிக்கொண்டு வருகிறானாவென்றுகேட்டார்கள் அவள் எனக்கு ஏகபுத்திரனாகையால் அவனுக்குயாதொருகவலையும்வையாமல் போஷித்துக்கொண்டுவருகிறேனென்றாள் அப்படிசெய்வதுநல்லதல்ல அதுமுன்னாள் எதுவாயிருந்தாலும் அவனுக்குகொஞ்சங்கொஞ்சமாகக் கவலையுண்டாக்கவேணும் இன்றைக்கவனுக்கு சாதப்போடும் நாளைக்கு உப்புயில்லை கொஞ்சம் உப்பு சம்பாதித்துக்கொண்டுவாவென்றுகேளென்றுசொல்லியனுப்பினான் அவளப்படியே தன்குமாரனுக்குச் சொன்னாள் அதுசொன்னமுதற்கொண்டு இதைநானெப்படி சம்பாதிப்பேனென்று பிள்ளையாண்டான் அதிககவலைகொண்டிருந்தான் மறுநாள் அந்த வாலிபன்தெருவிலேபோம்போது ஒருயானை அவனுக்கெதிரில்வரும்படியாகச்செய்ய அவன்தன் கொம்பைப்பற்றிதெட்ட அது அவனை தும்பிக்கையினாலே தூக்கிப்போட்டதை அப்பாஜி இராயருக்குக் காண்பித்து அவன்தாயையழைத்து நடந்தசங்கதிகளைச்சொல்லி

மனக்கவலையால் பலங்குறையுமென்றறிவித்தான் அப்பாஜியினுடைய யுக்தியைக்குறித்து இராயர் மிகவுமாச்சரியமடைந்தார்.

௰௪-வது, குறிப்பிற்சொன்னவைகளை வெளிப்படுத்தியது.

இராயரும் அப்பாஜியும் ஓர்வழியில் நடந்துகொண்டிருக்கும்போது ஒருவன் உழுதுக்கொண்டிருந்த கழனியைப்பார்த்துமூன்று கன்னியாஸ்திரீகளிலொருத்தி இது முகத்துக்காமென்றாள் மற்றொருத்தி இதுவாய்க்காமென்றாள் வேறொருத்தி இதுபிள்ளைக்காமென்றாள் இவர்களிப்படி சொன்னதுகளில் பலனென்னவென்று அப்பாஜி முகத்துக்கமென்றது மஞ்சள்பயிரிடுவதற்கான நிலமென்றும் வாய்க்காமென்றது வெற்றிலைக்கொடி நடுவதற்கான நிலமென்றும் பிள்ளைக்காமென்றது தென்னம்பிள்ளை வைப்பதற்கான நிலமென்றும் சொன்னதுகளாமென்றுசொன்னான் அதைக்கேட்டு இராயர் அந்த ஸ்திரீகள் மூன்றுபேரையுமழைத்து அவர்கள்வாய்ப்பேச்சையும் விசாரித்து மிகவும் மனமகிழ்ந்தார்.

௰௫-வது, தனக்குள்ளது உலகத்திற்குமுண்டு தனக்கில்லாதது உலகத்திற்குமில்லையென்றது.

ஒருநாளிராயர் தனக்குக்ஷவரஞ்செய்துக்கொண்டிருக்கிற அம்பட்டனைப்பார்த்து இந்தப்பட்டணத்திலே எல்லாருஞ்சவுக்கியமாகயிருக்கிறார்களாவென்றுகேட்டதற்கு அவனெவ்வளவுபெரியவர்களாயிருக்கிறவர்களுக்குள்ளேயும் எலுமிச்சங்காயளவுபொன்னுக்குக் குறைச்சலுள்ளவர்கள் ஒருவருமில்லையென்றான் சமீபத்திலிருந்த அப்பாஜியைப்பார்க்க அப்பாஜி சற்றுநேரம்யோசித்துப்பார்த்து இராயருக்கு அம்பட்டன்மறுதினம் க்ஷவரம்செய்யும்போது தன்னுடைய ஊழியக்காரனொருவனைவிட்டு அவனடைப்பத்தைச்சோதித்து அதிலிருந்த எலுமிச்சங்காயளவுபொன்னையெடுத்துவிட்டு அவன்போனபின்பு இராயருக்குக் காண்பித்து இதுமேலதானவன் தனக்குள்ளது உலகத்திற்குமுண்டு தனக்கில்லாதது உலகத்துக்குமில்லையென்று நினைத்தபடியால் சொன்னானென்றதைப்பார்த்து பத்திரப்படுத்திவைத்து இன்னொருக்ஷவரத்திற்கு அவனை அப்போகேட்டதுபோல்கேட்டால் அப்போதவன்சொல்லுகிறசங்கதியுந்தெரியலாமென்றான் இராயரப்படியே அவனைமறுக்ஷவரத்திற்கேட்டபோது எப்படிப்பட்டமகாராசருக்குள்ளேயும்மேல்பட்டவேயல்லாமல் எலுமிச்சங்காயளவுபொன்னுடையார்கள் ஒருவருமில்லையென்றான் பின்புராயர் அப்பாஜியைப்பார்த்து உன்னைப்போலும் விவேகமுள்ளமந்திரி எந்தத்தேசத்திலுங் கிடைப்பதுமிகவுமரிதென்றுமெச்சி அம்பட்டனுக்கு அவன்பொன்னைக்கொடுத்துவிட்டார்கள்

௰௬-வது, குற்றமுடையவர்களைக்காட்டியது.

வடதேசத்திலே பத்துவயதுமுதலாக முப்பதுவயதுவரைக்கும் தர்க்கசாஸ்திரமொன்றையேபடித்த ஒருதர்க்கனும் வியாகரணமொன்றையேபடித்த ஒருவியாகர்ணியும் பரதசாஸ்திரமொன்றையே அப்பியாசித்தஒருபாடகனும் சோதிடசாஸ்திரமொன்றை

சாந்திரம்போய் பணம்சம்பாதித்துக் கலியாணம்பண்ணிக்கொள்ள ஆலோசிக்கும்போதுவேலூரில்இராயர்வித்வான்களுக்குவேண்டிய படியேகொடுக்கிறாரென்று அவரைக்காணும்படியாக அதுவரைக்கும்துணையாகவந்தவர்களை யனுப்பிவிட்டு ராயருடைய சபைக்குபோயவனவன் தங்கள்வித்தைகளைகாண்பித்தார்கள் ராயரப்பாஜியைப் பார்த்திவர்கள்மிகவும்கெட்டிக்கார்களென்று புகழ்ந்தாரதற்கப்பாஜிஇவர்கள் வித்தையிலேஎவ்வளவுகெட்டிக்காரர்க ளவ்வளவுதற்காரியங்களில் மூடர்களாயிருக்கலாமெனநினைக்கிறேனென்றானிராயார்தமூடத்தனத்தை எனக்குகாட்டவேணுமென்றுகேட்க அதற்கப்பாஜி அப்படியே காண்பிக்கிறேனின்றைக்கவர்களைசாப்பிட்டுவரும்படியனுப்பிவையுங்களென்ன அப்படியேயவர்களை யனுப்பிவிட்டார் பின்பு அப்பாசி அவர்களையறியாமல் நடக்கிறகாரியத்தைப்பார்த்துவரச்சொல்லிசிலசேவகரை அனுப்பினான் அவ்வைந்துபேருக்குள்ளே தார்க்கிகன்நெய்க்குப்போய்ஒருதொன்னையிலே வாங்கிக்கொண்டுவரும்போது கையிலிருக்கிறநெய் தொன்னையைப்பார்த்து நெய்க்கு தொன்னையாதாரமோ தொன்னைக்கு நெய்யாதாரமோவென்று தர்க்கயுத்திகளைக்கொண்டுநெடுநேரம்யோசித்துப்பார்த்துச்சந்தேகந்தீராமையால் தொன்னையைக்கவிழ்க்கநெய்முழுதும்ஒழுகிப்போனதைக்கண்டு நெய்க்கு தொன்னையே ஆதாரமென்றுநிச்சயித்துக்கொண்டுவந்துசேர்ந்தான்வியாகரணவித்வான் தயிர்வாங்கப்போய் ஒரிடைச்சிதயிரோவென்று கடைசிஓகாரத்தைப் பத்துமாத்திரையளவாகநீட்டிக்கூறுகிறதைக்கேட்டுஇந்தஇரண்டுமாத்திரையுள்ளஒகாரத்துக்குஅதிகமாத்திரையாகணத்திற்குவிரோதமாகஉச்சரிக்கின்றாய்பயித்தியக்காரியென்றுநெடுநேரம் அவளுடனேசண்டைபோட்டுக்கோபித்துக்கொண்டு தயிர்வாங்காமல்வந்தான்பாடகன்உலையில் அரிசியைக்கழுவிப்போட்டு அதுதளபளவென்றுகொதிக்கிறஓசையைக்கேட்டு அதற்குச்சரியாகதாளம்போட்டு அத்தாளத்துக்குஒத்துவராமையினால்கோபங்கொண்டுசோற்றுப்பானையையுடைத்துவிட்டான்சோதிடசாஸ்திரி இலைபறிக்கப்போய்பாதிமரத்திலேஏறும்போது கௌளிசொன்னதைக்கேட்டு ஏறுதற்கும் இறங்குதற்குந்தடையாயிருக்கிறதையறிந்துவெகுநேரமங்கேதானேயிருந்து பின்பு சும்மாவந்துவிட்டான் வைத்தியன்கறிகாய்வாங்கிக்கொண்டுவரப்போய்த்தன்னுடையவைத்தியநூற்படி அந்தக்கறிக்காய்களிருக்கின்றதோஷத்தையறிந்து அதுகளையெல்லாந்தள்ளிவிட்டுவெறுங்கையனாகவந்துவிட்டான் இந்தசமாச்சாரமெல்லாந்தானனுப்பியமனிதரால்அறிந்துஅப்பாஜி இராயரைக்கொண்டுசேவகரைவிட்டவ்வைந்துபேரையும்அழைப்பித்து விசாரிக்குமளவில்நடந்தசங்கதிகளையெல்லாம் அவரவர்கள் சொல்லக்கேட்டு இராயர் ஆச்சரியப்பட்டப்பாஜியைப் புகழ்ந்துகொண்டாடினார்.

## 17-வது குறிப்பாற்சொன்ன உவமானங்களை வெளிப்படுத்தியது.

ஒருநாளிராயர்வேட்டைக்குப்போனவிடத்திலேதமக்குவெயிலினாலுண்டாகியசிரமந்தீர ஒருகுளக்கரையி லுட்கார்ந்துக்கொண்டிருக்கும்போதுவழிப்போக்கர்மூன்றுபெண்களுக்குஒருத்திகாலுங்கழியுமொன்றடிஎன்றும் மற்றொருத்திஇறகுமிலையுமொன்றடிஎன்றும்பின்னொருத்தி வாயுங்கனியுமொன்றடிஎன்றும்பேசிக்கொண்டுபோனாரந்தமூன்றுபேர்சொன்னதுகளையும்இராயர்கேட்டுஅவைகளின்பொருளைநெடுநேரமாலோசித்து தமக்குதோன்றாமையினாலரண்மனைக்குவந்தபின்புசபையாரையெல்லாங்கேட்டுபார்த்தும்ஒருவருஞ்சொல்லமாட்டாமையால்அப்பாஜியை யழைப்பித்துமகாவாக்கியங்களுக்குத்தாபரியமென்னவென்றுகேட்டார்அவன்சற்றுநேரமாலோசித்துப்பார்த்தந்தபெண்கள்ஒருஆலமரத்திலிருந்தகிளியைநோக்கிப்பேசியதுகளாக்கும் காலுங்கழியுமென்றென்றது அக்கிளியின்காலையுமமரத்தின்கழியையும்சொல்லியதுபின்னும்இறகுமிலையுமொன்றென்றது அக்கிளியின் இறகையும்மரத்தினிலையையும்சொல்லியதென்றும வாயுங்கனியும்ஒன்றென்று அக்கிளியின் வாயையும்மரத்தின்கனியையுஞ் சொல்லியதென்றுவிசாரிக்க இராயர்கேட்டு சரிதானென்று சந்தோஷத்தையடைந்தார்.

## 18-வது மாறுவேஷத்தைவென்றது.

டில்லிபாட்சவானவன் யிராயரிடத்தி லிருக்கிற அப்பாஜியைநம்மிடத்திற்குஅனுப்பவேண்டுமென்றுராயருக்குகட்டளையனுப்பினார் அப்பாஜி பாட்சாவைக் காணுகிறதற்கு முன்னே பாட்சாபண்ணினஉபாயமாவதுமற்றொருவனுக்கும்தன்னைப்போல்வேஷம்போட்டுக்கொண்டுமந்திரிகள்வரிசையாய்உட்கார்ந்திருந்தார்பின்புஅப்பாஜியைவரச்சொல்லிவுத்திரவுபண்ணினார் காணப்போனஅப்பாஜிமந்திரிவரிசையிலிருந்த பாட்சாமுன்னேநின்றுகாணிக்கைவைத்துவணங்கிக்கொண்டான் பாட்சா அப்பாஜியைப் பார்த்து என்னைஎன்னவிதமா யறிந்தாயென்றார் ஆண்டவனே சபையிலிருக்கிறவர்களுடைய பார்வைகளெல்லாம் தங்கள் மேலேவிழுந்திருந்தபடியினாலே தெரிந்துக்கொண்டே னென்றான் பாட்சா அதைக்கேட்டு சந்தோஷப்பட்டு வெகுமதிசெய்தனுப்பிவிட்டார் பிறகுபாட்சாஇப்படிப்பட்டமந்திரி இராயருக்கிருக்கிறதினாலேதான்இராயர் மற்றவர்களைப்போலநமக்குப்பகுதிசட்டாம லிருக்கிறாரென்று தன்மந்திரிகளுடனே பேசிக்கொண்டார்.

இராயர் அப்பாஜிகதை முற்றிற்று.

அத்தியாயம் இரண்டுக்கு கதைகள்-40.

உ

கடவுள் துணை.

மூன்றாம் அத்தியாயம்.

# தென்னாலுராமன் கதை.

## முதலாவது ஆசியக்காரனாகிய இராயரைச்சேர்ந்தது.

வடதேசத்தில் தென்னாலு என்கிற ஊரிலே இராமனென்று ஒரு பிராமணப்பிள்ளை பிறந்திருந்தான் அவனை ஒருநாள் வீதியிலே கண்ட ஒரு சந்நியாசி இவனுடைய ரூபத்தையும் குணாதிசயத்தையுங்கண்டு ஒரு மந்திரத்தையுபதேசம்பண்ணி இந்தமந்திரத்தை மூன்றுகோடிதரம் ஒருஇராத்திரியிலே காளியம்மன்கோயில்போய் ஜெபித்தாயானால் காளியம்மன் ஆயிரமுகத்துடனுனக்குப் பிரத்தியட்சமாவாள் அப்பொழுது நீ அவளைக்கண்டு பயப்படாமல் இறந்துவேண்டிவரங்களைப்பெற்றுகொள்ளென்றார் இராமன் நல்ல வேளைபார்த்துக்கொண்டு தன்ஊர்புறத்தில் இருக்கிற காளிகோயிலுக்குள்ளே போய்விதிப்படி ஜெபம்பண்ணினான் பத்திரகாளியானவள் ஆயிரமுகம் இரண்டுகையுமாகப்பெரியரூபத்தையெடுத்துக்கொண்டு பிரசன்னமானாள் அப்போதுமிகுந்த தைரியமுடையவனாகி அந்தராமன் அவள்கோரத்தைப்பார்த்து அஞ்சாமல் நகைசெய்தான் காளியேண்டா நகைக்கிறாயென்றுகேட்டாள் கேட்டதற்கு ராமன் அம்மா எங்களுக்கொரு மூக்குக்கு இரண்டுகைகளிருந்தும் சலதோஷங்கண்டால் சிந்தவருத்தமாயிருக்கிறது ஆயிரமுகமிருக்கிறபடியால் ஒருவேளைசலதோஷங்கண்டால் இரண்டுகையினாலே இந்த ஆயிரமூக்குகளையும் எப்படி சிந்துவாயென்றான் அதற்குப்பத்திரகாளி அடா பையா நீ என்னைப்பார்த்து விகடம்பண்ணினபடியால் நீ இன்றுமுதல் விகடகவியாகப்போகக்கடவாயென்றாள் ஆ ஆ நல்லவரங்கொடுத்தாய் அப்படிப்பார்த்தாலும் விகடகவிதான் இப்படிப்பார்த்தாலும் விகடகவிதானென்றான் அதைக்கேட்டு இரக்கம்வந்து உன்னுடைய உபசாரனைக்கு இராஜசபை மெச்சும்படியான விகடகவியாயிருக்கக்கடவாயென்று மறைந்துபோய்விட்டாள் அதுமுதல் விகடம்பவசனம்பண்ணிக்கொண்டிருந்தான்.

## 2-வது ஆனைக்காலிலிடறுக்குத்தப்பித்துக்கொண்டது.

தென்னாலுராமன் ஒருநாள் ஆசியத்திலே வந்தகுற்றத்திற்கு இராயர்கோபஞ்செய்து அவனை யானைக்காலிலே யிடறும்படியாக உத்திரவுகொடுத்தார் சேவகர் அவனைக்கொண்டுபோய் ஊருக்குப்புறத்திலே மைதானவெளியிலே குழிவெட்டித் தலைதெரியும்படியாக புதைத்து தலையிடறும்படியாக யானைகொண்டுவருகிறதற்குப்போனார்கள் அந்தருணத்தில் கூன்வளைந்தவனொருவன் அந்தவழியாகப்போகும்போது ஏனையா புதைக்கப்பட்டிருக்கிறாயென்றுகேட்டான் அதற்குத்தென்னாலுராமன் எனக்குநெடுநாளாய்க்கூன்வளைந்திருந்தது அதுநிமித்தியம்

மிரும்படியாக ஒருவைத்தியன் என்னை இங்கே புதைத்துவந்தான் என
க்குகூன்நிமிர்ந்துபோச்சுது என்னைத்தோண்டிவெளியிலேபார்த்து
க்கொள்ளென்றான் இந்தப்படியேவண்ணான்செய்துபார்த்து கூனில்
லாமலிருக்கிறதைக்கண்டுஐயா எனக்குகூன்நிமிரும்படியாகப்புதை
க்கவேண்டுமென்றான் தென்னாலிராமன அவனைகுழியிலேவைத்துக
ழுத்தளவாகபுதைத்து மூட்டையையெடுத்துக்கொண்டுவந்து இரா
யரைக்கண்டான் என்டா ஆனையின் காலிலேஇடறும்படியாகசொன்
னேனே அதற்குதப்பிஎப்படிவந்தாயென்றுகேட்டான் எனக்குபதி
லாக வண்ணானை இடறும்படியாகசாக்கிரதைசெய்துவிட்டுநா
னவன் மூட்டையைவாங்கிக்கொண்டுவந்தேனென்றான் அதைக்கே
ட்டிஇராயர் நகைசெய்து அந்தக்குற்றத்தை மன்னித்துவிட்டார்

## 3-வது தலைவெட்டுக்குத் தப்பிக்கொண்டது.

மற்றொருநாள் தென்னாலிராமன் ஆசியத்திலேஇராயருக்கு அ
திககோபம்உண்டாகும்படியாய்பிரபலமான குற்றஞ்செய்தான் இ
ராயர்கண்டுஇரண்டு சேவகரையழைத்து அவர்வசம்பண்ணிஇவனை
விடாமற்கொண்டுபோய் வெட்டிப்போடுங்களென்றார் அப்படியே
யந்தச்சேவகர்கள அவனைத்தூக்கிகொண்டுபோய்வெட்டப்போகிற
சமயத்தில் அவர்களுக்குநல்லவார்த்தைகளைச்சொல்லிநீங்கள்எப்ப
டியும்வெட்டப்போகிறீர்களே நான்நல்லகதியடையும்படியாகஒரு
குளத்தில் இறங்கிமாறளவுசலத்திலே ஒருமுகூர்த்தக்காலம் கடவுளை
த்தியானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் அத்தருணத்தில்நீங்களிர
ண்டுபேரும்இரண்டுபக்கத்திலேயுமிருந்து ஒருவீச்சாகஎன்தலையை
வெட்டிப்போடுங்களென்றான் அதற்கவர்கள் உடன்பட்டபடியால்
அப்படியே ஒருகுளத்திலேஇறங்கியிருந்து அசப்பிலேஇம்மென்று
தண்ணீரிலேமூழ்கிவிட்டான் அவர்கள்விசையாகவீசினபடியால்ஒ
ருவர்கத்திஒருவர்மேல்பட்டு அச்சேவகரிருவரும்வெட்டுண்டார்க
ள் அதன்பின்பு தென்னாலிராமன் சரேலென்று இராயருக்கெதிரே
போய்நின்றான் இராயர் எப்படிவந்தாயென்றுகேட்டார் அதற்குத்
தென்னாலிராமன் அச்சேவகர்கள் ஒருவரால் ஒருவர்வெட்டுண்டு
போகும்படிசெய்து நான்தப்பிவந்தேனென்றான் அன்றைக்குமந்த
குற்றத்தைசமித்தார்.

## 4-வது தலைமறவாகத்திரிந்தது.

திரும்பிஒருநாள்தென்னாலிராமன் ஒருபொல்லாதகுற்றஞ்செ
ய்தபடியால்இராயர் அவனை யழைப்பித்து தென்னாலிராமா இன்று
முதலாகஎன்னெதிரேதலையைக்காட்டாமல்மறைவாகத்திரிந்தாயா
னால்பிழைப்பாய் அப்படிசெய்யாமற்போனால் தலைவெட்டுண்டுபோ
வாயென்றார் அதுகேட்டு தென்னாலிராமன தலையிலேசாலைகவிழ்த்
துக்கொண்டு சபைக்கெதிரே திரிந்துக்கொண்டிருந்தான் இராயர்
கண்டு அழைத்துஎன்னடா இந்தஆகாயத்தியஞ் செய்கிறாயென்று
கேட்டார் அதற்கவன்ஓஆண்டவனே நீங்கள்என்னை தலைமறவாகத்

திரியச்சொல்லி ஆக்யாபித்தபடியே திரிகிறேனென்றான் இராயர் சந்தோஷப்பட்டு அந்தத்தடையையும் பொறுத்தார்.

### 5-வது காவற்காரரையடிப்பித்தது.

ஒருநாள்தெலுங்குதேசத்திலிருந்து பாகவதவேஷக்காரர்வந்தபடியால்இராயர் அவர்க்கு ஆடும்படியாகஉத்திரவுகொடுத்து அவ்விடத்திலேதென்னாலிராமனைவரவொட்டாமல்இரண்டிடத்து காவற்காரருக்குத்திட்டம்பண்ணினார் தென்னாலிராமன்கூத்தாடுகிறசமயத்தில் முதற்காவற்காரனிடத்திற்போய்என்னைமாத்திரம் விட்டுவிடு எனக்குப்பதில்பாதிஉனக்குகொடுக்கிறேனென்று சம்மதப்படுத்திக்கொண்டுஇரண்டாங்காவற் காரனுக்கும்அப்படியேசொல்லி உள்ளேபோய் தான்மறைந்துக்கொண்டு மத்தியிலேகிருஷ்ண வேஷக்காரனையடித்தான் அவன்ஐயையோவென்று கூவியழுதான் சீஇவ்வளவுதானா இந்தகிருஷ்ணன் அனேகஇடைச்சிகள் மத்துக்களால் அனேக அடிபட்டான் என்ஒருத்தன்மத்திலே ஓரடி அடித்ததற்குபொருக்காமற்போனாயேயென்றான் இராயர்பார்த்து இவன் எப்படிஉள்ளே வந்தான் குறடாவினாலே இருபத்துநாலடி அடியென்று உத்திரவு பண்ணினார் அந்தப்படியே அடிக்கக்கொண்டுபோகும்போது இரண்டாங்காவற்காரனைபார்த்துஎனக்குவருவதிலேபாதிவாங்கிக்கொள்ளச் சம்மதித்திருக்கிறாயல்லவாவென்றான் அவன்மெய்தானென்றுசொன்னபடியாலெனக்குவந்தபிரயோசனம் இருபத்துநாலடி அதிலேபாதியாகிய 12 அடி நீபெட்டுக்கொள்ளென்று அடிப்பித்து முதற்காவற்காரனுக்கு 12 அடியும் அந்தப்படியே கிடைக்கும்படியாகச்செய்துதன்மேல்ஓரடியும்படாமல் தப்பித்துக்கொண்டு போய்விட்டான்

### 6-வது இராயரிடத்திலே பிரமாணஞ்செய்துக்கொண்டது

ஒருநாள்தென்னாலிராமன் எவ்வளவுகெட்டிக்காரனாயிருந்தாலும்என்னுடைய ஆசியத்தைப்பற்றிஇராயருக்கும அவர்குருவுக்கும் அடிக்கடிகோபம்வருவதால் ஒருவேளைபோலிராது பிராணச்சேதம்வந்தாலும்வரும் ஆகையால்முன்னதாக ஒருநம்பிக்கை அவரிடத்திலேபெறவேண்டுமென்றுநினைத்துஇராயர் குருவினிடத்திற்குப்போய் அந்தரங்கமான சிலபேச்சுகளைப்பேசி சிலநாள்சினேகஞ்செய்தபின்புவடதேசத்திலிருந்துஒருஸ்திரீயும்புருஷனும்என்வீட்டில்வந்திருக்கிறார்கள் அந்தஸ்திரீயினுடையஅழகை என்னென்று சொல்வேன் அவளுக்குச்சமானம்இந்தஐம்பத்தாறுதேசத்திலும் ஒத்தியிருப்பாளென்று நான்நினைக்கவில்லையென்றான் அதைக்கேட்டு குருவானவர்எனக்குஒருவேளைக்கு அப்படிப்பட்டவளைஇசையும்படிசெய்யமாட்டாயாவென்றார் அவள்புருஷன்எப்போதும்பிரியாமையாயிருப்பதினாலே வருத்தந்தான் ஆனால்நீங்கள் இன்றிராத்திரி 10-நாழிகைக்குமேல் ஸ்திரீவேஷந்தரித்துக்கொண்டுஎன்வீட்டுக்கு வந்தால்அவள்புருஷனுக்குசந்தேகந்தோன்றாமல் இணங்கும்படிசெய்கிறேனென்றான் அதன்பின்புஇராயரிடத்திற்குப்போய்ஒருஸ்திரீ

லந்திருக்கிறாளென்று குருவுக்குசொன்னபடியேசொல்ல இராயர் அப்படிப்பட்டவள்எனக்குஒருவேளைஉதவும்படி செய்யவேணுமென்றுகேட்டதற்குநீங்கள்தனியாகஇராத்திரிபதினைந்துநாழிகைக்குமேல்ஒருஸ்திரீவேஷந்தரித்துக்கொண்டு என்வீட்டுக்குவந்தால்அதற்குள்ளாகநான்சாக்கிரதைபண்ணிவைக்கிறேனென்றான்.

குருசொன்னகெடுப்படியேவர ஒருஅறைவீட்டிலே கட்டில்மெத்தைபோட்டுப்படுத்துக்கொண்டிருக்கும்படிசெய்தான் இராயர்அதன்பின்னேவர அந்த அறைவீட்டுக்குள்ளே நான்சொன்னஸ்திரீயிருக்கிறாள்போகலாமென்றுசொல்லிஅவருள்ளேநுழையப்பார்த்துக்கதவையிழுத்துசாத்திவெளிச்சங்கிலிபோட்டுக்கொண்டான் உள்ளேயிருவரும் ஒருவரையொருவர் ஸ்திரீயென்று நினைத்து சரசமுதலானவைகளைச்செய்யப்போகையில்குருவானவர் இராயரையும்இராயரானவர்குருவையுமறிந்து அதிக அவமானத்தையடைந்துதென்னாலுராமன்மேல்மிகுந்தகோபங்கொண்டு கதவைதிறக்கச்சொன்னார்கள் அவன்வெகுநேரமளவு திறவாதிருந்தபடியால்நல்லவசனத்தைசொல்லவேண்டினார்கள் தென்னாலுராமனவ்விருவரையும் இதுமுதலாகஉங்களிருவரிலேயாருக்காவது என்னகுற்றஞ்செய்தாலும் நாளொன்றுக்கு நூறுகுற்றம்வரையிலும் பொருத்துக்கொள்ளுகிறோமென்று நீங்களிருவருமகடவுள்பேரால்சத்தியஞ்செய்துகொடுத்தால் கதவைத்திறப்பேனென்று சொன்னான் அவ்விருவரும் அவனிஷ்டப்படிசெய்துகொடுத்தார்கள்பின்புதென்னாலுராமன்கதவைத்திறந்து அதிகமரியாதையுடன்அவர்களையனுப்பிவிட்டான்.

7-வது பிராமணருக்குச்சூடுபோட்டது

இராயர்தன்தாயார் மரணகாலத்திலே மாம்பழந்தின்னவேண்டுமென்றுசொல்லிவிட்டு அதைவாங்கிவந்து கொடுப்பதற்குமுன்னே இறந்துபோய்விட்டாள் இராயர்தன்தாயாருடைய அபீஷ்டத்தைநிறைவேற்றுதற்கில்லாமல்போச்சுதேயென்று விசனத்தையடைந்து சிலபேர்பிராமணர்களையழைப்பித்துஎன்னுடையதாய் மாம்பழத்தின்பேராசைகொண்டு அதைதருவித்துகொடுப்பதற்குமுன்னேஇறந்துபோய்விட்டபடியினால்அந்தஆத்மாவுக்குஎன்னசெய்தால்திருப்தியடையுமென்றுகேட்டார் அதற்கவர்கள் பொன்னினாலேமாம்பழங்கள்செய்துசிலபேர் பிராமணர்களுக்குத்திவசகாலத்திலே தானங்கொடுத்தால்அந்தஆத்மாவுக்குதிருப்தியாகுமென்றுசொன்னார்கள் இராயர் அதைநம்பி அப்படியே தானஞ்செய்தார் தென்னாலுராமன் அந்தத்தானம்வாங்கின பிராமணர்களையெல்லாம் தன்தாயாருக்குத்திதியென்று தன்வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய்கரண்டியைகாய்ச்சிஒவ்வொருவருக்குஇரண்டுசூடுபோட்டுவிட்டான் அவர்களெல்லாமழுதுக்கொண்டுபோய் இராயரிடத்திற்சொன்னார்கள் இராயர் தென்னாலுராமனையழைத்து இப்படிப்பட்ட அக்கிரமஞ்செய்யலாமாவென்றுகேட்டார் என்தாயாருக்கு அணித்தியகாலத்தில்கைகால்கள்யிழுப்பு கண்டபடியால் சூடுபோடச்சொல்லி கரண்டிக்காம்பை

காய்ச்சிக்கொண்டு வருவதற்குமுன்னமேஇறந்துவிட்டான் அவனு
டைய ஆத்மாவுக்குத்திருப்திபுண்டாக்கவேணுமென்று இப்படிசெ
ய்தேனென்றான்இராயரதைக்கேட்டுவெகுநேரம்பெருநகைசெய்தார்

## 8-வது குதிரைகட்டிவளர்த்தது.

இராயர்சிலகுதிரைக்குட்டிகளையனழைத்து தன்பட்டணத்திலு
ள்ளவீட்டிற் கொவ்வொன்றுப்பக்கொடுத்து அதுகளுக்குவேண்டும்
படியானபுல்லுக்கும் கொள்ளுக்கும்சாலுக்கும் முமமூன்றுவராக
ன்வாங்கிகொண்டுபோய் சீக்கிரத்திலே பெரியதுகளாகும்படியாக
வளர்த்துக்கொண்டுவாருங்களென்று உத்திரவுகொடுத்தனுப்பினார்
அப்படியேயெல்லோரும் அந்தக்குதிரைக்குட்டிகளையெல்லாம்வாங்
கிக்கொண்டுவெகுநேர்த்தியாகப்போஷித்துக்கொண்டேவந்தார்க
ள் தென்னாலிராமன்மாத்திரம் நாலுபக்கமும் சுவர்வைத்துப்போ
ட்டுஅதற்குள்ளேகுதிரைக்குட்டியைவிட்டு அந்தச்சுவரிலே ஒருது
வாரமும்உள்ளே அதன்மூக்குக்கெதிராகஒருபள்ளமுஞ்செய்துவை
த்துவாரத்தின்வழியாகத்தானே அதன்முகத்துக்கெதிராகப்பள்ள
த்தில் தண்ணீர்ஊற்றிச்சாயங்காலமு மப்படியேசெய்துக்கொண்டு
வந்தானிப்படியாகநாள்தோறுஞ்செய்து அந்தகுட்டிக்கு கொடுக்கி
றவராகன்களைத் தானெடுத்துக்கொண்டு மூன்றுவருஷத்திற்குபிற்
பாடுஎல்லாம்குதிரைகுட்டிகளைக் கொண்டுவரும்படி உத்திரவுசெ
ய்தார்.

அப்படியேஎல்லோருங்கொண்டுவந்தார்கள் குட்டிகளெல்லா
ம்மினுக்கென்றுசதைபிடித்துமேனிகொண்டு துள்ளுகிறதுகளும்குதித்
தோடுகிறதுகளுமாகயிருந்ததுகள் தென்னாலிராமன்மாத்திரங்குதி
ரையைக்கூட்டிக்கொண்டு வாராமலிருந்தான் ராயரழைத்துநீயேன்
கொண்டுவரவில்லையென்றுகேட்டான் என்னிடத்திலிருக்கிற குதி
ரைகுட்டியையாராலும்பிடிக்கக்கூடாது உங்களிடத்திலிருக்கிறரா
வுத்தர்களிலே கெட்டிக்காரனை ஒருத்தனையனுப்பிவைத்தால் கொ
ண்டுவருகிறேனென்றானப்படியேஓர்ராவுத்தனையனுப்பினார்ராவுத்த
னுக்குஒருமுழநீளத்திலேகொடுக்கைதாடியுண்டு அவனையழைப்பி
த்துகொண்டுபோய்துவாரத்தண்டைநிற்கச்சொல்லி குதிரையையெ
ட்டிப்பாருமென்றானப்படியேஅந்தராவுத்தன் துவாரத்துக்குள்ளே
எட்டிப்பார்த்தான் பில்லென்றுகுதிரைக்குட்டி எட்டித்தாடியைப்
பிடித்துகொண்டது ராவுத்தன அல்லாவேயென்று கூச்சலிட்டான்
தென்னாலிராமன்சீக்கிரமாகஇராயரிடத்திற்குப்போய்ராவுத்தனைகு
திரைபிடித்துக்கொண்டுவிடவில்லைராவுத்தன் கூச்சலிடுகிறானென்று
சொன்னான் அப்பாசியையழைத்துக்கொண்டுவந்துபார்க்கும்போ
துராவுத்தன் தாடியைகுதிரைக்குட்டிபிடித்துக்கொண்டு விடாமலிரு
க்கிறதும்ராவுத்தன் தவிக்கிறதையும்பார்த்துச் சுவரையிடிக்கசொல்லி
உத்திரவுசெய்துகுதிரையைபிடித்துக்கொண்டு தாடியைவாங்கிவிட்
டுக்கொண்டுபோகும்போது நடக்கிறதற்குகூடபலமில்லாமல்மெது

வாகநகர்ந்தது தென்னாலுராமனைப்பார்த்து என்னகுதிரைதுர்பலமாயிருக்கிறதென்றுகேட்டார் நான்வெகுஜாக்கிரதையாகஎவ்வளவுமிதத்திலேவைத்திருக்கவேண்டுமோ அவ்வளவுமிதத்திலேவைத்திருக்கையிலேதானேரவுத்தனைதாடியை பிடித்துக்கொண்டதே அதிகமாகபோஷித்தால்ஒருவரால்பிடிக்கக்கூடுமோவென்றான் இராயர்அவனாசாத்தியத்திற்குச் சரீரமெல்லாங் குலுங்கும்படியாகச் சிரித்தார்.

## 9-வது பூனைகுட்டி வளர்த்தது.

இராயர் ஒருநாள் வீட்டுக்கொரு பூனைக்குட்டியும்பசுவுங்கொடுத்து அந்தப்பசுவின்பாலை பூனைக்குட்டிக்குவார்த்து வளர்க்கசொன்னார் அப்போதுதென்னாலுராமன்தானும் ஒருபூனைக்குட்டியும்பசுவும்வாங்கிக்கொண்டுபோனான் எல்லோரும் பசுவின்பாலைகறந்து பூனைக்குவார்த்துக்கொண்டுவந்தார்கள் அவன்முதல்நாள் பாலைக்கறந்துகொதிக்ககாய்ச்சிபூனைக்குட்டியண்டையில்கொண்டுபோய் வைத்தான் அதிசீக்கிரத்தில்வந்துவாய்வைத்ததுவாய்எந்த மட்டும்பாலில் அழுந்திற்றோ அந்தமட்டும்வெந்துபோய்விட்டது அன்றுமுதலாகப்பாலைக்கண்டாலந்தபூனைக்குட்டி தூரம் ஓடிப்போய்விடுகிறது அதற்காககொடுத்த பசுவின்பாலை அவனசாப்பிட்டுக்கொண்டு வந்தான் ஆறுமாதப்போனபிற்பாடுஇராயர்குடிகளெல்லோரையும் பூனைக்குட்டியைக்கொண்டுவரச்சொல்லிபார்வையிடும்போது தென்னாலுராமன்பூனைக்குட்டிமாத்திரம்இளைத்து சாகப்போகிறதுபோலிருந்தது இராயர்பார்த்து தென்னாலுராமா இதுஎண்ணிப்படி இளைத்துப்போச்சுதுயென்றார் பாலைகண்டால்ஓடிப்போகிறது நானென்னசெய்வேனென்றான் இராயர்அப்போதுதானேபாலைக்கொண்டுவந்துவைக்கச்சொன்னார் அதைக்கண்டவுடனே அஞ்சிகூவிக்கொண்டு ஓட்டம்பிடித்தது இராயர் அதைபிடித்துவரச்சொல்லி பார்க்கும்போது பாதிவாய்வெந்தபடி யிருந்தது இராயர் அதுகண்டு சூடுகண்ட பூனை அடுப்பங்கரையேறாதென்கிற பழமொழிப்படியே பாலைசுடக்காய்ச்சிவைத்து பாலைக்கண்டால் அஞ்சிஓடச்செய்தானென்றுநிச்சயித்து அவனாசாத்தியத்திற்காகசந்தோஷப்பட்டு கடகடஎன்றுசிரித்தார்.

## 10-வது திருடர்கள் ஏற்றமிறைப்பித்தது,

ஒருநாள் ஆறுபேர்திருடர்வந்துதென்னாலுராமன்வீட்டுபின்பக்கத்திலிருந்துஉள்ளேநுழைந்துதிருடச்சமயம்பார்க்கிற சாடையைத்தென்னாலுராமனறிந்து வீட்டிற்குள்ளேபோய் பணங்கள் ஆபரணங்கள்பட்டாடைகள்பெண்சாதியையழைத்து ஊரிலேதிருடர்உபத்திரவம் அதிகமாயிருக்கிறபடியால்நம்முடையவீட்டிலேயிருக்கிற ஆஸ்திகளையெல்லாம் ஒருபெரியபெட்டியிற்போட்டு நம்முடைய தோட்டத்திலிருக்கும்துரவிலேபோட்டுவைத்தால்திருடர்உபத்திரவந்தீர்ந்தபிற்பாடுஎடுத்துக்கொள்ளலாமென்று அந்ததிருடர்களுக்கு கேட்கும்படியாகசொல்லி ஒருபெட்டியிலேகல்லையுங்கட்டிகளையும் போட்டுஅதைப்பெண்சாதிபிள்ளையுந்தானுமாகஎடுத்துப்போய்துரவி

லேபோட்டார்கள் முன்சொன்ன பேச்சையுந் துறவிலே திடுமென்றுவிழுந்த ஓசையையுங்கேட்டுதிருடர்கள்நாம்வீட்டுக்குள்ளேகூடநுழையாமல் தோட்டத்திலேபோய்த்துறவிலேயிறங்கி எடுத்துக்கொண்டுபோய்விடலாமென்று சந்தோஷித்துபேராசையுடன் துறவில்ஒருவனையிறங்கிப்பார்க்கச்சொன்னார்கள் அவனிறங்கிப்பார்த்து திலேகொள்ளாமையால்தண்ணீரையிறைத்துப்போட்டால்எடுத்துக்கொள்ளலாமென்றான் சரிதானென்றங்கே சாலுடனே இருக்கிறதாண்டேற்றத்தையும் மும்மூன்றுபேராயிறைத்தார்கள் தோட்டத்திலேயிற்க்கிறவாழை, எலுமிச்சை, நாரத்தை, கிச்சிலி, கமுகு, தென்னைமரம் இவைகள்முதலானவைகளுக்கெல்லாம் தென்னாலுராமன்முறைவாகவந்துமடைமாறிக்கொண்டேவந்தான் இறைக்கஇறைக்க துறவு வடியாமையாலேவிடாமல் இறைத்துக்கொண்டுவந்தார்கள் விடியற்காலமாச்சுது தென்னாலுராமன்தோட்டமெல்லாம்பாய்ந்தாச்சுது இறைப்பைநிறுத்துங்களென்று கெட்டியாகச்சொன்னான் அதைக்கேட்டவுடனே இந்தமட்டிலேவிட்டால்போதுமென்று திருடர் ஓட்டம்பிடித்தார்கள்.

## 11-வது சகலசாஸ்திரபண்டிதரைத்துரத்தியது.

இராயர்சமுகத்துக்குஒருநாள்வித்தியசாகரமென்னும்பெயருடைய சகலசாஸ்திர பண்டிதர் இராயரிடத்தி லிருக்கிறவித்வான்களெல்லாம் அஞ்சி அவர்வல்லமைக்கு எங்கள்வல்லமை எவ்வளவும் போதாதேஅவர்ஜெயித்துவிட்டால்நமக்கெல்லாமவமானமாகுமிராயரும் நம்மையிகழ்வாரே எப்படியென்று தென்னாலுராமனுடனே யோசனை பண்ணினார்கள் தென்னாலுராமன் நீங்கள் ஏசவேண்டாம் நானதற்குத்தகுந்த உபாயஞ்செய்து வென்று விடுகிறேனென்றான் அந்தவித்தியாசாகரர் ஒருநாளிராயர்சபைக்குப்பிரசங்கத்திற்குவந்தார்தென்னாலுராமன் எள்ளுவிறகைப்புத்தகம்போ லடுக்காகவைத்து எருமைக்கட்டுகயிற்றினாலேகட்ட அதன்மேலேஒருகுட்டையைப்போட்டுசுற்றிஎடுத்துக்கொண்டு அந்தபண்டிதற்குஎதிரேவந்துஉட்கார்ந்தான் சகலசாஸ்திர பண்டிதர்பார்த்திதென்னபுத்தகமென்றார் திலகாஷ்டமகிபந்தனமென்றானதுகேட்டு பண்டிதர்திடுக்கிட்டுநாம்சகலசாஸ்திரமும்வாசித்தும் இந்தப்புத்தகம்பாராமற்போனோமே இந்தப்புத்தகத்தின்பெயரைக்கூடகேட்டதில்லையேயென்று ஆலோசனைபண்ணிக்கொண்டிருந்தார் தென்னாலுராமன்பண்டிதரைப்பார்த்து சகலசாஸ்திரபண்டிதரென்றுபேர்வைத்துக்கொண்டிருக்கிறீரே இந்த மகாசாஸ்திரம் இதுவரையிலும் பார்த்ததில்லையாவென அதற்குப்பண்டிதர் இதற்குநாளைக்கு உத்தரவுசொல்லுகிறேனென்றுதாம் இறங்கியிருக்கிற விடத்துப்போய் மிகவும் ஆலோசனை பண்ணிப்பார்த்தும் ஒன்றும்வகைபிரியாமல் நமக்குப்புத்தகத்தின்பெயருக்கே அர்த்தமாகவேயில்லை அந்தப்புத்தகத்திலே என்னசொல்லியிருக்குமோதெரியாது இங்கிருந்தாலவமானம்வருமென்றுவிடியற்கால

த்திலேபுறப்பட்டுப்போய்விட்டார்சகலசாஸ்திரபண்டிதர்சொல்லா மலோடிப்போனசமாசாரம்இராயர்கேள்விப்பட்டுத்தென்னாலுராம னையழைப்பித்துச்சகலசாஸ்திரபண்டிதரை எப்படி ஜெயித்தாய்என் று கேட்டார்இந்தத்திலகாஷ்டமகிஷபந்தனமென்னும்புத்தகத்தைக் கொண்டென்றான் அதைஅவிழென்றார்மேலேயிருக்கிறதட்டையை யவிழ்த்துக்காட்டினான் எள்ளுவிறகை எருமைக்கயிற்றால்கட்டியிரு க்கிறதைப்பார்த்து எள்ளுக்குத்திலமென்றும்விறகுக்காஷ்டமென் றும எருமைக்குமகிஷமென்றும் பேராகையா லிப்படியா மோசம் பண்ணினாயென்று சிரித்தார்

## 12-வது சங்குசக்கிராங்கதஞ்செய்துக்கொண்டது.

இவனையடிமையாக்கிக்கொண்டால்மரியாதையாகநடப்பானெ ன்று இராயர் ஆச்சாரியர் தென்னாலுராமனுக்குப்போதித்துநீசமா சிரயணம் பண்ணிக்கொண்டு வைஷ்ணவனாகி விட்டால்இராயரைக் கொண்டுஉனக்குவேண்டியகாரியமெல்லாஞ்செய்விக்கிறேனென்று சொன்னாரதைக்கேட்டுதென்னால்ராமன்சுவாமி அடியேனுக்குஇதை விடப்பெரிதானகாரியம்ஒன்றுமில்லை தங்களுத்ரவின்படியேநடந்து கொள்ளுகிறேனென்று மேலுக்குசம்மதித்தவனைப்போலச்சொல்லி ஆண்டவரேயிப்போது அவசியமாக ஆயிரம்வராகன்எனக்குவேண் டுமென்று வாங்கிக்கொண்டு எனக்குவைஷணவங்கொடுக்கிறதினத் தில்வருகிறவர்களுக்கெல்லாம் சாப்பாடுசெலவும்நீங்களேபோட்டு ச்செய்யவேண்டுமானால் ஒருபணந்தான்குருதச்சணைகொடுப்பேனெ ன்றான் அதுகேட்டுஅவ்வாசாரியார் இவன்சம்மதித்ததேபெரியகாரி யமென்று சீக்கிரத்திலொருநாளைநிச்சயித்து சகலசாமான்களும்சேர் மானம்பண்ணிஅன்றையத்தினம்தென்னாலுராமனை வரவழைத்தார் அவன்வந்து ஸ்நானமடிகட்டிக்கொண்டுதண்டஞ்செய்தான் ஆச்சா ரியச்சடங்குகளெல்லாம் நடப்பித்துப்பிறகுசக்கிராங்தம்பண்ணுதற் கு நெருப்பிலேகாயப்போட்டு இருக்கிறதையெடுத்து ஒருதோளில் வைத்தார்வைத்தமாத்திரத்தில் தென்னால்ராமன்ஐயையோவென்று வயிற்றிலிடித்துக்கொண்டு ஆசாரியரே அரைப்பணதகிற்தப்போது மென்று ஓட்டபபிடித்தான் ஓடுகிறபோது அவ்விடத்தி லிருந்தவர்க ளெல்லா ஏன் ஓடுகிறாயென்று கேட்டார்களதற்குதென்னாலுராமன் அவ்வாச்சாரியார்நீவைஷ்ணவனானால் அதிலிருக்கிறசந்தோஷமும்பிர போசனமும்பிற்பாடுதெரியுமென்று ஒருதோளிலேசூடுபோட்டா ர்உபத்திரவம்பொறுக்கக்கூடாமையால்மற்றொருதோளிலேயுஞ் சூ டுவாரென்றஞ்சி அரைப்பணத்திற்குபோதுமென்று ஓடுகிறேனென் றான்எல்லாரும்கலீரென்றுநகைத்தார்கள் இவனிப்படியாமோசஞ் செய்தானென்று ஆசாரியர்வெட்கித் தலையிறக்கிக்கொண்டார்.

## 13-வது அரங்கேற்றவித்துவானை அவமானம்பண்ணியது.

ஒருவித்துவான் இராயர்பேரிலே ஒருபிரபந்தம்பண்ணிக்கொ ண்டுவந்தான் தென்னாலராமனுக்கும்மரியாதைபண்ணாமல் அலட்சிய

மாயிருக்கையில்ஒருநாள்பிரபந்தம்அரங்கேற்றுவதற்குஉத்தரவாய்ப்பிரசங்கம் பண்ணிக்கொண்டுவருகையில்சிலசுலோகங்களானபிறகுஒருசுலோகத்தில்ஒரு அடிவிட்டுப்போயிருந்தது அதுமுதலாகஜந்துநடுவரைக்கும் நெருங்கப்பிடித்து எழுதியிருந்தமையால்எழுதவிடமில்லாமல்விட்டவிடத்தில்ஒரு அடையாளம்பண்ணிஅவ்வடையாளத்தைஆறாவது ஏட்டில்வைத்து முன்விட்ட அடியை எழுதியிருந்ததுபிரபந்தசுலோகத்தைப் படிக்கத்தெரியாமல்மயங்கினபோதுவித்துவான் ஆறாவது ஏட்டிலெழுதியிருக்கிறதைக்காண்பித்துப்படிக்கச்சொன்னபடியேபடித்து அந்தப்பிரபந்தமுழுதும்நிறைவேற்றி மறுநாள்வெகுமதிவாங்கிக்கொள்ளப்போகையில்தென்னாலிராமன்சவரம்பண்ணிக்கொண்டுகுடுமியைவாங்கிப்போட்டுகுடுமியிருந்தவிடத்தில்இரண்டுமூன்றுகட்டைமயிரை அடையாளமாகவிட்டுவைத்துஒருபக்கத்திலேயிருக்கிறமயிரைசுற்றிலும்வாங்கிகுடுமியைபோல்விட்டு அதைபக்கத்திலஇரண்டுமூன்றுகட்டைமயிரை அடையாளமாகவைத்துக்கொண்டு இராயர்சமூகத்திலே அந்தவித்வானுக்கெதிராகஉட்கார்ந்து தலைப்பாகையைவாங்கிவைத்துத்தலையைத் தடவிப்பார்த்துப்பக்கத்திலிருக்கிறமயிரைக்கையினாலேயுருவினான்இராயர்பார்த்துஇதென்னகுடுமியைவாங்கிப்போட்டுபக்கத்திலமயிரைவைத்துக்கொண்டதென்னவென்றுகேட்டார்சவரம்பண்ணிக்கொள்ளுகிறபோதுமறந்துகுடுமியை வாங்கிப்போடச்சொன்னேன்பிற்பாடுஞாபகம்வந்து அந்தவிடத்திலேஅடையாளம்பண்ணி அவ்வடையாளத்துக்குகுடுமியைபக்கத்திலேவிடலாம் வித்துவான்களெல்லாம்வைத்துக்கொண்ட தென்னவென்றுகேட்டார் இதோ தங்களிடத்திலேஒருசுலோகத்திலேவிட்டுப்போனகுறையை அதற்காறாவதுஏட்டில்எழுதியிருக்கிறாரே அந்தப்பிரமாணத்தைக்கொண்டுநானிப்படிசெய்தேனென்றான் அதனால்வித்துவானுக்குத் தலையிறக்கமுமஇராயருக்குச் சிரிப்பும் உண்டாயிற்று.

## 14-வது மல்லகசெட்டியை மோசம்பண்ணியது.

அதிகூரனென்னும்பெயருடைய ஒருமல்லகசெட்டி அநேகசமஸ்தானங்களிலிருக்கிறமல்லகசெட்டிகளையெல்லாம் ஜெயித்துக்கொண்டு அனேகவிருதுகளோடு இராயர்சமஸ்தானத்திற்குவந்தான் இராயரிடத்திலிருக்கிறமல்லச்செட்டிகளெல்லாம திகிலடைந்து மயங்கிக்கொண்டிருக்கிறதைப்பார்த்துதென்னாலிராமன்என்னவிசனமென்றுகேட்டான் இதுவரைக்குமமகாராசாவினிடத்திலேசன்மானத்துடனேசீவனம் பண்ணிக்கொண்டிருந்தோமிப்போதுஎங்களுக்குஅவமானமும்சீவனயீனமுமவருமபடியாக ஒருமல்லகசெட்டிவந்திருக்கிறான்என்னசெய்வோமென்றார்கள் தென்னாலிராமன்பயப்படாதேஉங்களுங்கள்விருதுகளெல்லாங்கொடுத்துஎன்னைஎஜமானாகவைத்துக்கொண்டுஎன்முன்னேநீங்களெல்லாம்வாருங்களென்று திட்டஞ்செய்தான் அந்தவிருதுகளெல்லாந்தரித்துக்கொண்டு அந்த அதிகூ

ரனிறங்கியிருக்கிறகூடாரத்துக்கெதிரேகூடாரமடித்திறங்கினா வந்தமல்லகசெட்டிநமக்குளதிரிபோலிருக்கிறதேநாம்போய்நிர்வாகத்தை அறியலாமென்றெண்ணிக்கொண்டு நாம் உம்மிடத்திற்குவருகிறேனென்றுசொல்லியனுப்பினான் தென்னாலிராமன் இங்கேவரவேண்டியதில்லைநாளைக்குமகாராஜா அவர்கள்முன்பாகஎல்லாகாரியங்களையுமதெரியப்படுத்தலாமென்றான் அதுகேட்டுஅதிசூரன்எதிரிஎப்படிப்பட்டவனோவென்று அவன்பேரைக்கேட்டுபயந்துக்கொண்டிருந்தான் மறுநாளைக்கு இராயர்வந்து அதிசூரன்வீரகேசரிஇருவருக்கும்யுத்தம்பண்ணவுத்தரவுகொடுத்தார் வீரகேசரிஅதிசூரனைப்பார்த்துநீயுத்தம்பண்ணுகிறகொடியசாஸ்திரப்படியாகவா அல்லதுமுரட்டுத்தனமாகவாவென்று கேட்டான்அதிசூரன்சாஸ்திரப்படிதானென்றான்வீரகேசரிசிலவரிசைகள்காண்பிக்கிறேன் அதுகளைக்கொண்டு சாஸ்திரப்படிசரியாக இன்னின்ன வரிசையென்று சொல்வாயானால்பிற்பாடு யுத்தம்பண்ணலாமென்றுசொன்னான் அதிசூரனப்படியேயாகட்டுமென்றான் வீரகேசரிஅவனுக்குநடுவிரல்மூன்றையுஞ்சேர்த்துத்தன்மார்பிலேகுத்திகாட்டி இரண்டுகைகளுந்தோளின்மேலாகவிரித்துக்காட்டிஆள்காட்டிவிரலிலேகளுத்தைச்சுற்றிக்காட்டிவலதுகையை யிடுப்பளவில்குவித்துக்காட்டி அகங்கையைப்பிடித்துக்கொண்டு அசைத்துக்காட்டினான் மல்லகசெட்டிஇதுகளையெல்லாம்பார்த்து ஒன்றுந்தோன்றாமல் தான்கற்றசிலவரிசையெல்லாஞாபகம்பண்ணிமயங்கி ஒன்றுஞ்சொல்லமாட்டாமல்நின்றான்தென்னாலிராமன்விருதுகளைப்பிடுங்கிக்கொண்டு அவனைத்துரத்திவிட்டுச்செயபேரிகையடித்துக்கொண்டு தன்கூடாரத்திற்குப் போனான்இராயர் கேட்டார்தென்னாலிராமன்முன்காட்டிய வரிசைகளைக்காட்டிஅதிசூரனானவனிடத்தில்வந்தால் என்னைக் கட்டாரியினாலே மார்பிலேகுத்திக்கொன்றுவிடுவாய்நானிப்படிமல்லாந்துகொள்வேன்பிறகுஎன்பெண்சாதியையும்பிள்ளையையும் ஆர்சவரட்சணைபண்ணுவார்சொல்லென்றுகேட்டேனென்றான் இராயரதுகேட்டுசந்தோஷித்தார்.

## 15-வது பார்ப்பாரை அவமானம்பண்ணியது

ஒருநாள்தென்னாலிராமன் ஓரக்கிராரத்தில்வீடுதோறும்போய்த்தாகத்துக்குக்கேட்டதற்கு இல்லையென்றகரத்தைமனதில்வைத்துக்கொண்டுஒருநாளுதயத்தில் அந்தஅக்கிராரத்துப்பிராமணர்களெல்லாம்மலபாதைக்குப்போயிருக்கிறவிடத்திலேபோய் இன்றைக்குஇராயர்களவமாணியதானம்பண்ணுகிறதற்கு உங்களைஎல்லாம்சீக்கிரமாகவழைத்துக்கொண்டுவரச்சொன்னாரென்றுசொன்னான்மலபாதைக்குப்போனோமேகால்சுத்தம்பண்ணிக்கொண்டுவருகிறோமென்றுசொன்னார்கள் நீங்களதற்குப்போனாலிரண்டுநாழிகைசெல்லுமதற்குள்ளேஇராயருடையசித்தவிர்த்திஎப்படியிருக்குமோதெரியாது ஆகையாலசீக்கிரமாகப்புறப்படுங்களென்றுசொன்னான்இப்படியேவந்தால் இராயர்அசங்கியப்படுவாரேஎப்படிவருவோமென்றார்கள்

அவ்விடத்திலிருக்கிற எருக்கம்புபழுப்புகளை ஆசனத்தில் வைத்துக் கோமணத்தையிழுத்துகட்டிக்கொண்டு வேஷ்டியை யுடுத்திக்கொள்ளச்சொல்லி ஒருவருக்கொருபழுப்பு மற்றொருவருக்கிரண்டுபழுப்புஅந்தப்படிக்கு மேழுபேருக்கு மேழுபழுப்புவரைக்கும் பொரிக்கிக்கொடுத்து அவர்களப்படிசெய்தபின்பு அவரையழைத்துக்கொண்டுபோய் இராயர்எதிர்பார்த்திவர்களை ஏனழைத்துவந்தாயென்றுகேட்க தென்னாலிராமன் இவர்களுக்கு என்னவேண்டுமென்றிரிந்தயேழுபேரும் மகாயோக்கியர்கள் நீங்கள் எந்தகாலத்திலே எந்தப்பிரயோசனம் செய்தாலும் இவர்களுக்குச் சொல்லவேண்டுமென்றான் அதெப்படியென்றான் இவர்ஒருபழுப்பட்டார்இவனிரண்டுபழுப்பட்டரென்று தனித்தனிஅவ்வேழுபேரையுங்காட்டிஎல்லாரையும் கோமணத்தை யவிழ்த்துச் சோதிக்கும்படியாகச் செய்தான்சோதிக்கும்போது கோமணத்துக்குள்ளிருந்துவரிசைப்படிஎருக்கம்பழுப்புகள் அசங்கியத்துடன்கிழேவிழுந்ததுகள் அதைப்பார்த்துஇராயரசங்கியப்பட்டு அவர்களையப்புறம்போகச் சொல்லித் தென்னாலிராமனை யழைத்து இவர்களுடைய நடத்தை என்னவென்றுகேட்டார் அதற்கு தென்னாலிராமன் இவர்கள்மிகுந்த அனாச்சாரக்காரர்கள் மலபாதைககுப்போனவர்கள்சுத்திசெய்யாமல்எருக்கம்பழுப்பைவைத்துக் கட்டிக்கொண்டுவந்தார்களே இவர்களெப்படிப்பட்ட அசங்கியத்துக்குதான் சம்மதிக்க மாட்டார்களென்றான இராயர்கோபித்துக்கொண்டு அந்தப் பிராமணர்களுக்கு விட்டிருந்தமானியங்களையெல்லாங் கட்டிப்போடச்சொல்லி உத்திரவுசெய்தார்

16-வது கருப்புநாயை வெள்ளைநாயாக்கிறேனென்றது.

ஒருநாள் இராயர் உதயமாகி நாலுநாழிகை வரைக்கும்நித்திரைசெய்துக்கொண்டிருந்தார் அன்றைக்குக்க்ஷவரம்பண்ணிக்கொள்கிறதினமாகையால் அம்பட்டன்வந்துபார்தது நித்திரைபங்கம்வரவொட்டாமல் படுக்கையிலேதான் மெதுவாகக்ஷவரம் பண்ணிவிட்டுபோனான் க்ஷவரம் வெகுநேர்த்தியாகச் செய்திருக்கிறதுதெரிந்து அதனாலே மிகவுஞ்சந்தோஷமடைந்து அம்பட்டனையழைத்துஉனக்கென்னவேண்டுமென்றார் சுவாமிஎன்னை பிராமணனாக்கவேண்டுமென்றான் பிராமணர்களைஎல்லாம் அழைப்பித்து ஆறுமாதத்திற்குள்ளே அந்தஅம்பட்டனைப் பிராமணனாக்கிப்பந்தியிலேவைத்துக்கொண்டுசாப்பிடாமற்போனால் உங்களுக்குவிட்டிருக்கிற மானியங்களையெல்லாம் சப்திசெய்துவிடுவேனென்றார் பிராமணர்களெல்லாம்விசனப்பட்டுக் கொண்டுவெளிக்கு நல்லதென்றழைத்துக் கொண்டுபோய்நித்தியமும்முன்று காலம் ஸ்நானம்பண்ணுவித்து நிததியாக்கினி சநதியாவந்தனஞ்செபங்கள்முதலாகியசமஸ்தகாரியங்களையும் நடப்பித்துக்கொண்டுவருகையில் 6-வதுமாசக்கடைசியில்இராயர் பிராமணர்களுடையபந்தியில்அம்பட்டன்கூடவுட்கார்ந்துசாப்பிடுகிறதைப்பார்க்கவேண்டுமென்று அக்கிராரத்துக்குப்போகும்போது அந்தப்பிராமணர்கள் தென்னாலிராமனிடத்திற்குப்போயழுதார்கள்

அதற்கு நீங்களஞ்சவேண்டாம் நானுபாயஞ்செய்து தப்புவிக்கிறே
னென்றான் இராயருக்குமுன்னே தென்னாலிராமன் ஒருகருப்புநாயி
ன்கழுத்திலேகயிற்றைக்கட்டியிழுத்துக்கொண்டுபோய் அக்கிராரத்
தின் சமீபத்திலிருக்கிற குளக்கரையில் ஓமகுண்டம்போட்டு நாலு
பேர் பிராமணர்களைவைத்து ஓமம்பண்ணச்சொல்லி தான்கொண்டு
வந்தநாயைமுழுகப்படுத்தி அதுவாள்வாளென்று கத்த அதையிழுத்
துக்கொண்டுபோய்முழுகப்படுத்தி ஓமகுண்டத்தை பிரதட்சணம்
செய்வித்தான் இப்படியாக்கிக்கொண்டிருக்கையில் இராயர்வந்து இ
ந்தநாயையேனிப்படிசெய்கிறாயென்றுகேட்டார் தென்னாலிராமன் இ
ந்தகருப்புநாயை வெள்ளைநாயாக்கப்போகிறேனென்றான் இராயர்
அடாபித்தனே எங்கேயாகிலும் கருப்புநாய்வெள்ளைநாயாகுமா ஆக
மாட்டாதென்றார் அதற்குதென்னாலிராமன் அம்பட்டன் பிராமண
னாகிறபோதுகருப்புநாய் வெள்ளைநாயாகிறது ஆச்சரியமாவென்றா
ன் அதைகேட்டவுடனே இராயர்சரிதான்யோசனைபண்ணாமற்சொ
ன்னேனென்று மனதுக்குள்ளே வைத்துக்கொண்டு அக்கிராரத்துக்
குபோகாமல் அரண்மனைக்குவந்து அம்பட்டனையழைப்பித்து வே
றொருவிதத்தில் சமாதானம்பண்ணியனுப்பிவிட்டார் அதைக்கேட்டு
பிராமணர்களெல்லாம்சந்தோஷமடைந்தார்கள்

## 17-வது அப்போதுமுளைக்கீரை விதைவிதைக்கச்சொன்னது.

ஒருநாள் அந்தபுரத்தில் தனதுபாரியாளுடனேபேசிக்கொண்
டிருக்கும்போதுபாரியாளுக்குவாயுபரிந்தது அதனாலேஇராயர் அச
ங்கியப்பட்டு அந்தபுரத்துக்குப்போகாமல் நெடுநாளாகயிருந்துவி
ட்டார் அதைக்கறுவிசேஷமாகத்தென்னாலிராமன்கேள்விபட்டு
உழக்குக்கீரைவிரை துணியிலேமுடிந்துகொண்டு ராயரிடத்தில்வந்
து எதிர்வைத்தான் இதுஎன்னவென்றுகேட்டார் மகாராசாவே கீ
ரைவிரை ஒருதீவிலிருந்து வந்தது இதைவிதைத்தநாழிகைக்கு மு
ன்னுதாக விதைப்போமாவென்று இராயர் கேட்டார் தென்னாலி
ராமன் அப்படியே செய்பலாமென்று சொன்னான் மறுநாள்ராயர்
தோட்டத்துக்குப் பாச்சிகட்டச் சொல்லி இவ்வாச்சிரியத்தை தெரி
யப்படுத்தி வெகுபேரை யழைத்துக்கொண்டு தானும்வந்து சிங்கா
ரத்தோட்டத்திலிருந்துகொண்டு தென்னாலிராமனையழைப்பித்துக்
கீரைவிரை விதைக்கச் சொன்னார் தென்னாலிராமன் அந்தவிரையை
ஒருபாத்திரத்தில்லை வத்துக்கொண்டு அங்கிருக்கிறவர்களையெல்லா
மஒவ்வொருவராகச்சமீபத்திலேயழைப்பித்து இரகசியமாக இந்தவி
ரையைஅபானவாயுவிடாதவர்கள் விதைததாற்றான்முளைக்குமாம் உ
மக்குஅதில்லாமலிருந்தால்விதையுமென்றுகேட்டார் எல்லாரும்தங்
கள்தங்களுக்குமஉண்டென்றுசொன்னார்கள அதற்குமேல்இராயரி
டத்திற்குப்போய் அபானவாய்வில்லாதவர்கள் விதைக்க வேண்டு
தலால்இங்கேஅப்படிப்பட்டவரை ஒருவருமில்லை நீங்கள் விதைக்கலா
மென்றான் இராயர்எனக்குமஉண்டென்றார் தென்னாலிராமன் ஆனால்

நீங்களேன் அந்தபுரத்துக்கு அநேகதினமாகப் போகாமலிருக்கிற ரென்றான் இராயர்தெரிந்துக்கொண்டு அதுமுதற்கொண்டுஎப்போ தும்போலவே அந்தபுரத்துச்செல்ல வாரம்பித்தார்

### 18-வது சித்திரங்களெழுதிவைத்தது

இராயர் அலங்காரமாக ஏழுமெத்தைவீடு கட்டிவைக்க அதில்சித்திரக்காரனை யழைப்பித்து விநோதமாக சித்திரங்களெழுதச் சொல்லி கட்டளையிட்டார்சித்திரக்காரனெழுதிதீர்ந்தவுடன்இராயருக்கறிவித்ததாக இராயர்மந்திரிமுதலானவர்களுடன்கூடபோய் சித்திரங்களைப்பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டு வருகையில் தென்னாலிராமன் அந்தரமுகமாகவிருந்த ஒருசித்திரத்தைப்பார்த்துமகாராசாவே இதற்குஒருபுறத்து அவயமாத்திரமிருக்குமே மற்றப்பாதியுமெங்கேயென்றான் இராயரது அந்தப்பக்கத்தி லிருக்கிறதாய் பாவனை இதுஎனக்குத்தெரியுமாவென்றுநகைத்தார்இப்போதுதெரியவந்ததென்றான் பிறகுசிலமாதங்கழித்து ஒருநாள்தென்னாலிராமன்இராயரைப்பார்த்துஇப்போதுசித்திரத்தில் கைதேர்ந்திருக்கிறேன்என்வேலைத்திறத்தைப் பார்க்கவேண்டுமென்றான் இராயரப்படியாவென்று சந்தோஷப்பட்டுத் தன்னரண்மனையிலிருக்கிறசித்திரங்கள்கற்பனைபதாயிருந்தகிற லவர்களையெல்லாம் துடைத்துப்போட்டுநீ யோக்கியமான சித்திரங்க ளெழுதென்று தாம்பூலங் கொடுத் தந்தவீட்டைஒழித்துவிட்டுதான் மற்றொருவீட்டிற்குபோனர் தென்னாலிராமன் முன்னிருந்த அலங்காரமுள்ள விசித்திரங்களையெல்லாமகழுவித்துடைத்து விட்டு ஓரிடகதில் ஒருநகமும் ஓரண்டையொருவிரலும ஓரிடத்தில் ஒருகையும் இப்படி ஒவ்வொரு ருபமாகவீட்டுநிறையவெழுதிவீட்டைகெடுத்துப்பின்புஇராயரண்டைவந்து சித்திரமெல்லாமெழுதிதீர்ந்தது தாங்கள்காட்சிக்கவேண்டுமென்றான்இராயர்மெய்யென்றுநம்பி வெகு பெயருடனேவந்துநுழைந்து சர்க்கரையில இராயர்தென்னாலிராமாயிதென்ன ஒவ்வொரு ருபமாத்திரம இருக்கிறதேலென்றார் மற்றவையெல்லாமஅந்தப்பக்கமிருக்கிறதாகபாவனை இப்போது மறந்து போனீர்களோவென்று னிராயாதுகோபமோசம்போனேனே யெடுத்தாயேயென்று சொலலிவெட்கததுடனே தலையிறங்கிகொண்டு கோபமாகவந்து விட்டார்.

### 19-வது குடும்பசவரட்சணை பண்ணச்சொன்னது.

தென்னாலிராமன் ஒருநாளமிகவும் விசனமா யிருக்கிறதை இராயர் தெரிந்துக்கொண்டு நீஎன் துக்கிக்கிறாய்உனக்குஎன்னகுறைபாடென்றார் அப்போது தென்னாலிராமன் ஜோ சோதிடர்கள் என்னை இரண்டொருமாதத்தில் இறந்துபோவாயென்றார்கள் ஆனால்இறப்பைக்குறிதது யாதொன்று நான்சிந்திக்கவில்லைஎனக்குப்பிற் காலத்தில்என்குடும்பத்தை என்னைப்போல்ஆதரிப்பார்ஒருவருமில்லையென்றுகிலேசப்படுகிறேனென்றான் ராயர்அதைக்குறித்து எவ்வளவும்நீயஞ்சாதேயுன்னிலும்பதினமணங்கதிகமாகஉன்சமுசாரத்

தைகாப்பாற்றுவேன் இதுஎனக்குஒருபெரிதாவென்று நம்பிக்கை யாகசொன்னாபின்புதென்னாலிராமன் அன்றுமுதலாக வரவரநோய்அதிகரிக்கிறாப்போல்பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்து ஒருநாளிறந்துபோனதற்காக எல்லாரும் நம்பும்படியேதோ ஒருபாயம்பண்ணிதன்பெட்டியிலிருந்தபணங்களையும் ஆபரணங்களையும் பாத்திரங்களையும் வேறேஓரிடத்தில் வைத்து அதில் தான்புகுந்துக்கொண்டிருந்தான் இவனிறந்தானென்கிற சேதி இராயர்கேட்டமாத்திரத்தில் தென்னாலிராமனிடத்தில் திரவியம் அதிகமாக விருக்கிறதென்றுகேள்விப்பட்டபடியினாலே அப்போதுநல்லசேவர்களையனுப்பி அவன்வீட்டுபணப்பெட்டியைச் சீக்கிரத்திலெடுத்துவரச்சொல்லி கட்டளையிட்டார்அவர்கள் அவ்வாறே அதைதன்னரண்மனையில்கொண்டுவந்தமாத்திரத்தில் ஆசையோடுஅப்பெட்டியைத்திறந்து பார்க்கையில்தென்னாலிராமனைப்பார்த்து ஓகோசெத்துப்போனான் என்றீர்களேயென்று அய்னுங்களை நம்பிச்சாகலாமா நீர்தானா என் குடும்பத்தைக்காப்பாற்றுகின்றவர் என்றான் இராயர் வெட்கிப்பேசாமலிருந்துவிட்டார்.

தென்னாலிராமன்கதை-முற்றிற்று.

அத்தியாயம் 3-க்குகதைகள்-19.

## நான்காமத்தியாயம்.

### முதலாவது

# கோமுட்டிகதை.

ஒருதிருடன் ஒருநாளிராத்திரி ஒருகோமுட்டிவீட்டுஅவரைப்பந்தலில் ஒளித்துக்கொண்டிருந்தார் அந்தவீட்டுகோமிட்டிகைகழுவப்போய் திருடனிருக்கிற ஜாடைகண்டு பெண்சாதியை ஒரு பெரியதவலைநிறைய தண்ணீர்கொண்டுவரச்சொன்னான் அவளப்படியேகொண்டுவந்துகொடுக்க அதனை அவன் வாங்கிக்கொண்டுகொப்பளித்து திருடன்மேல் உமிழ்ந்து தண்ணீர்முழுதும் செலவானபின்பு மறுபடியும் ஒருதவலை தண்ணீர் கொண்டுவரச்சொல்லி அதனைகொப்பளித்துமிழ்ந்தான் அதற்கவன்பெண்சாதி ஏன் இப்படிவீணாககொப்பளித்துமிழ்கிறாயென்றுகேட்டாள் கேட்கவே அவள் மேமேலே நாலுவாய்த்தண்ணீரைக் கொப்பளித்துமிழ்ந்தான் அவளதுகண்டுதன்புருஷனுக்குப் பித்தகுணங்கண்டதாகநினைத்துபயந்து தெருவிலேயோடிப்போய்பலரைக்கூட்டிக்கொண்டு உள்ளேபோனாளர்கள்கோமுட்டியண்டையில்வந்து உனக்கென்னபித்தம்பிடித்ததா உன்பெண்சாதிமேலே பேன்கொப்பளித்துஉமிழ்ந்தாயென்றுகேட்டார்கள் அதற்கு அவன் ஐந்து வயதிலே இவளைக் கலியாணம்பண்ணி ஆயிரம்வராகன் உடைமையும்போட்டிதுவரையிலும் சுகத்தினிலேவைத்துக் கொண்டிருந்தேன் இபபோது நாலுவாய்த்தண்ணீரைநான்கொப்பளித்துஉமிழ்ந்ததற்குஇவள்சகிக்காமல்உங்களுட

ணைவந்து சொல்லிக்கொண்டாளே இந்த அவரைப்பந்தலின் கீழே
யிருக்கிற மனிதனுக்குநான் ஒருஉபகாரமுஞ்செய்ததில்லை அப்படி
யிருக்க இரண்டுதபலை தண்ணீரையெல்லாம் கொப்பளித்துமேலே
வுமிழ்ந்தேனதற்கு அவன் சகித்துக்கொண்டிருந்தான் இன்னுமெய்
ப்பாய் அறியவேண்டுமானால் அவனை நசுவிலேகேட்டுக்கொள்ளுங்
களென்றான் அதற்குமேல் திருடனைப்பிடிக்கிறதற்காக இந்தவுபாயஞ்
செய்தானென்று அந்தத்திருடனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொ
ண்டார்கள்.

## 2-வது பரணிலொளித்திருந்த திருடனை வெளிப்படுத்தியது.

ஒருதிருடன் ஒருநாளிராத்திரி ஒருகோமுட்டிவீட்டுப்பரணி
ன்மேலே பதுங்கிக்கொண்டிருந்தான் அந்த வீட்டிலே கோமுட்டி
யும் அவன்பெண்சாதியும் படுத்துக்கொள்ளும்போது கோமுட்டிப
ரணின்மேலே திருடனிருக்கிற சாடையைக்கண்டு ஒருஉபாயம் நினை
த்துக்கர்ப்பமாயிருக்கிற தன்பெண்சாதியைப்பார்த்துஉனக்குப்பெ
ண்பிறந்தால் நீஎன்ன செய்வாயென்றான் சீதையென்றுபெயரிட்டு
ஒருபிள்ளையைவீட்டிலேவைத்துக்கொண்டுவிவாகஞ்செய்துகொடு
த்து என்னுடைய உடமையெல்லாம் அந்தப்பெண்ணுக்குப் போடு
வேனென்றாள் அதைக்கேட்டு உன் எண்ணப்படிக்குநடக்கமாட்டா
து ஆண்பிள்ளைபிறக்கும் அந்தப்பிள்ளைக்கு இராமனென்று பெயரி
ட்டு அவனுக்கெல்லா உடமைகளுமிட்டுப் பள்ளிக்கூடத்தில்படிக்க
வைப்பேன் இவன் சாப்பாட்டுவேளைக்கு வராவிட்டால் இராமா இ
ராமாவென்று செட்டியாகக்கூவிக்காட்டி இப்படி யழைப்பேனெ
ன்று சொன்னான் அண்டைவீட்டிலிருந்த தலையாரி ராமனெழுந்து
பத்துபேரைக் கூட்டிக்கொண்டுவந்து நீ ஏன் அழைத்தா யென்று
கோமுட்டியைக்கேட்டான் நானுன்னையழைக்கவில்லையென்று தனக்
குந்தன்பெண்சாதிக்கும் பேச்சுமூலமாக நடந்தசங்கதியைச்சொல்
லி இதுகளின்மேலே எவ்வளவும் வித்தியாசமில்லைஉனக்கு ஒருவேளை சந்
தேகமாயிருந்தால் அந்தப் பரணின்மேலேபொதுமனுஷனிருக்கிறா
னவனை ஆதியோடந்தமாகக் கேட்டுக்கொள்ளுங்களென்று பரணின்
மேலிருக்கிறவனைக் காட்டினான் அதற்குமேலவர்கள் திருடனென்ற
றிந்து பிடித்துக்கொண்டு தகுதியாக தண்டனைசெய்வித்தார்கள்.

## 3-வது இதுவுமது.

ஒருதிருடன் ஒருநாளிராத்திரி ஒருகோமுட்டிவீட்டுப்பரணின்
மேலேபதுங்கிக்கொண்டிருந்தான் அந்த வீட்டுக்குள்ளேகோமுட்டி
படுத்துக்கொள்ளப்போனான் அப்போதிருடனிருக்கிற அரவங்கண்
டு ஒருவுபாயம்பண்ணிவைத்தும்பெட்டிகளெல்லாம்பூட்டியிருக்குது
களாவென்று பார்க்கிறவனைப்போலே தொட்டுத்தொட்டுப்பார்த்து
வரையிலே தன்செட்டிவிட்டதுபோல் ஒன்றையே தன்கொட்டிவி
ட்டேன் என்னசெய்வேனென்று உரக்கக்கூவியழுதான் அவன்பெரு

ங்கூவிட் டழுததைக்கேட்டு அண்டைவீட்டுக்காரரெல்லாம்வந்து பார்த்து மந்திரித்து விஷமிறங்கி விட்டதா வென்று கேட்டார்கள் விஷம்இறங்கிற்று அந்தப்புண்ணியவான்மாத்திரம் இன்னம் மரனை விட்டுஇறங்கவில்லையென்று மரத்தின்மேலிருக்கிறவனைக்காட்டினான். அவர்களந்தத் திருடனைப்பிடித்துக்கொண்டு கோமுட்டியைக் குறித்து புகழ்ந்தார்கள்.

4-விளக்குநின்றபோது சிநேகிதன் கையைப்பிடித்துக்கொண்டது.

ஒருகோமுட்டிக்கு மிகுந்த பிரியமானசிநேகிதன்ஒருநாளிராத்திரிவந்தான்அப்போதுகோமுட்டிகாசுபையைக்கொட்டிஎண்ணிக்கொண்டிருக்கையில் விளக்கு நின்றுபோய்விட்டதுஅப்போதுபணத்தைஎடுத்துக்கொள்ளப்போகிறானென்றுசந்தேகப்பட்டுக்கோமுட்டிஒருவுபாயஞ்செய்தான் அதாவது சிநேகிதனுடைய இரண்டு கைகளையுந்தான் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுநான்ஒருவாக்குக்கேட்கிறேன் இதுவரைக்கும் என்னிடத்தில்அதிகவிசுவாசமுடையவனாக விருந்ததுபோல் உன்னுயிருவரைக்குமிருக்கவேண்டும்அந்தப்படிக்கு இதோதீபம்வருகிறது அத்தீபமறிய கைபோட்டுக்கொடென்றுசீக்கிரமாகத்தன் பெண்சாதியை தீபங்கொண்டுவரச்சொல்லிக்கொண்டு வருகிறவரைக்குங் கைவிடாதிருந்துகொண்டுவந்தவுடனே தீபமறியப்போட்டுக்கொண்டு கையைவிட்டான்.

5-வது ஒருகிளிப்பிள்ளையை வளர்த்துவிட்டது.

ஒருகோமுட்டி ஒருகிளிப்பிள்ளையை வளர்த்து எதுகளைக்கேட்டாலும் அதுகளுக்கெல்லாம் பதிலுத்தரவாக அதற்குச்சந்தேகமில்லைஎன்றுசொல்லும்படியாக கற்பித்துத் தன்னிடத்தில் இருந்தநூறுவராகனைப் பிரதிதினமொவ்வொரு விடத்திலே புதைத்துவைத்துப்பிறரறியும்படியாக கிளியேஇவ்விடத்திலேபுதையலுண்டாவென்றுகேட்க அதற்குச் சந்தேகமில்லையென்றுசொல்ல அதன்சொல்லைக்கேட்டு எடுக்கிறவனைப்போற்றோண்டிஎடுத்துக்கொண்டுவந்தான் அதைஒருவன்பார்த்து இந்தக்கிளிமாத்திரம்ஒன்றிருந்தால்நான் குபேரனாகலாமென்று பேராசைகொண்டு விலைபேசிஆயிரம்வராகன்கொடுத்துஅதைதன்வீட்டுக்குவாங்கிக்கொண்டுபோய் நாலைந்து இடங்களிலே புதையலுண்டாவென்றுகேட்க அதற்கு சந்தேகமில்லைஎன்றது சொல்லுகிறசொல்லைநம்பி தோண்டிப்பார்த்துப்புதையல்அகப்படாமையினாலேமோசம்போனேனென்று துன்பமடைந்து ஓகிளியே என்வாயிலேமண்ணைப்போட்டாயாவென்றான், அதற்குச் சந்தேகமில்லையென்று தன் வழக்கப்படியே சொல்லிற்று அந்தச் சொல்லைக்கேட்டு நகைசெய்து அதைமாற்ற யுக்திபண்ணினான்.

6-வது பேபேயென்றது.

ஒருகோமுட்டி பத்துபேரிடத்தில் ஆயிரம்ஆயிரமாகவராகன் கடன்வாங்கிச் சிலநாள் வியாபாரஞ்செய்து பின்புபத்திரப்படுத்தி

வைத்துவிட்டு தன்வீட்டில் திருடர் நுழைவதனால் மிகுந்த நஷ்டத்
தையடைந்ததாக கூச்சலெழுப்பி, அந்தகடன்காரர்ஒருவனாகிய தன்
சிநேகிதனை தனியேயழைத்துத் தனக்குக்கனவில்லவறுமைவந்ததாக
சொல்லியழுதான் அவன் இவன்வசனத்தைபார்த்து மற்றகடன்கார
ரெல்லார்முன்னைத் தொடாமற்போகும்படியாய்ஒருயுத்திசொல்லுகி
றேன்என்பணத்தை மாத்திரங்கொடுத்து விடுகிறாயாவென்றான் அத
ற்குகோமுட்டி ஐயா அவ்வளவுஉபகாரம் இத்தருணத்தில் செய்வா
யானால்உன்னுடைய பணம் வட்டிமுதலும் பூமேல்வைத்துகொடுத்
துவிடுகிறேனென்றான் சிநேகிதன் மெய்தானென்று நம்பி உன்னை
யார்வந்துகேட்டாலும்பெப்பேயென்று சொல்லிக்கொண்டிருவே
றொன்றுஞ்சொல்லாதே அவர்கள் உனக்குப்பித்தம்பிடித்ததென்று
போய்விடுவார்களென்றான் கோமுட்டி அந்த யுத்தியைக்கொண்டு
கடன்காரரெல்லாம் ஏமாற்றினான் கடன்காரர்உபத்திரவமெல்லாம்
நீங்கிப்போனபின்பு அவனுக்குயுத்திசொல்லிக்கொடுத்தசிநேகிதன்
வந்து என்கடனைகொடுவென்றுகேட்க பெப்பேயென்றான் சிநேகி
தன் எனக்குகூடவாவென்றான் அதற்கந்தகோமுட்டிஉனக்குப்பெ
ப்பேதான் உன்பாட்டனுக்கும் பெப்பேதானென்றான்.

7-வது சண்டையின் சமாச்சாரஞ் சொன்னது.

ஒரு ராஜாவானவன் தன்பகையாளிவருகிற சமாச்சாரத்தைக்
கேள்விப்பட்டுத் தன்பட்டணத்துக்குப் பத்துநாழிகைவழிதூரத்தி
ல்குறுக்காகப்போய் மடக்கிச்சண்டை பண்ணும்படியாக சேனை
களைகூட்டி மந்திரியையனுப்பினான் அந்த ஊர்கோமுட்டி!சிலசரக்கு
கள்எடுத்துக்கொண்டுதண்டிலே விக்கிரயம்பண்ணும்படி கொண்டு
போனான் அங்கேமந்திரிதோற்றுஓடிப்போனபடியால்கோமுட்டிப
யந்துகடையைச்சுருட்டிக்கொண்டுஓடிவந்தான் வரும்போதந்தரா
ஜாண்டைசமாச்சாரத்தைஅறிய அங்கிருந்துயாராவதுவருகிறபேர்
உண்டாவென்று மெத்தையின்பேரிலிருந்துபார்த்துகோமுட்டியை
கண்டு அழைத்துஜயம்யாருதென்றார் ஜயம்நம்முதே யென்றான் அ
தற்குராஜா எவ்விதத்திலேயென்றுகேட்டார் கோமுட்டிசுவாமிச
திரிகள தங்களாலே கூடியமட்டும் வருத்தப்பட்டு நம்முடையவர்
கள் ஓட்டத்தை பிடிக்கமாட்டாமற் போனார்களென்றான் அதைக்
கேட்டு ராஜாதான் அடையவேண்டிய விசனத்தோடு கொஞ்ச சந்
தோஷத்தையுமடைந்து அவனை மெச்சினார்.

8-வது கண்சிமிட்டியகுற்றம் தப்பிததுகொண்டது.

ஒருகோமுட்டி ஒருநாள் இராசாவின் அரண்மனைக்குச் சமீப
மாகப்போகும்போது அதிரூபவதியாகிய ராஜாவின்பெண்சாதிமெ
த்தையின்மேலிருந்து ஜன்னல்வழியாலேதெருவைபார்த்துகொண்
டுநின்றாள் கோமுட்டி அவள் தன்னை விரும்பி பார்க்கிறாளென்றுநி
னைத்து அவளை உற்றுநோக்கி கண்கள்சிமிட்டிசைகைபண்ணினான்

அவளதை யன்றிராத்திரி தன் புருஷனுக்கு தெரிவித்து நாளைக்கு சாயங்காலம் இந்த ஊரிலிருக்கிற கோமுட்டிகளையெல்லாம் அரண்மனைக்கெதிரே வந்து நிற்கும்படியாகச்செய்தால் அவனையின்னானென்று காட்டுகிறேனென்றாள் இராஜா மறுநாளுதயத்தில் இன்றைக்கு மூணுசாமத்திற்குமேல் ஐந்துவயது பிள்ளைமுதலாக இந்த ஊரிலிருக்கிறகோமுட்டிகளெல்லாம் அரண்மனைக்குமுன்பாகவந்துசேரவேண்டியது வாராதவனுக்கு பெரிதானதண்டனை கிடைக்குமென்றுபறைசாற்றுவித்தான் உடனே கோமுட்டிகளெல்லாம் ஓரிடத்திலே கூடி நமக்குள்ளே யாராவது ராஜாவுக்கு குற்றஞ்செய்தவர்களுண்டோவென்று விசாரித்து கண்சிமிட்டினவன் தான்செய்தகுற்றத்தை சொல்லக்கேட்டு திகிலடைந்து ஆலோசித்து இந்தேதுமுதல் அரசனிடத்திலே தப்பிவருமளவும் ஓயாமல் கண்ணைசிமிட்டிகொண்டிருவென்று கற்பித்து கெவின்படி எல்லோரும் அரண்மனையெதிரே போய்ச்சேர்ந்தார்கள் ராஜா தன் பெண்சாதியாலே அவனை யறிந்து சபையிலேவந்துட்கார்ந்து யழைத்து நேற்றுநீயேன் கண்ணைச்சிமிட்டிகொண்டேநின்றாயென அவன்பின்வந்தகோமுட்டிகள் இவனுக்கிருதப்போலிருந்து ஒவ்வொருகாலத்திலே நேத்திரவாய்வுவருகிறதுண்டு அதுஇந்ததடவை மூன்றுநாளாகக்காண்கிறதென்றாரதை கேட்டுராஜா அவனிடத்தில் யாதொருகுற்றமுமில்லையென்றுநிச்சயித்தார்

## 9-வது இரண்டுபேருக்கு சாட்சி சொன்னது.

ஒரு கிராமாதிபதியினுடையகுதிரையை சமீபத்திலிருக்கிறஒரு பாளையக்காரன் திருடிக்கொண்டுபோய் வாலை கத்தரித்துப்போட்டு தன்வீட்டிலேயேவைத்துகொண்டான் கிராமாதிபதிபோக்கடிபிடித்துராஜாவிடத்திலேபோய் பிரியாதுசெய்தான் ராஜா அதுவுன்னது தானென்பதற்குசாட்சியுண்டாவென்றார் என்கிராமத்தில்கடைகாரகோமுட்டியிருக்கிறானென்றான் பாளையக்காரனையழைத்துவிசாரணை செய்ய அதுதன் குதிரையேயென்றும் தனக்குபிரதிவாதியின்சாட்சியென்றுசொன்னான் அரசன்கோமுட்டியைபார்த்துஇதுகிராமாதிபதிகுதிரையாவென்றுகேட்டார் கோமுட்டிகிராமத்தானுதென்று மெய்சொன்னால் தன்வீடு கொள்ளைபோமென்றுபாளையக்காரனுடையதென்று சொன்னால் கிராமத்தைவிட்டு ஓடிப்போக வேண்டியதல்லாமலும் அந்தப்பொய் வெளிப்பட்டால் தெண்டனைகிடைக்குமென்றுஞ் சற்றுநேரமாலோசித்திரண்டுபேருக்குமனுகூலம்போல் தோன்றும்படியாகவும் உண்மைவெளிப்படும்படியாகவும் உபாயந்தெரிந்துகொண்டுராஜாவைப்பார்த்துசுவாமி இந்தகுதிரையைமுன்னேபார்த்தால் கிராமத்தான் குதிரைபோலவும்பின்னேபார்த்தால் பாளையக்காரன் குதிரைபோலவும தோன்றுகின்றதென்றான் ராஜா மிகுந்த புத்திசாலியானபடியால் அவன்உபாயமாகச்சொல்லி அதற்குமுன்னே என்றதால் திருவடிவருவதற்குமுன்னேயென்றும

கம்பனிற்படி யிருக்குதென்றும் பின்னே என்றதனால் திருவடிவந்
தபின்னே என்றும்வால் நூதனமாக தரிக்கப்பட்டதென்றும்பொ
ருள்கொண்டு அக்கோமுட்டிபுத்தியை மெச்சிக்கொண்டு கிராமத்
தான் பட்சந் தீர்ப்புசெய்தார்.

## 10-வது கோமுட்டி தானஞ்செய்தது.

ஒருகோமுட்டி தன்கடையில்வந்த பூனையின்மேலே ஒருசிறை
கல்லைவீசினான் அதன்பேரில்பட்டு அதுயிறந்துபோய்விட்டது கோ
முட்டி அதுமகாபாதகமாச்சுதேயென்று பயந்துமறுநாள் தன்வீட்
டுக்குவந்த புரோகிதனைப்பார்த்து சுவாமிஒருவன்பூனையை கொன்
றேனேயானால் அதற்குபிராயச்சித்தமென்ன செய்கிறதென்றான் புரோ
கிதன் பொன்னிலே பூனையைப்போலுருவஞ்செய்து தானம் பண்
ணவேணுமென்றான் கோமுட்டி அவ்வளவுக்குந் திடமில்லாதிருந்
தால் புரோகிதன்வெள்ளியினாலாவது செய்யவேண்டு மென்றான்
கோமுட்டி அவ்வளவுக்குந் திடமில்லாதிருந்தாலோ வென்றான் பு
ரோகிதன்தாம்பிரத்தாலாவது செய்யவேண்டுமென்றான்கோமுட்டி
அதற்கும்வழியில்லாதவனாயிருந்தாலோவென கொஞ்சம்வெல்லமா
வது சம்பாதித்து பூனைவுருவத்தைச் செய்தாகிலும் தானம் பண்
ணவேண்டுமென்றான் அதைக்கேட்ட கோமுட்டி சரியென்றுள்
ளே எழுந்துபோய்ஒருகொட்டைபாக்களவு வெல்லமெடுத்துபூனை
யுருவஞ்செய்துதாம்பூலத்துடனே பிராமணன்கையில் தத்தம்பண்
ணி பூனையைகொன்றபாவம் போச்சுதென்று புரோகிதன்வாயினா
லே முக்காலுஞ்சொல்லுவித்துப் பின்பு அசதியிலே அந்தவெல்லத்
தை பிடுங்கிதன்வாயிலே போட்டுகொண்டான் புரோகிதன் ஓய்
கோமுட்டி இப்படிசெய்யலாமாவென்றுகேட்க அதற்கந்தகோமு
ட்டி ஐயாசுவாமி கோபித்துகொள்ளாதேயும் பூனையைகொன்றபா
வம்உம்மதாகவும் வெல்லந்தின்றபாவம் எனதாகவு மிருக்கட்டுமெ
ன்றான்.

## 11-வது-பூனைவரங்கேட்டது.

மதுராபுரியென்னும்பட்டணத்தில் பாண்டியராஜன் சபையி
லேஇருபதுவருஷகாலந் தினந்தோறும்போய்வந்துகொண்டிருந்த
ராசாவின் கைவசம்பார்த்திருந்த ஒருகுடித்தனகாரன் வீதியிலே
போகையில் எதிரிலே அவசரமாகவந்துஒருவன்கைதன்மேலேபட்
டபடியால்எண்டாமுட்டாளே ஒத்திப்போகலாகாதா வென்றானத
ற்கவன்நீஒற்றிப் போகலாகாதா தேவடியாள்மகனேஎன்றான் உட
னேயந்தகுடித்தனகாரன் ராசனைகண்டு என்னை ஒருவன்தேவடியா
ள்மகனேஎன்று தூஷணஞ்செய்தானென்றுசொல்ல யரசன்உம்மு
டையபெருமைக்கு அதைஒருகாரியமாக நினைக்கலாமாவென்றான்
அதுகேட்டந்தகுடித்தனகாரர் மகாராஜாநெடுங்காலமாகஉங்கள் ச
முகங்கார்த்திருக்கிற என்மேல் உங்களுக்கு ஏதோதயவுதப்பியிருக்
கிறதாக தோன்றுகின்றது அப்படியே சோரவிடவேண்டாம் உங்க
ள்சபையில் அவனையழைப்பித்து விசாரணைசெய்யவேண்டுமென்று

ன்ராசன்நகைசெய்தயவனை யழைப்பித்து நீயந்த பெரியமனுஷனைத் தேவடியாள்கனேயென்று சொல்லலாமாவென்றுரதற்கவன் நான் அவர்களைசளிக்கப் பாத்துவிட்டுச் சாகும்படியாக இந்த ஒருதரமாத்திரம் அனுக்கிரகம் பண்ணினல் போதுமென்று கேட்டான் இப்படிஇவன்கேட்டத்திலே சம்பத்தும்புத்திரபவுத்திரபாக்கியங்களுபூரணாயுளும்மேலானவீடுபேறெக்கிரம்என்கிறஇவைமுதலாகியசமஸ்தவரங்களும் அடங்கியிருக்கையினாலே தெய்வம்அவன்யுத்திக்காகச்சந்தோஷத்தையடைந்து அப்படியே கொடுத்தருளச்செய்தது.

### 12-வது செம்பைத்திருடனத்தனித்தது.

ஒருகோமுட்டி ஒருசெம்பிலே தண்ணீர்கொண்டுபோய் அதைசற்றே எட்டவைத்துவிட்டு ஒரு செடிமறைவிலே சலபாதைக்கு உட்கார்ந்தான் அங்கேசிலதிருடர் அந்தசெம்பை திருட தாப்புகொண்டிருந்தார்கள் கோமுட்டி அதையறிந்துஓசோசான் அந்தபதக்கத்தைபோட்டு வராததினாலல்லவோமலசுத்தியாகவில்லை அதைப்போட்டுகொண்டுவருவோமென்று தன்னிலேபேசுகிறாப்போல அவர்களுக்குகேட்கும் படியாகச்சொன்னான் திருடர்மறுபடியும் வருவாரென்றுசும்மாயிருந்தார்கோமுட்டிசெம்பை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான்பிறகு ஊரிலேசொல்லி திருடனைபிடிக்கச் செய்தான் ஆதலால்யோசனையுள்ளவன் ஆபத்துகாலத்திலே தப்பித்துக்கொள்வான்.

கோமுட்டிகதைமுற்றிற்று.

அத்தியாயம் 4 க்கு கதைகள் 71

---

# வேடிக்கை கதைகள்.

---

## ஐந்தாமத்தியாயம்.

ஒரு பாக்கியவான் விஸ்தாரமாக பணஞ் செலவழித்து ஒன்றின்பின் ஒன்றாக எட்டுகட்டு வீடுகட்டி எட்டாவதுகட்டிலே காணப்போதுமிருக்கும்படியாக குலோபு கண்ணாடி ரசகுண்டு சித்திரபடம்இதுகளால் அலங்கரித்துகொண்டிருந்தானப்படியிருக்கிறகாலத்திலே ஒருகாதவழிக்கப்புறம் ஓர்ஊரிலிருக்கிற யிவனுடையசினேகிதன்மிகவுமவறுமைவந்தமையால்தன்குமாரனைசாப்பாட்டுசெலவுக்கு எவ்வளவாவது கேட்டுவாங்கிவாவென்றிவரிடத்திலனுப்பினனந்த பிள்ளையானவன் பசியாக இளைப்புடன் வந்தான் வந்தவனைபாக்கியவான்கண்டுக்ஷேமம்விசாரியாமல் யிட்டுகொண்டுபோய்தான்கட்டியவீட்டை ஒவ்வொருகட்டாக காண்பித்துதனக்கிருப்பிடமாகசெய்த கடைசிகட்டையுங் காண்பித்தானதுகண்டு அந்தப்

பையன்கோபத்தையெல்லாம் உள்ளே யடக்கிக்கொண்டு ஐயாஉனக்குபிடம்இந்த கடைசிகட்டிலேவைத்திருக்கிறேயொருவேளை நீயின்றுப்போலச்செத்தால்இத்தனை வாசற்படிகளிலே நுழைந்து எடுத்துக்கொண்டுபோகிறபோது சங்கட்டமாச்சுதே என்றான். வீட்டுக்காரன்காம்குடிபோவதற்கு முன்னே பொல்லாத அபசவார்த்தைகளைபேசினானென்றுரைத்த கோபத்தைமனதில் அடக்கிக்கொண்டு வந்தகாரியத்தைவிசாரித்து எல்லாவற்றிற்கும் உனதகப்பனை வரச்சொல்போவென்றனுப்பினான் அப்படியே குமாரன் போய்ச்சொல்லகேட்டு அச்சிநேகிதன் கா[illegible]த்துக்கொண்டு வந்தான் அவனையுந் தாகத்துக்குச்சாப்பிடுகிறாயாவென்றுகூட விசாரிக்காமல் வீடுமுழுதும் அழைத்துக்கொண்டுபோய் காட்டி இப்படி உன்மகனுக்கு காண்பித்தபோது இப்படிப்பட்டபொல்லாத சொல்லை சொன்னானென்று பையன்சொன்னபடி சொன்னதைகேட்டு சிநேகிதனானவன் அந்தபாக்கியவானைப்பார்த்து அவன் சிறுபிள்ளையாகையால் ஆலோசனை செய்யாமற்சொல்லிவிட்டான் அதை நீ எவ்வளவும்மனதில்வைக்க வேண்டியதில்லை அப்படியே நீயுட்கட்டிலிறந்துபோனால்இக்கட்டிலின் பின்புறத்துச்சுவரை யிடித்துப்போட்டு தாராளமாகப்படுத்துக்கொண்டு போகலாமென்று சொன்னான் பணக்காரன் கேட்டு பையனாவது எனக்குமாத்திரஞ் சாவுகோரினான் இவன் வீட்டுக்கு அழிவுநினைத்தானென்று அதிகதுக்கத்தையடைந்து சற்றுநேரமாலோசித்து உடம்பு நிலையாமையுஞ் செல்வநிலையாமையுமறிந்து சிநேகிதனுக்கு வேண்டியபொருள்களைக்கொடுத்து உபசாரஞ் சொல்லியனுப்பினான்

## 2-வது உமேரி பாக்கியவானானது.

ஒருமனுஷன் சிலதிரவியங்களைஎடுத்துக்கொண்டுபோய் ஒருமகாராஜாவின் சமூகத்தில் உமேதுவாரிகளுடனே கூடித்திரிந்துகொண்டிருக்கும்போது சிலகாலங்களில் தான்கொண்டுபோனதிரவியங்களெல்லாஞ் செலவாகிப்போனதினாலே விடியசாமத்துக்கெழுந்துரொட்டிகிடங்குக்குப்போய் மாவரைத்து அதில்வருகிறகூலி சிலவுசெய்துகொண்டு பத்துமணிக்குமேல் உமேதுவாரிகளுடனே கூடஉமேதுபண்ணிக்கொண்டிருந்தான் ஒருநாள்ரொட்டி கிடங்கு தெருவழியாக அந்தமகாராஜாவானவர் சவாரிபோகும்போது அவன்மாவரைப்பதைகண்டு சாயங்காலந் தமதுசமூகத்தில அந்தஉமேதுவாரியைகண்டு வலதுகையைமூடிக்கொண்டு பிரதக்ஷணமாக சுற்றிகாட்டி மாவரைக்கும்படியாக நேரிட்டதென்னவென்று கேட்டார் அதற்குப்பதிலுத்திரவு உமேதுவாரி குறிப்பாகவயிற்றை காட்டிபின்புகையைவிரித்துகாட்டி பின்புஇரண்டுவிரலைகாட்டி வயிற்றுக்கில்லாமையாலே கூலிவேலைசெய்து இரண்டுபணஞ் சம்பாதித்து சாப்பட்டுகொண்டுஉன்னுடைய சமுகங்காத்திருக்கிறேனென்ன வறிவித்தான் இந்தகதைகளை சமுகத்திலேயிருக்கிற மந்திரிமுதலாகிய உத்தியோகஸ்தர்களெல்லாருங்கண்டு இராஜாவிடத்திலே இவனுக்கு மி

ஞ்சி அக்காரன் ஆலோசனைக்காரன் வேறில்லையென்று அந்த உமேதுவாரிவீட்டுக்கு அன்றையராத்திரிபோய் முதற்கட்டிலே நின்றுகொண்டுமந்திரியைபார்த்து எங்கேவந்தீரென்றுகேட்டான் உத்தியோகஸ்தரெல்லாந்தங்களுக்கு மடங்கினவரேயல்லாமல் வேறில்லை தங்களிஷ்டப்படிக்கு அவர்கள் நடப்பார்கள் தங்களுக்குமிராஜாவுக்கும் நடந்தசெய்கையைதெரிவிக்கவேண்டுமென்றான்கையைமூடிக்கொண்ட சமாசாரத்தை வெளிப்படுத்தவேண்டாமென்றும் பிரதக்ஷணமாகசுற்றிகாட்டினது தேகத்தைசுற்றிபார்த்தீரென்றுகேட்டது யதற்குப்பதில் நான் வயிற்றை காட்டினது சகலசமாச்சாரமும் என் வயற்றுக்குள்ளே யிறக்கிறதென்றும் கையை விரித்து காட்டினது ஒரு சமாச்சாரமும் வெளிப்படுத்தவில்லையென்றும் இரண்டு விரலைகாட்டினது இரண்டுநாளைக்குள்ளே எல்லாம் விவரமாகத் தெரியப்படுத்துகிறே னென்றுஞ் சொன்னதென்றான் இதை கேட்டவுடனே மந்திரி அஞ்சிதானுமெல்லாருமாக இருபதுலக்ஷம் வராகன் வரிபோட்டு கொண்டு அதைக்கொண்டுபோய் உமேதுவாரியி னிடத்திற்செலுத்தி எங்களை எல்லாம் காப்பாற்றவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்மறுநாளையதினம்உமேதுவாரி பல்லக்கிலேறிக் கொண்டு வருகிறபோது வழியிலிராஜன்கண்டு தன்சவாரியைநிறுத்தி இவ்வளவுசம்பத்தும் எவ்விதமாகவந்ததென்று இரகசியமாககேட்டார் உமேதுவாரி உங்களிடத்தில்நடந்தசைகையினாலே வந்தது என்றுதெரிவித்தான் அதை கேட்டுஇராஜா சந்தோஷித்து தன்னிடத்தில்அவனைமந்திரியாக வைத்துகொண்டார் ஆகையால் வல்லவனுக்குபுல்லும் ஆயுதமென்ற பழமொழியை உமேதுவாரி ஒருசிறியகாரியத்தை பெரியகாரியமாகதெரிவித்தார்

8-வது புகழ்சம்பாதிக்கபோய் பழிசம்பாதித்தது.

மதுராபுரியென்னும் பட்டணத்தில் பாண்டியராஜன் சபையிலேஇருபதுவருஷகாலந் தினந்தோறும்போய்வந்துகொண்டிருந்தஇராஜாவின் தயவு சம்பாதித்திருந்த ஒருகுடித்தனக்காரன் வீதியிலேபோகையில் எதிரே அவசரமாகவந்தஒருவன் கை தன் மேலே பட்டபடியால் என்டா முட்டாளே ஒதுங்கிபோகலாகாதா தேவடியாள்மகனே யென்றான் உடனே அந்த குடித்தனக்காரன்இராஜனைக்கண்டு என்னையொருவன் தேவடியாள் மகனேயென்று தூஷணைஞ்செய்தானென்றுசொல்ல அரசன் உம்முடைய பெருமைக்குஅதைஒருகாரியமாக நினைக்கலாகுமாவென்றான் அதுகேட்டந்தகுடித்தனக்காரன் மகாராசாவே நெடுங்காலமாக உங்கள்சமுகங்கார்த்திருக்கிற என்மேலேஉங்களுக்கு ஏதோ தயவுதப்பிருக்கிறதாகத்தோணுகிறது அப்படியே சொல்லிடவேண்டாம் உங்கள்சபையில் அவனையழைப்பித்துவிசாரணை செய்யவேண்டுமென்றான் அரசன்நகை செய்து அவனை அழைப்பித்து நீயந்த பெரிய மனுஷனைத் தேவடியாள் மகனே யென்று சொல்லலாமா வென்றதற்கவன் நான் அவச

ரதமாகப்போகும்போது அவர்சந்தித்தார் அப்போது என்னை இவர்யேலேபட்டது அதற்கு இவர் முட்டாளேயென்றார் அந்தக்கோபத்தினாலே தேவடியாள் மகனேயென்றேனென்றான் அரசன் அந்தக்குடித்தனக்காரனைப்பார்த்தான் சொல்லியது மெய்தானென்று சொல்லுகிறான் இனிநடக்க வேண்டியதென்ன சொல்லென்றானதற்கு அவன் நேற்று பலபேர் நடந்தவீதியெல்லாம் சொல்லிய இன்றையதினமுங்களுடைய மகாசபையில்தானே ருசுவாச்சுதே மகாராசாவின் சபையிலிருக்கிற குலஸ்திரீ மகநாயகிய இன்றைக்கு இன்றுமுதலாகத் தேவடியாள்மகனென்று யாவருஞ்சொல்லவேண்டியதில்லையென்று பட்டணமெங்கும்பறை சாற்றுவிக்கச்சொல்லிக்கேட்டுக்கொண்டான், அப்படியேயரசனுத்தரவுசெய்தார் அப்பறைசாற்றுதல்கேட்டெல்லோரும் அவனைத்தேவடியாள்மகனேயென்றேநினைத்தார்கள் ஆகையால் யுத்திசாலிகள் குளிக்கப்போய்ச்சேற்றைப் பூசிக்கொள்வார்கள். 4-வது, கடன்காரனுக்குப்போக்குகாட்டியது.

ஒரு செட்டிகையில் ஒரு குடித்தனக்காரன் ஆயிரம்வராகன்கடன் வாங்கிக்கொண்டான். செட்டிவந்து கெடுவிலேகடன்கேட்டான் குடித்தனக்காரன் வருஷக்கெடுவாக சிலவருஷங்கள் சொல்லிக்கொண்டுவந்து அதன்பின் வருந்திகேட்டவிடத்து மாதத்துக்கெடுவாகச் சிலமாதங்கள் சொல்லிப் பிறகுவாரக்கெடுவாகச் சிலவாரங்கள்சொல்லிக்கொண்டுவந்து கடைசியில்தினக்கெடுவிட்டான் அதுவரையில்நாற்பது வருஷகாலமாகத் திரிந்துதிரிந் திளைத்துச்செட்டி இன்னையதினம் எப்படியும் கொடுப்பானென்று நம்பிக்கொண்டுவந்தான் தெருக்கோடியில்கடன்காரன் வருகிறதைக்கண்டு குடித்தனக்காரன் சீக்கிரமாக எழுந்து ஒருபுட்டுக்கூடையிலே புளியங்கொட்டையையெடுத்துக்கொண்டு ஒருகரண்டிகாம்பாலே வேலிக்காலில் குழிதோண்டி வரிசையாகப்போட்டுக்கொண்டிருந்தான் செட்டிவந்து வீட்டுக்காரனெங்கேயென்றுகேட்டான் வீட்டுமனிதர் கொல்லையிலேயிருக்கிறாரென்று சொன்னார்கள் அதைக்கேட்டுக்கொண்டு கொல்லையிலிருந்தகடன்காரனிடத்திலே செட்டிப்போய் நிற்க கடன்வாங்கினவன்பார்த்துச்சீக்கிரம் சீக்கிரமாகப்பின்னையும் புளியங்கொட்டைகளைப் போட்டுதண்ணீர்வார்த்துக்கொண்டேயிருந்தான் செட்டி நான்வந்தகாரியத்தைப் பராமுகமாயிருக்கிறீரேயென்றான் குடித்தனக்காரன் உம்முடைய காரியத்திலே நான் மிகசாக்கிரதையாயிருக்கிறேன் உனக்குத் தெரியவில்லையாவென்றான் ஆனால் சந்தோஷம் வராகனைக்கொடுமென்றான் இதோ புளியங்கொட்டைகளைபோட்டுக்கொண்டிருக்கிறேனே இதுகளெல்லாம் வளர்ந்து மரமாகிக்காய்த்தவுடனே முதற்காய்ப்பிலே ஆகிறபுளியை உம்முடைய கடனைச்செலுத்திப்போடுகிறேனென்றான் அதைக்கேட்டு செட்டி உள்ளேவயிற்றெரிச்சலுடனே சிரித்தான் அதுகண்டு குடித்தனக்காரன் கடனுக்குவழிபிறந்ததே இப்போதுநீசிரிக்கமாட்டாயாவென்றான்.

## 5-வது குருவுக்குமோசம்பண்ணினது.

ஒருசிஷியன் அவனுடைய ஆசாரியர் வருஷாவருஷம் தட்சனைக்காக கெடுந்தூரத்திலிருந்துவந்து கண்டுகொண்டேவந்தார் வந்தபோதெல்லாம் தனக்கு கையில்லாமலிருக்கிறதாக இதமாகப்பேசி வருகிறவருஷந்திற்குக் கொடுக்கிறேன் தயவுபண்ணிபோய் வாருங்களென்று உபசாரஞ்சொல்லிக்கொண்டே வந்துபின்புஒருதடவை மேல்வருஷத்துக்கு அவசியமாக கொடுப்பேனென்று அனுப்பினான் இந்தத்தடவை தப்பாமற் கொடுப்பானென்று ஆசாரியர்வந்தார் உடனேசிஷன்எழுந்து ஆசனங்கொடுத்து உட்கார்ந்தபிற்பாடுகோவித்துக்கொண்டு பிற்பாடுவிசாரித்துசுவாமி இருங்கள் சீக்கிரமாகவந்துஅனுப்புகிறேனென்றுதான்போய் சாப்பிட்டுவிட்டுபெட்டியை எதிர்க்க கொண்டுவந்து வைத்து திறந்து உள்ளே வலதுகையைப் போட்டு மூடிப்பிடியாகப் பிடித்துக்கொண்டு ஆசாரியார்இத்தனை தான்கொட்டாமல்கெடுவைத்துக்கொண்டுஆசாரியிடத்துக்குவந்து இனிசுவாமியெழுந்திருங்களென்றான் ஆசாரியர் இத்தனைநாள்கொடாமல்கெடுவைத்துக்கொண்டுவந்தாலும் இப்போது ஒருபிடிவராகன்கொடுக்க எடுத்துக்கொண்டுவந்தானென்று பொங்கிக்கொண்டுபுறப்பட்டார் பின்னாலேசிஷியன்போனான் நாலுநாழிகை வழிதூரம் போனபிற்பாடு சிஷயன்சுவாமி இது என்னமாதமென்றான் ஆசாரியர்இதுமார்கழிமாதமென்றார் சிஷியன்மூடிக்கொண்டுவந்த கையைமார்கழிமாதமுதல்ப்பதினைந்துமாதவரைக்கும்விரலைவிட்டு எண்ணிக் காட்டிப்பதினைந்தாமாதத்தில் வரச்சொல்லிக்கெடுவிட்டான் ஆசாரியர் எண்சாணுடம்பும் ஒருசாணுடம்பாகக்குன்றித்திகிலடைந்து வெட்கிப்போய்விட்டார் ஆகையால் பொய்யான பொருளாசை மெய்யான வருளாசை விளக்குமென்பது உண்மையே.

## 6-வது குடியக்கள் அதிகாரம் பண்ணினது.

அம்மட்டன் குயவன் வண்ணான் இம்மூன்றுபேரும் ஒருராசாவினுடைய தயவுசம்பாதித்தார்கள் இராசா உங்களுக்குவேண்டுவதென்னவென்றுகேட்டார் எங்களுக்குஉத்தியோகம்வேண்டுமென்றார்கள் இராசா அம்மட்டனுக்குடபேதார்உத்தியோகம் குயவனுக்குபேஷ்கார்உத்தியோகம் வண்ணானுக்குஅமுல்தார்வுத்தியோகமும் நியமித்து சொன்னது அப்படியே அவர்கள் அதிகாரம் பண்ணிக்கொண்டுவருகையில் ஒருகுடித்தனக்காரனை ஒருபோக்கிரியடித்துப்போட்டார்கள் அந்தக்குடித்தனக்காரன்டபேதாரிடத்தில் வந்து நடந்தவர்த்தமானத்தைசொல்லி சகலமுந்தங்களுக்கு அறிக்கையிட்டேன் தாங்கள்பார்த்து இனிவைத்தால்குடுமி சிரைத்தால் மொட்டையென்று கெப்பிரமாகச் சொன்னான் அம்மட்டன்தொழிலைக்காட்டிதன்னை நிந்திக்கிறதாகநினைத்து அவனை பன்னிரண்டடி அடிக்கச்சொன்னான் அதைப்பட்டுக் கொண்டு பேஷ்காரனிடத்திற்குப்போய் நடந்தவர்த்தமானமெல்லாஞ்சொல்லிச் சகலமுந்தங்களுக்குத்தெரிவித்தேன் தாங்கள்பார்த்தினி சட்டியாகப்பண்ணினாலும்

சரிபானையாகப்பண்ணினாலும்சரியென்று உலகவழக்கமாக சொன்னான் தன்தொழிலைக்காட்டிக்குயவனென்றுபழிக்கிறதாக நினைத்துக் கோபங்கொண்டு இருபத்து நாலடிக்கச்சொன்னான் அதைபட்டுக்கொண்டு அவுல்தாரிடத்திற்குப்போய் நடந்தவர்த்தமானங்களைச் சொல்லியெல்லாம்விபரமாகத் தங்களுக்குத் தெரியப்படுத்தினேன் தாங்கள்பார்த்துஇனிவெளுத்துவிட்டாலுஞ்சரிசும்மாவிட்டாலுஞ் சரியென்றுசொன்னான் தன்தொழிலைக்காட்டித்தன்னைவண்ணானென்றுஇகழுகிறதாகநினைத்து முப்பத்தாறடி அடிக்கச்சொன்னான் அதைப்பட்டுக்கொண்டுராசாவினிடத்திலே போய்பிரியாது செய்தான் இராசாஅடித்தவனையும் சாட்சிகாரனையும்அழைப்பித்துவிசாரணை பண்ணும்போதுபிரியாதுபண்ணிக்கொண்டவன் யோக்கியனென்றும் அடித்தவன்போக்கிரியென்றும் ருசுவாச்சுதே இப்படிநியாயமிருக்க அநியாயமாகஉத்தியோகஸ்தர் அடித்தகாரணமென்னவென்று அந்தமூன்றுபேரையும் அழைப்பித்துகேட்கத் தங்களைநிந்தித்ததாக அந்தகுடித்தனக்காரன் சொன்ன பழமொழிகளைச்சொல்லிக் காட்டினார்கள்இராசாதெரிந்துக்கொண்டுகுற்றமுள்ளவர்நெஞ்சு குறுகுறுமென்னுங் குறும்புள்ளகாதுதினவுதின்னுமென்கிறபடியே தங்கள்குற்றத்தை நினைத்துக்கொண்டு அநியாயஞ்செய்தார்களென்று கோபித்துக்கொண்டுஇனிமேல் எப்போதுங்குடிமக்களை உத்தியோகத்தில்வைக்கக்கூடாதென்று நிச்சயித்தார்.

7-வது வீணையை சேவகன் ஒடித்தது.

ஒரு இராசாவானவர் குந்தனமிழைத்துரத்தினம் பதித்த அருமையானஒருவீணையை அப்பியாசம் பண்ணிக்கொண்டே வருவார்அவர்ஒருநாள் சுருதிக்குத்தந்திகளைச் சரிபடுத்தும்படியாக முறுக்காணிபிடித்துப் பலதாமுறுக்கிப் பார்த்தார் அப்போது அவர்பக்கத்திலேநின்றஒருமூடசேவகன் அதைப்பார்த்துஇவர்இந்தவீணையைஒடிக்கமிகவும் வருத்தப்படுகிறாரென்றுநினைத்து ராசாயெழுந்து அந்தப்புரத்துக்குப்போய் வருகிறதற்குமுன்னேவீணையை ஒடித்துப் பொடிப்பொடியாக்கிவிட்டு அதிகசந்தோஷத்துடனேராசாவின்வரவைஎதிர்பார்த்துக் கொண்டிருந்தான் ராசாவந்துபார்த்து இப்படிபொடிப்பொடியாகும்படி யெப்படியொடித்தாயென்றுகேட்டார்சேவகன்தன்னை மெச்சுகிறதாக நினைத்து இதுசுவாமி தங்கள் அன்னவிசேஷத்தால் எளிதிலே ஒடிக்கத்தக்கவல்லமை அடியேனுக்குவந்ததென்றான் ராசபுத்தியீனர்கள்புத்தியாகச்செய்வதும் விபரீதமென்றுசொன்னார்.

8-வது மாட்டிடையன் சங்கீதவித்துவானைச் சூடியது.

ஒருமாட்டிடையன்லக்ஷ்மவாசன்புதைக்கப்பட்டுபாக்கியவானானான் ஒரு சங்கீதவித்துவானிடத்திற்கு போய்க் கீர்த்தனைகள் பாடினான் பாடும்போது இசைக்குத்தகப்படி கைகளைகண்களை அசைத்தான் அதைக்கண்டு இவனுக்குவலிபுகண்டதென்றுநினைத்து

இடையன்உட்சட்டிற்குப்போய் கூட்டுக்கோலைக்காயம்போட்டு விட்டுவந்து அழைத்தான் பாடகன்தனக்குவெகுமதிகொடுக்க அழைக்கிறானென்று போனான் அவ்விடையனை இரண்டாள்களை விட்டுப் பிடித்துக் கொள்ளச்செய்து கூடிவிட்டான் சங்கீதவித்வான் திகிலடைந்து அலரியழுதுக்கொண்டே தன்வீடுபோய்ச்சேர்ந்து ரணவயித்தியினால் குணப்படுத்திக்கொண்டு இனிமேல் யாவரிடத்திலும் போகலாகாதென்று நிச்சயித்துக் கொண்டிருக்கும்போது சங்கீதவித்வானுக்கு பழக்கமான ஒருஇலக்கணவித்துவான் அவனைபார்த்து நீர்சங்கீதத்தில் வல்லவராயிருந்தும் வருமையை யடைந்திருக்கவேண்டியதென்ன, யோக்கியமான ஒருராசாஎனக்கிஷ்டனாயிருக்கிறான் அவனிடத்தில் உமக்குச் சிபாரிசுபண்ணுகிறேன் வாருமென்றழைத்துக் கொண்டுபோய்ச்சிபாரிசுபண்ணியாடச் சொன்னான் உத்தரவில் ஆலாபித்து தனயதசித்தங்களைப்பாடினான் ராசாகேட்டிருந்து சந்தோஷத்தையடைந்து சகலவெகுமானமுஞ் செய்யநினைத்து எடுப்பித்துக்கொண்டுவர எழுந்து உட்கட்டுக்குப் போனான் அப்போதேசங்கீதவித்வானுக்குச் சந்தேகம்பிறந்து ஒருநாள் ஆலசியப்படவே இதுவும் கூட்டுக்கு எத்தனந்தானென்று ஓட்டம் பிடித்தான் எத்தனைபேர்போய் உபசாரஞ் சொல்லியழைத்தாலுந் திரும்பிப்பாராமல் வீடுபோய்சேர்ந்தான் இராசாவந்து இலக்கணத்துவித்துவானைப்பார்த்துசங்கீதவித்துவான் எங்கேயென்றான் அவர் என்னமோஒர்பயத்தினாலே யோடிப்போனாரென்றான் ராசாஇப்படிப்பட்ட அச்சம் என்னாலேவர வேண்டியதென்னவென்று விசனப்பட்டுச் சகலவெகுமதிகளையும் எடுத்துக்கொண்டு சங்கீதவித்வான்வீட்டுக்குபோய் அதிகமரியாதையுடன் கொடுத்துவிட்டு அவனைச்சந்தோஷபடுத்திஎன்னத்தினாலே ஓடிவந்துவிட்டீரென்று கேட்டார் முன்னாலே தன்னைக் கூடியசெய்தியைச்சொல்லி இப்போது மப்படியே நடக்குமென்று ஓடிவந்துவிட்டேனென்றான் அதுகேட்டு இராசா ஆச்சரியப்பட்டுமூடர்களுக்குபாக்கியம் வந்தால் செய்காரியந்தவிர காரியமறிந்து செய்யமாட்டார்களென்று சொன்னார்.

9-வது, ஆட்டிடையன்கீர்த்தனம்பாடுகிறதைப் பார்த்தழுதது.

ஒருபாடகன தான்போகிற காட்டுவழியில் ஆட்டுமந்தைவைத்துக்கொண்டிருந்த ஒருயிடையனைக்கண்டுயிவனிடத்திலேகீர்த்தனைபாடிப் பால்கேட்டு வாங்கிக்கொண்டு போவோமென்றுநினைத்துநேபோய்க் கடவுள் விஷயத்திலே உருக்கமாகப்பாடினான் பாடுகிறதைப்பார்த்து இடையன்தாரைதாரையாக கண்ணீர்விட்டழுதான பாடகன் அழுகிறவனைப்பார்த்து எனப்பா அழுகிறாயென்றுகேட்டான் நீகொணடி முடம் கிழமல்லவே நல்ல யௌவனமும் அழுதும் உடையவனாச்சே எனக்கு நேரிட்டிருக்கிற அனியாயத்தையன்னென்று சொல்லுவேனென்றான் பாடகன்யோசிக்கவேண்டியதில்லை அதைச்சொல்லுமென்றான் நேற்றுவிடிய சாமமுதற்கொ

ண்டிருந்துதலைவீங்கிச் செத்ததாகையால்நாளுநாழிகையாகக் கத்துகிறாயேஇன்னும்நாளுநாழிகைபோனால்தலைவீங்கிச்செத்துப்போவாயென்று அழுகிறேனென்றான்பாடகன்வெட்கப்பட்டு அருமையறியாதவிடத்திற்போனால் பெருமைகுறைந்துபோமென்கிறபழமொழிக்குஉதாரணங்கண்டோமென்று சொல்லாமற்போய்விட்டான்.

## 10-வது-கற்றுக்குட்டி வைத்தியம்பண்ணியது.

ஆயுள்வேதமென்கிற வயித்தியநூல் தெரிந்த ஒருவயித்தியன் ஒருபட்டணத்தில்கீர்த்தியுடனே வயித்தியம்பண்ணிக்கொண்டுவந்தானவனிடத்திலேவயித்தியங்கற்றுக்கொள்ளஒருவன் வந்துசேர்ந்து மருந்தையெடுத்துக்கொண்டு அவன்பின்னே போய்க்கொண்டு ஒருமாசமிருந்தான்உடனேவயித்தியற்கு அனேத்தியகாலம்நேரிட்டிறந்துபோனான் பிற்பாடுஅந்த மருந்துபடைநோயின் குணமும் மருந்தின்குணமும் செவ்வையாகத்தெரியாத அந்தக்கற்றுக்குட்டியெடுத்துக்கொண்டுதன்னிடத்திலேவயித்தியங்கற்றுக்கொள்ளஒருவனை வைத்துக்கொண்டுவயித்தியம்பண்ணப்புறப்பட்டான் பிரபலமான வயித்தியனிடத்தில் இருந்தவனாகையால்இவனும்கெட்டிக்காரனாயிருக்கலாமென்று ஒரு அதிகாரனுக்குவயித்தியம்பண்ண அழைத்துக்கொண்டுபோய் சீக்கிரத்தில் குணப்படுத்தும்படி வெகுவுபசாரம்பண்ணார்கள் அந்தமூடனப்படியேயாகட்டுமென்று இந்தநோய்க்குஇந்தமருந்தென்றுதெரியாமல்மருந்துப்பையில்பேதிக்கு யாராவதுகேட்டால் கொடுக்கும்படி மேலேவைத்திருந்தநேர்வாளமாத்திரைகளில் சுமார்ப்பத்துபதினைந்து மாத்திரைமட்டும்உரைத்துஉள்ளுக்குக்கொடுத்துவிட்டான்உடனே நோயாளிஅதிகபேதிகண்டுயிறந்துபோய்விட்டான் அவ்வீட்டிலேவேறே யாரும்ஆண்திசகில்லாமையால் பெண்கள் வைதியனுக் குபசாரஞ்சொல்லி இந்தப்பிணம் சுடுகாடுபோய்ச்சேரவேண்டும் உங்களைவிடவேறேசகாயம் இல்லையென்று வேண்டிக்கொண்டார்கள் அதற்குடன்பட்டுபாயிலேசுருட்டித்தலைமாட்டில்வைத்தியனும் கால்மாட்டில்கற்றுக்குட்டியுமாகயெடுத்துக்கொண்டு போகுயபோது ஆசனத்துவாரம்திறந்து போய்விட்டபடியால்மலம்தாரைதாரையாகக்கற்றுக்குட்டிமேல் விழுந்ததுமறுநாள் அவ்விருவரும்சீமான்வீட்டில்வயித்தியம்பன்னப்போனார்கள் அங்கே வயித்தியன்பையை யவிழ்த்துமாத்திரையையிழைக்கப்போனான் கற்றுக்குட்டிதலை மாட்டிலென்னையெடுக்கச்சொல்லி கால்மாட்டில்நீயெடுக்கிறதாயிருந்தால் அவிழ்தங்கொடுயில்லாவிட்டால் கொடாதேயென்று மறுத்தான் அதென்னவயணமென்று வீட்டுக்காரர் விசாரித்தார்கள்நேற்று ஒருவனுக்கு அவிழ்தங்கொடுத்துச் சீக்கிரத்தில்சாகும்படிச்செய்து இவர்தலைமாட்டிலெடுத்துக்கொண்டு கால்மாட்டிலென்னை யெடுக்கச்சொல்லியென்னுடம்பை யசூசமாக்கினார் ஆகையாலின்றைக்கும் அப்படி சம்பவிக்கப் போகுதென்று முன்சாக்கிறதை செய்கின்றேனென்

ளனதுகேட்டு அந்தவீட்டுக்காரர்கள் அஞ்சிபஞ்சிரண்டு பேரையும்நீக்கிவிட்டார்கள் ஆகையால்ஒருவன்தெரியாதகாரியத்திலே தெரிந்தவனைப் பிரவேசித்தால் பழிக்கும் பாவத்திற்கும் அவனுக்கும் இடமுண்டாகும் 11-வது செட்டிவீணாலோசனை செய்தது.

ஒருசெட்டிக்கடையிலேயுட்கார்ந்துக்கொண்டுதன் வியாபாரத்தைகூட முக்கியமாகயெண்ணாமல் பெரிதாகிய ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தான் ஒருவன் நூறுவராகனுக்கு சரக்குகொள்ள வந்தான் அதைக்கூட சட்டைபண்ணாமல் ஆலோசனையில்மூழ்கியிருந்தபடியால் சரக்குகொள்ளவந்தவன் என்ன செட்டியாரேமெய்மறந்தாலோசனைபண்ணுகிறீரென்றான் செட்டிஒரு கலியாணத்தைக்குறித்து ஆலோசனைபண்ணுகிறேனென்றான் சரக்கு கொள்ளவந்தவன் ஆலோசனை முடிந்ததாவென்றான் சரக்குகொள்ளவந்தவன் அது எப்படியென செட்டி இப்பட்டணத்துராசாமகள் புஷ்பவதியாய்மிகவுமழகுள்ளவளாயிருக்கிறபடியால் எனக்குஅவளைக்கலியாணமும்பண்ணிக்கொள்ளச் சம்மதிதானெனக்குஅவளைக் கலியாணமானபோதேஎன்குடும்பத்தாருஞ்சம்மதித்தபோது பாதிவிவாகம்படிந்தாற்போலத்தானே பெண்வீட்டுக்கார்சம்மதியானால் மற்றபாதியுமுடியுமென்றான் சரக்குகொள்ளவந்தவன்நகைத்து கிட்டாதாயின்வெட்டென மறஎன்றதைவிட்டுக்கிட்டாதபெண்ணைக்குறித்துஆலோசனை பண்ணுகிறவனைவிட வீணன் வேறில்லையென ஏகத்தாளி செய்துவிட்டுப்போனான்.

12-வதுஉடமையறியாதவர்கள்உடமையிட்டுக்கொண்டது,

எளியவராயிருந்த மூன்றுபேர்களுக்குத் தெய்வானுகூலத்தினால் சிலநகைகள்கிடைத்து ஒருவன்பொன்மோதிரம் ஒருவன்வெள்ளிஅரைநாண்கயிறும்ஒருவன்முத்துக்கடுக்கனும் அணிந்துக்கொண்டார்கள் இந்தமூன்றுபேரும்ஒருபொதுவிடத்திலேஉட்கார்ந்துகொண்டு மனமகிழ்ச்சியுடனிருக்கும்போது ஒருவனங்கேவந்துஎன் பசுவின்கன்றைப்பார்த்தீர்களாவென்றான் மோதிர மிட்டுக்கொண்டவனெழுந்திருந்து அதுதெரியும்படியாக கையைநீட்டிவிரலெண்ணிநானாழிகையாககாணோமல்லவாவென்றான் அரைஞாணிட்டுக்கொண்டவனெழுந்து அதுதெரியும்படியாய் அரையில்கையைவைத்துஇவ்வளவுஉயரமல்லவாவென்றான் கடுக்கன்போட்டுக்கொண்டவனெழுந்து அதுதெரியும்படியாக இப்படிதான்போச்சுதயிப்படிததான்போச்சுதென்றுதலையையசைத்தான் கேட்டவன் இவர்களற்பர்கள் இந்தவுடமைகிடைத்தது இந்திரபட்டங்கிடைத்தது போலநினைத்தார்களென்றுபரிகாசம்பண்ணிக்கொண்டுபோய் விட்டான்.

13- வது படித்தவன்பிரயோசனப்பட்டது.

ஒருவனுக்குஇரண்டுபிள்ளைகளிருந்தார்கள் அவர்களில்இளையபிள்ளை தாய்தகப்பன்சொன்னபுத்தியைக்கேட்டுவித்தையைக்கற்றுக்கொண்டான் மூத்தபிள்ளை அவர்கள்சொன்ன புத்தியைக்கேளா

மல்முட்டாளாய்ப்போனான் அந்தயிரண்டுபிள்ளைகளும் ஒருநாள்காட்டிலேயிலைபறிக்கப்போனார்கள் அப்போதங்கேமூத்த பிள்ளையானவன்ஒருகல்லிலெழுதியிருக்கிறதைக்கண்டுபடிக்கத் தெரியாமல்தம்பியையழைத்துஇக்கல்லைப்பாரென்றுசொன்னான் அவனதைப்பார்த்துஅதன்கீழேபதினாயிரம்வராகனிருக்கிறதென்றறிந்து அண்ணனுக்குவேறொன்றைச்சொல்லி மறைத்துபிற்பாடு அவனைக் காணாமல்வந்துதோண்டியெடுத்துக்கொண்டுபோய் பாக்கியவனாயிருந்தான் ஆகையால் முக்கியமாகக்கற்கவேண்டும்

## 14வது-வணக்கமுள்ள ஒருவன் மறியாதை பெற்றது,

இரண்டுபேர் அண்ணன்தம்பிகள் அவர்களில்மூத்தவன்எல்லாரிடத்திலும் வணக்கமுள்ளவனாயிருந்தான் இளையவன்துஷ்டனாகயெல்லாரையுந் திட்டிக்கொண்டிருந்தான் அப்படிஇருக்கஒருநாளந்த இரண்டுபேரும்ஒருஊருக்குப்போகிறபோது நாலுபேர்திருடர்கள் அவர்களைமடக்கிக் கொண்டார்கள் அப்போது சின்னவன் அவர்களைதிட்டினான் அவனைப்புரட்டிபுரட்டிமொத்தித் தவன்கையிலிருந்ததையெல்லாம்பிடுங்கிக்கொண்டார்கள் பெரியவன் மிகவும்வணக்கமுடன்பேசினான் இவனையொன்றுஞ்செய்யாமல் தங்களதுகையிலிருந்தது வராகன் பெறத்தக்க ஒருநகையுங் கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

## 15-வது- குணவானாலே குரும்பன்சாபம் நீங்கினது.

ஒருவனுக்குயிரண்டுபிள்ளைகளுண்டு அவர்களில்மூத்தவன்ஒருகுரும்புஞ்செய்யாமல்யோக்கியவனாயிருந்தான் இளையவன்துஷ்டப்பயல்களுடன் கூடிக்கொண்டுஎந்நேரமுங்குரும்புசெய்துக்கொண்டேயிருந்தான் இந்தயிரண்டுபிள்ளைகளும் ஊரண்டையிருந்த ஒருகாட்டிலேஇலைபறிக்கப்போனார்கள் அங்கேசின்னபையன் ஒரு ஆலமரத்தின்மேலேறினான் அம்மரத்தினுடைய பொந்தில் ஒருரிஷி கண்ணைமூடிக்கொண்டு தபசுபண்ணிக்கொண்டிருந்தார்ஒருகிளையைபிடித்து அவர்சடையில் முடிந்துவிட்டான் அது அவரைத்தூக்கிக்கொண்டுமேலேஎழும்பவே அவர் கண்ணைதிறந்துபார்த்து அவனுக்குசாபங்கொடுத்தார் பெரியவன்வந்து அவிழ்ந்துவிட்டான் அவனுக்குச் செல்வமுங்கல்வியுமுண்டாகும்படிக்கு வரங்கொடுத்து இன்னம் என்னவேண்டுமென்றார் என்தம்பிசாபம்நீங்கும்படிவரங்கொடுக்கவேண்டுமென்றானப்படியேவரங்கொடுத்தார் ஆகையினாலேகுரும்புபண்ணலாகாது.

## 16-வது-மாத்ராலேமாமிபார்பண்ணினைத்துக்கொண்டது.

ஒருரிலே தம்பிதமயன்மாராகிய இரண்டுபேர்பிராமணர் வர்த்தகத்தைக்குறித்து ஒவ்வொருத்தன் பெண்சாதியினிடத்தில் அவ்வாறு மாதத்திற்கும் சாப்பாட்டுக் கொடுத்துவிட்டு தூரயாத்திரைபோனார்கள்மூத்தவன் பெண்சாதி சிக்கினமாக அண்ணோடும் சாப்பிட்டு செலவிலே கூடக்கொஞ்சம் மீதியாகக் கொண்டுவந்தாள் இளையவ

ன்பெண்சாதி அண்டைவீட்டுக்காரியினிடத்திற்குபோய் என்புருஷன் வர்த்தகத்திற்குப்போயிருக்கிறார்எனக்குப் பெரியவர்களொருத்தருமில்லைநானெவ்விதமாக குடித்தனம்பண்ணுவேனென்றாளதற்கு அண்டைவீட்டுக்காரி பரியாசமாக மறத்திலே மாமியார்பண்ணிக்கொண்டேயானால் குடித்தனம்செம்மையாய்ப் பண்ணலாமென்றால் அதுநிச்சயமென்றெநம்பி ஒருசுச்சனல்மாமியார் செய்துக்கொண்டு அந்தமாமியாருக்குஒருகை யிரண்டு விரலைப்பார்த்துஇரண்டுபடி அரிசிசமையல்பண்ணிமாமியாருக்கு ஒருயிலைபோட்டுவட்டித்திருக்கிறதை மூத்தவன்பெண்சாதி வேளைக்குவேளை திருடிசாப்பிட்டுக்கொண்டுவந்தாள் இப்படி இருக்கும்போது வர்த்தகத்திற்குப்போனவர்கள்வந்துவிட்டார் மூத்தவன்பெண்சாதிதனக்குகொடுத்ததை அதிகமாய்ச்சேர்த்துக்கொண்டிருந்தாள்இளையவன்பெண்சாதிஅன்றையதினமே முறமெடுத்துக்கொண்டுகடன்வாங்கப்புறப்பட்டாள் இளையவன்கோபித்துக்கொண்டுஉனக்குகொடுத்த அரிசியெல்லாம் என்னமாய் போய்விட்டதென் றடித்தான் என்மாமியாருநானுஞ்சாப்பிட்டதேயல்லாமல் மற்றொருவருக்குங் கொடுத்ததில்லையென்று னவளாச்சரியப்பட்டு ம்மாமியாரேதடிமுண்டேயென்றான் மாமியாரைகாட்டினால் கோபமவந்துதிட்டி உன்மாமியாரையெடுத்துக்கொண்டு போ போ வென்று அடித்துத்துரத்திவிட்டான் அவளழுதுக்கொண்டே மாமியாரை யிடுப்பில்வைத்துக்கொண்டு ஊருக்கப்புறம் பிடாரிக்கோயிலண்டையிற்போகையில் யிருட்டிப்போச்சுது அங்கிருந்த ஆலமரத்தின்மேலேறி மாமியாரையும்வைத்துக்கொண்டு ஒருகிளைமேலுட்கார்ந்துக்கொண்டிருந்தாள் அன்றிராத்திரி சிலதிருடர்கள் திருடினதைக்கொண்டுவந்து அம்மரத்தின்கீழ்வைத்துக்கொண்டு கைக்கணிசமாக பங்குபிரித்து வைக்கும்போது மேலேயிருந்தவள் தூக்கத்திலே மாமியாரைகைநழுவிவிட்டாள்திருடர்கள்மத்தியில் பொத்தென் றுவிழவே திருடர்கள் எல்லாவற்றையும போட்டுவிட்டு பிடாரிக்கோயிலிருக்கிறபூதமென் றுதிடுக்கிட்டு அஞ்சிஓடிப்போய்விட்டார்கள் மரத்தின்மேலிருந்தவள் தூக்கந்தெளிந்து மாமியாரைக்காணாமல் வருந்திகீழேவிழுந்தாள் மாமியாரும்பணங்களும் உடமைகளுமாகயிருக்கக்கண்டு பணங்களையும் உடமைகளையுமவாரி மூட்டைகட்டிக்கொண்டு மாமியாரையெடுத்திடுப்பில்வைத்துக்கொண்டு வீடுவந்துசேர்ந்தாள், புருஷன்சந்தோஷப்பட்டு இதுகளெல்லாம் எவ்விதமாய்க்கிடைத்ததென்றுகேட்டான் மாமியார் மரத்தின்மேலிருந்து கீழேவிழுந்தாள் எடுக்கப்போனேன் அவள் இத்தனையும் வைத்துக்கொண்டிருந்தாளென்றாள் மாமியாரிடத்திலென்னமோ தெய்வீகமிருக்கிறதென்று புருஷன்கூடநம்பினான் அதைக்கேட்டு மூத்தவன் பெண்சாதி அன்றிராத்திரி மாமியாரை யெடுத்துக்கொண்டு பிடாரி கோயிலண்டைப் போய்ச்சேர்ந்தாள் அப்போது அங்கே கும்பு கூடியிருந்த திருடர்கள் இவளுடைமை யெல்லாம் பறித்துக்கொ

துரத்திவிட்டார்கள் ஆகையினாலே தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்பதற்கு சரியாச்சுது.

கஎ வது தென்னமரத்தின்மேல் ஏறியது.

ஒருவனுடைய தோட்டத்திலிருந்த தென்னமரத்திலே தேங்காய் திருடவேண்டி ஒருதிருடன் அதின்மேலேறினான் மரத்துக்காரன் சந்தடியறிந்துவீட்டிலிருந்துஅதட்டிக்கொண்டே ஓடிவருகையில் திருடன் அதையறிந்து மரத்தைவிட்டிறங்கிவந்தான் மரத்துக்காரன் அவனைப்பார்த்து அடா ஏன்மரத்தின்மேலேறினையென்றான் அண்ணேநான் கன்றுக்குட்டிக்குப் புல்லுப்பிடுங்கஏறினேனென்றான் ஆ யிதென்ன மரத்திலே புல்லிருக்குமாவென்றான் இல்லாமையாலேதான் இறங்கிவருகிறேன் இது தெரியாதாவென்று பரியாசம்பண்ணிக்கொண்டு போய்விட்டான்.

கஅ-வது மாப்பிள்ளையைதோழன் அவமானப்படுத்தியது.

ஒருமாப்பிள்ளை ஒருவனை தோழன் மாப்பிள்ளையாக யிட்டுக்கொண்டுமாமியார்வீட்டுக்குப்போனான் ஆனால்அவன் தலைப்பாகை தவிரமற்றவஸ்திரங்களெல்லாம் இரவலாகையாலேமாமியார்வீட்டில் இதைச்சொல்லாதேயென்றுதோழனுக்குத்திட்டம்பண்ணியிருந்தான் இவர்கள்போய்உட்கார்ந்தவுடனேமாமியாரும்மாமனாரும் தோழனைப்பார்த்துதம்பியோகக்ஷேமம் என்னவென்றார்கள் இவன்மாப்பிள்ளைக்குப் பாகைமாத்திரம் சொந்தந்தான் மற்றதுணிகளைக்குறித்து என்னைக்கேளாதேயுங்களென்றான் மாப்பிள்ளை அவமானப்பட்டான் புத்தியீனன் சிநேகம் இப்படியிருக்கும்.

கசு-வது மூடனால் பணம்பறிகொடுத்தது.

ஒருமூடன் ஒருசெட்டியைக் கூட்டிக்கொண்டு ஊர்ப்பிரயாணம்போனான் போகும்போது மெத்தக்கருக்கலானபடியினாலே ஒரு மைதானத்திலே இவன் வழியிற்படுத்துக்கொண்டான் செட்டி சமீபத்திலே ஒருசெடிமறைவில் படுத்துக்கொண்டான் இப்படியிருக்கவழியிலேபோகிற திருடர்களிலே மூடன்கால் தட்டுப்பட்டது ஒருதிருடன் இதென்ன கட்டைபோலிருக்கிறதேயென்றான்மூடனுங்கோபம்வந்து போபோ உன்வீட்டுக்கட்டை இடிப்பிலே ஐந்துபணங்கூட் முடிந்துக்கொண்டு சட்டமாய்படுத்துக்கொண்டிருக்குமாவென்றான திருடனவனைப்பிடித்து அந்தப்பணத்தைப்பிடுங்கிக்கொண்டுபோகிறபோது இந்தப்பணஞ்செல்லுமோ செல்லாதோவென்று பேசிக்கொண்டார்கள் மூடன் ஆஎன்பணமெப்படிப்பட்டது வேண்டுமானால்செல்லுஞ்செலலாததற்கிதோ செட்டியாரிருக்கிறார் காட்டுங்களென்றநத செட்டியைச் சுட்டிக்காட்டிச்சொனனான அவர்கள் செட்டியிடத்திலிருந்த நூறுவராகனையும் பறித்துக்கொண்டுபோனார்கள் ஆகையாலதப்பாமல்கெடுதிவரும்.

உ0-வது குடித்தனக்காரன் பயிரிட்டது.

ஒரு குடியானவன் பத்துஏர்வைத்து உழுதுபயிரிட்டுச்சீவன

ஞ்செய்துக்கொண்டிருந்தான் அந்தத்தடவையுழுதபுழுதிக்குஞ்சரவிரதீர்வையிட்டுத் தீர்மானத்தார் பணம்வாங்கினார்கள் அப்போது பத்தேர் குண்டங்களையுந் துணிமணிகளையும் விற்றுத்தெண்டமாயிருந்தான் பின்னும்பழையமுதல்பாக்கிக்காரத்தாவுகாரன்வந்தான் அவனைகாணாமற்கட்டினகௌபீனத்தோடேயோடுகிறபோது வழியிலே வருகிற வேறொரு சேவகனைக்கண்டு பயந்தங்கிருந்த சயினிய கோயிலிலே புகுந்தான் சயினிய விக்கிரகம் நிர்வாணியாயிருக்கிறதைக்கண்டு அப்பாநான்பத்தேர்வைத்துப்பயிரிட்டுகொண்டு கௌபீனத்தோடு ஓடுகிறேன் நீ எத்தனை ஏர்வைத்துக்கெட்டாய் உனக்கிந்த கோமணமுமில்லாமற் போச்சுதேயென்று கட்டிக்கொண்டழுதான்.

௨௧-வது விறகுதலையன் எமதூதனைப் பரியாசம்பண்ணியது.

ஒரு விறகுதலையன்பிறந்து அறுபதுவருஷமாகவிறகுவிற்றுச்சீவனஞ்செய்துவருகையில் ஒருநாள்காட்டில் விறகொடித்துக்கட்டுகிறபோது தான்படுந்துன்பத்தை நினைத்து ஐயையோ எத்தனைநாளைக் கவதிப்படுவேன் அடபாவி எமதூதா என்னைக்கொண்டுபோகலாகாதாவென்று மனஞ்சலித்துச்சொன்னான் அவன்சொல்லுகையில் அவ்வழியாகவந்த எமதூதனென்றும் பெயரையுடையவன் யாதுகாரணமாக என்னையழைத்தாயடா விறகுதலையாவென்றுஎதிராகவந்தானப்போதுஐயாகோபங்கொள்ளாமேதயென்றான்.

௨௨-வது விவேகத்தால் நாற்குலப்பயன் சொல்லியது.

சகலகலைவல்லவனென்னும் ஒருவித்துவான் இராசசபையில் வந்து முதல்மந்திரியைப் பார்த்து நாற்குலத்திற்கு பலன் சொல்லவேண்டுமென்றான் மந்திரியுண்டாகிற பலனுண்டாகுமென்றான் அச்சபையிலெளிய சேவகனாகிய விற்பனன் வேதியற்கு வேதமும் வேந்தற்கு வீரமும் வியாபாரிகட்கு பொழுதும் சூத்திரர்களுக்கு ஆசாரமும் மந்திரிகளுக்கு சேவகபட்டமுங்கொடுத்தான்.

௨௨-வது பெண்பிள்ளை ஒருவனையிகழ்ந்தது.

ஒருபெண்பிள்ளை கழுதையோட்டிக்கொண்டு ஊர்வழிபோகும்போது அவன்வடிவமும் யௌவனமுங்கண்டு இச்சித்த ஒரு நாயகன் அப்பெண்ணருகிற்சென்று கேளும் எவ்வனமாதே உன் தாயாரையும் உன்தகப்பனாரையும் நான்கண்டு நெடுநாளாயிற்று நீ அவர்களுக்குநான் சொன்னதாகச் சொல்லவேண்டியதென்னவென்றால் உனக்கொருமுத்தமிடுகிறேன் இவ்வண்ணம் முத்தமிட்டேனென்று சொல்லவேண்டுங் கண்ணேயென்றான் அவள்சொன்னது இதோகழுதைக்குமுத்தமிட்டால் அதுமுன்னம்போய்சசொல்லுமையாவென்றாள் அவன்வெட்கிப்போனான் தன்னையிகழ்ந்தவர்களை புகழ்ந்துதீர்க்கவும்.

௨௪-வது மடையன் கோடாலியைப் பெட்டியிற்பூட்டியது.

ஒருமடையன் தனதுபெண்சாதிஒருகாசுக்கு மீன்வாங்கிவைத்தாள் அதைப்பூனைதின்றுவிட்டது அப்பூனைதின்னும்போது பா

ர்க்கிருந்த மடையன் தான் காடுவெட்டுங் கோடாலியைப்பெட்டி யில்வைத்துப் பூட்டிவருவான் அவன் பெண்சாதி கோடாலியைத் தினங்கோறும்பெட்டியிற்போட்டு பூட்டுவதேகனென்றாள் ஒருகாசு மீனைத்தின்ற பூனை நாலுபணத்துக்கோடாலியைத் தின்றுவிட்டால் நாமென்ன செய்யலாமென்றான்.

### ௨௫-வது குருடனுக்குங் கூனனுக்கும் நடந்த சம்பாஷணை.

ஒருகண்குருடன் வரும்போது அவனைக்கண்டகூனன் இகழ்ச்சியாக வாருமையா ஒருகண்பார்வைக்காரரே யென்றான் குருடன் கூனனுக்குச்சொல்லுகிறான் மெய்தானையா முதுகுமூட்டைக்காரரே நான் ஒருவரை ஒருகண்ணும் மற்றொருவரை ஒருகண்ணுமாகப் பார்க்கிறேனென்றான்.

### ௨௬-வது வேங்கடசெட்டி திருப்பதிக்குப்போனது.

ஒரூர்குடியாகிய வேங்கடரெட்டியென்பவன் தன்பெண்சாதிக்கு நான்குவருஷகாலமாய் திருப்பதிக்குப் போகவேணுமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஒருநாள்உண்மையாகத்தான் கொல்லையில்காவலிருந்தபடி திருப்பதிக்குப் போய்விட்டான் அவன் போனபோது நெருப்புச்சட்டியை அக்கொல்லையிலேயிருந்த கன்றுக்குட்டிவைக்கோல்போரின்பக்கத்திற் கவிழ்ந்து தூவிபோறை பற்றிக்கொண்டு அந்தகன்றுக்குட்டி இறந்துபோய்விட்டது அது இறந்தும் வேங்கடரெட்டி திருப்பதிக்குப்போனபோது மறியாமலூர்வந்து வைக்கோல் பற்றிக்கொண்டதைப் பார்த்து வேங்கடரெட்டி வெந்துபோனானென்று போரைக்கலந்துபார்க்கும்போது சாம்பலுடனே கன்றெலும்பிருக்க அதைரெட்டியெலும்பென்று நிச்சயித்து பால் முதலியவைகள்தெளித்துவிட்டார்கள் தாலியறுத்த பத்தாநாள் வேங்கடரெட்டி திருப்பதிக்குப்போய்மொட்டையிட்டுக்கொண்டு நாமத்தைசாத்தித் தடியெடுத்து தோளில்வைத்துக்கொண்டு தன்வீட்டுத் தோட்டத்துவழியாக தீபம்வைக்கிறசமயத்தில் வந்ததை ஒருபெண்பிள்ளைபார்த்து நடுநடுங்கி வாய்குளறிவீறிட்டழுது இறந்துபோன வேங்கடரெட்டி பிசாசாக வந்தானென்று நெடுங்குரலிட்டுக் கூவினாள் அந்தவார்த்தையைக்கேட்டு வந்துபார்த்தவர்கள் நாவுலர்ந்து நாபிவரண்டு திடுக்கிட்டுக் கண்களைமூடிக்கொண்டு மண்ணோடுமண்ணாய் நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையானார்கள் வேங்கடரெட்டி நம்மைப்பார்த்தவர்களெல்லாம் பிசாசென்று பயப்படுகிறார்கள் காளிகோயில் பூசாலி மந்திரக்காரன் அவன்பயப்படமாட்டான் அவருக்குச்சொல்லிப் பயந்தெளிவிப்போமென்று கோயில்வாசற்படியில் நின்றிருந்தான் பூசாலி தீபம்வைக்கப்போகும்போது வேங்கடரெட்டிப்பிசாசு இங்குவந்துவிட்டானே எப்படி என்று நினைத்துக் கோயில்வாசற்படியில்நின்றிருந்தவனைப்பார்த்து பயந்து பேதியாகி விழுந்திரந்தான் வேங்கடரெட்டி ஊராரே கதவைத்திறவுங்கள் என்பேர் வேங்கடரெட்டி நான் திருப்பதிக்குப்போய்வந்தேன் இதோ எனதுதாடியை

ப்பாருங்கள் இதனைக்கண்டுதெரிந்துகொண்டுபயந்தெளிந்து ஊரில்சேர்த்துக்கொள்ளுங்கள் இதோ என்னுமத்தைப்பாருங்களென்றுசொல்லி அழைத்தான் யாவரும்பிசாசாகபயந்து வீட்டுக்குவீடு கதவைப்பிடிக்கிறதென்று இரவுமுற்றும்நித்திரையில்லாமலிருந்தார்கள் பொழுதுவிடிந்தவுடனே அவனண்டைவந்தார்கள்.

௨௭-வது கொள்ளுவறுத்து வாயில்கொட்டியது.

ஒருகள்ளன் ஒருசெட்டிவீட்டிற்போய்க் கொள்ளுதிருடினான் அக்கொள்ளை அவ்வீட்டினடுப்பிற்போய்ச் சட்டிவைத்து வறுக்கும்வேளையில் அங்கனம்படுத்து நித்திரைசெய்கிறவன் குறுகுறுவென்ன குராட்டைவிட்டான் அதைக்கேட்ட திருடன் கூவாதே உனக்குவறுத்துதருகிறேனென்று சொன்னான் அவன் மற்றும் குறட்டை விட்டான் அதற்கவன் ஆ என்னசொன்னாலுங் கேழ்க்கமாட்டேனென்கிறாபின்னம்சற்றுநேரம்பொறுத்திரு பாதிதருகிறேனென்றான் அப்படிசொல்லும்பொழுது மறுபடியும் கொறட்டைவிட்டான் திருடன் என்னடா வறுப்பதற்குள்ளே இத்தனை யாத்திரப்படுகிறாய் நீதான்முன்பாகத்தின்னென்று வறுத்தகொள்ளை தூங்கியவன் வாயிற்கொட்டினான் அவன் வாயிலடித்துக்கொண்டு சீலையைவாரிசுருட்டியெழுந்திருந்து பெருங்குரல்கொண்டு அழத்தொடங்கினான் எல்லோரும் விழித்துக்கொண்டு ஏனப்பாஅழுகிறாயென்றார்கள் திருடன் வறுப்பதற்குமுன்னம் வாய்பதட்டமாகச்சுட்சுடவாயிற்கொட்டிக்கொண்டு அழுகிறானென்று ஓடிப்போய்விட்டான். ௨௮-வது கழுதை நாயைப்போல மோசம்பண்ணியது.

ஒருவன் வீட்டில் சுமையெடுத்துத்திரியும் கழுதை ஒருநாள் வேலையில் தானெத்தனைப்பிரயாசைப்பட்டாலும் தன்னெஜமான் தன்னையடித்து வருத்தப்படுகிறதையெண்ணி இதென்னகாரணம் இந்தவீட்டிலே நாயொன்றிருக்கிறது அதுவேறொரு வேலையுஞ்செய்கிறதில்லை எஜமானனோ அதன்பேரிலே வெகுபட்சமாய்க் கூடவைத்துக்கொண்டுதான்சாப்பிடுகிறதையதற்குப்போட்டுவளர்க்கிறான் அதுவும் வயிற்றிற்கெட்டவில்லை இந்தவித்தியாசமேனென்றால் அந்தநாய்க்குட்டி எஜமானியிடத்திலும் அவர்கள்பிள்ளைகளிடத்திலும் செல்வங்கொஞ்சிக்கொண்டுவருகிறது இரண்டுகாலையுமெடுத்தவர் கைமேலுமடிமேலும் வைத்திருக்கிறது அவர்களுக்குமுத்தங்கொடுக்கிறது அவர்களோடுகூடக் கட்டிலின்பேரில் படுத்துக்கொண்டிருக்கிறது இதனாலேதான் அவர்களுக்குப் பக்ஷம்பிடித்ததென்று கழுதையெண்ணிக்கொண்டு ஒருநாள்வேளையில் வீட்டுக்குடையவன்படுத்து நித்திரைபண்ணுகிறபோது நாய்போய் அவனுடையமடியிற்படுத்து நித்திரைபண்ணுகிறபோதுகழுதைபோய் அவனுடைய மடியிற்படுத்து இரண்டுகாலையுந்தூக்கி அவன்சிரசில் வைத்து முகத்தோடு முகம்நெருங்கி முத்தமிட்டது எஜமானி வாரிச்சுருட்டி எழுந்திருந்து தடியெடுத்துத் துரத்தினான் அடாதுசெய்தவன்படாதுபடுவான்.

### ௨௯-வது மூடத்தனத்தால் வீட்டைக்கொளுத்தியது.

ஒரு கிராமத்திலிரும் ஒரெளியவன் தன்மைத்துனன் வெகுதூரத்திலிருக்கும் பட்டணத்தில் வாசம்பண்ணுகிறது அறிந்து அவன் வீட்டுக்குப்போய் தன்னை இன்னானென்றறிவித்து அன்றிராத்திரி அவனுடனேகூட உட்கார்ந்து போசனம்பண்ணுகையில் அந்த வீடுமுழுதும் வெளிச்சமாயிருக்கும்படி மாடத்திலெரிகிற விளக்கைப்பார்த்து தனக்குள்ளே யாச்சரியமடைந்து பக்கத்திலிருக்கின்ற மச்சானைப்பார்த்து இப்படிவெளிச்சம்பண்ணுகிறது இதுவென்னவஸ்து நான்பார்த்ததில்லையென்றான் அவன்பரிகாசமாய் இது சூரியன்குஞ்சு தீவுகளிலிருந்து வந்ததென்று சொன்னான் பிறகு அந்த வீட்டுமனிதர் சற்றப்புரம் போனதைப்பார்த்து அந்த சூரியன்குஞ்சைத் தன்னூருக்குத் திருடிக்கொண்டுபோக நினைத்துச் சீக்கிரமாக அதையெடுத்து வீட்டிறைப்பில் ஒளித்து வைத்துவிட்டுப் பேசாமலிருந்துவிட்டான் அதுவைக்கோற் கூரைவீடாகையினாலே உடனே பற்றிக்கொண்டது அதுபற்றி விழுந்தவுடனே மற்றமனிதர்கள் அதிலே மறைந்துகிடக்கிற பண்டங்களை கோலாற்கிளறியெடுக்கையில் இந்தநாட்டுப்புரத்து மூடனும் அந்தப் பண்டங்களை யெடாமற் கிளறிக்கொண்டிருந்தான் அதுபார்த்தவர்கள் என்னதேடுகிறாயென்றார் இங்கேசூரியன்குஞ்செடுத்துவைத்தேன் அதைத்தான் பார்க்கிறேனென்றான் ஐயோ நீயாமோசம்பண்ணினாயென்று அடித்துத்துரத்தினார்கள் ஆதலால் மூடர்களுடைய கூட்டுவிப்படியேயிருக்கும்.

### ௩௦-வது மூக்கறையன் தன்னைப்போலாக்கியது.

ஒரூரிலே மூக்கறையனொருவன் தன்னைப்பார்க்கும் பலரும் நகைக்காதிருக்கிறதை பார்க்கக்கூடாமையாற் றனக்குள்ளொருபாயத்தைஎண்ணிச்செய்ததாவது ஒவ்வொருவேளையிலிருந்தாப்போலிருந்து வானத்தை ஏறெடுத்துப்பார்த்து லோககர்த்தாவே உம்மைச்சிந்திக்கிறேன் வாழ்த்துகிறேன் வணங்குகிறேன் இப்பால் மானபிரபஞ்சத்திற்கிட்டே வருந்துகிற விந்தக்கொடியேனுக்கும் திருக்கைக்கொடுத்தருளும் உமது திருமேனிப் பிரகாசத்தை எதற்கொப்பிடுவேனென்று இவ்வாறு கண்ணீர்ததும்பி உடம்புசிலிர்த்து நடுங்கி வாய்குளறிச் சொல்லிப் பின்பு சூழ்ந்துநிற்கிற சனங்களை நோக்கிச் சனங்களே இதோநிற்கிற சனங்களைப் பாருங்கள் ஐயோ வீணாகநின்று காலங்கழிக்கிறீர்களேயென்றிலங்குவான் இவைச்சிலர் நம்பி ஐயா யெங்கள் கண்கட்கும் சுவாமியைத் தெரிவிக்கவேண்டுமென்று காலில் வீழ்ந்தபோது மூக்குகிலமாயிருந்தாற் காணலாமென்றுசொல்ல இவர்களப்படியே மூக்கறுத்துக்கொண்டபிறகுஞ் சுவாமிதெரியாமல் இவன்மோசஞ்செய்தானெனத்தெரிந்து மூக்கிருக்கிறவர்கள் எங்களையும்நகைப்பார்களேயென்று நினைத்துச் சுவாமி எங்கள் கண்ணுக்கு நன்றாகத்தெரிகிறார் கொஞ்சம் கஷ்டத்திலே எவ்வளவு பெரியலாபம் பெற்றோமென்றும் ஆனந்த

த்தை யநுபவிக்கிறோமென்றும் சொல்லிக்கொண்டார்கள் அதை
நம்பி அந்த ஊராரெல்லாருஞ் சிலநாளையில் மூக்கறுத்துக்கொண்
டார்கள் ஆகலால் கெட்டமார்க்கத்திருக்கிற ஒருவன் மற்றவர்க
ளையும் அதிலிருக்கப் பிரயாசைப்படுவான்.

### ௬க-வது கழுதையுபகாரம் நினைக்கப்போய் தடியடிபட்டது.

ஒருபெருங்கிராமத்துப் புடவைகள் வெளுக்கும் வண்ணான்
அவ்வுடமைகளைச்சுமக்கிறதற்கு ஒருகழுதையையுந் தன்வீட்டுக்குக்
காவலாக ஒருநாயையும் வைத்திருந்தான் இப்படியிருக்கிறகாலத்
தில் ஒருநாளிரவில் நல்லகருக்கலிலே ஆறுபேர்திருடர் அவன்வீட்
டிற் கன்னமிடவந்தார்கள் அப்பொழுதங்கிருந்தநாய் குலையாமல்
சும்மாயிருந்தது கழுதையானது நாயே நீயேன்சும்மாயிருக்கிறாய்
நம்முடைய எஜமான்வீட்டில் திருடுதற்குக் கள்ளர்வந்து உள்ளே
பதுங்கியிருக்கிறார்களே நம்முடைய வசத்திலிருக்கிற விலையேரப்
பெற்ற ஆடைகளெல்லாம் போய்விட்டால் எஜமான் நொந்துபோ
வானேயென்றது அதற்கந்த நாயானது கழுதையே இப்படியிவர்
கள் அனேகமுறை திருடர்வந்தார்கள் அப்பொழுது நான் குலைத்
துகுலைத்து எஜமானை யெழுப்பிவிட்டேன் கள்ளர்ஓடிப்போனார்க
ளே அதைநீயுமறிவையே அந்தநன்றியறிகிறகுணம் நம்முடைய
எஜமானனிடத்திலில்லை ஆதலால் அவர்கள் புகுந்து திருடிக்கொ
ண்டு போனால் போகட்டும் நமக்கு நிமித்தியமில்லையென்று நாய்
சொல்லிற்று இந்தமுறை நானாகிலும் கூப்பிட்டு தன்எஜமானனை
எழுப்பிவிடுவோமென்று கழுதை இடிமுழக்கம்போலக்கதறிக் கூ
ப்பிடத்தொடங்கிற்று திருடர் அப்புறம் பதுங்கியிருந்தார்கள் வ
ண்ணான் அவ்விரைச்சல் பொறுக்கமாட்டாமல் எழுந்தோடிவந்து
கொழுத்த கழுதையென்று வைது தடியாலிடுப்பொடிய அடித்து
விட்டுக் கோபத்துடனே படுத்துக்கொண்டான் திருடர் மீண்டும்
உள்ளேவந்துபுகுந்து துணிமணிகளையெல்லாம் வாரிக்கட்டிக்கொ
ண்டு போய்விட்டார்கள் பார்த்திருந்தநாய் கழுதையைப்பார்த்து
நான்சொல்லியுங் கேளாமற்போனாயே நீ செய்தநன்றிக்கு நம்மா
ண்டவன்செய்த நன்றியைக்கண்டாயே ஆகிலும் நான் செய்யும்
வேலையை நீசெய்ததால் இப்படி வந்தது ஆதலால் அவனவன் வே
லையை அவனவனே செய்யவேண்டும் ஒருவன் செய்வதை மற்றொ
ருவன் செய்தால் இப்படியே வந்துநேரிடுமென்றது.

### ௬உ-வது புளியமரத்தை வெட்டப்போய் என்னைச் சம்பாதித்துக்கொண்டது.

ஒருகுடியானவன்கலப்பைக்காக அந்தவூரில்நெடுநாளாகவிருக்
கிறபுளியமரத்தைவெட்டப்போய் அடியிலொருவெட்டுபோட்டா
னதில் வெகுநாளாகவிருக்கிற சிலபேய்கள் இறங்கிவந்தது ஐயா
இதைஎன்வெட்டுகிறீர் என்றதுகள் அவன்எள்ளுக்குழவுக்கலப்பை
கொடுத்துவருகிறோம் இதைவெட்டாமல்தயைசெய்யவேண்டுமன்
றெதுகள் அதற்கவன்நல்லதென்று சம்மதித்துவருஷத்தில்நூறுக

லம்எள்ளுவாங்கிக்கொண்டுவந்தானப்படியிருக்கையில் அந்தபேய்களிடத்திற்கு ஒருஉறவின்முறைபோல்வந்து அங்கேயிருந்தபேய்களைப்பார்த்து ஏன்விசனமாகவிருக்கிறீர்களென்றது நாங்களென்னசொல்லப்போகிறோமிந்தவூரிலிருக்கும் குடித்தனக்காரனுக்குத்தினந்தோறும் எள்ளுதிருடிக்கொண்டேவருவதேகாரியமாயிருக்கிறது அதனாலலுத்துப்போகிறோமென்றதுகள் இதைக்கேட்ட அந்தபுதுபேய்கள் ஒருசிறுமனிதனுக்கு பயப்படலாமோ இதோ அவனைநான்கொல்லுகிறேனென்றுபோய் அவன்மாட்டுத்தோழன் தோட்டத்திற்றெரியாமல் உட்கார்ந்திருந்தது இப்போது அந்தக் குடியானவன் சிலமாடுகளுக்குச் சூடுபோட்டுக்கொண்டிருந்தமையால்புதுப்பேயென்கிறவூரில்வாங்கிவந்தஒெருதையுஞ் சுடநினைத்து அடா அந்தபுதுப்பேயைக்கட்டுங்கள்சூடவேணுமென்றான் இந்தப்பேய்தன்னையென்றுநினைத்து கீழேகுதித்துவந்து காலில்விழுந்து என்னைசுடாதேயுமென்றது இதன்மேல்கிரகித்துக்கொண்டுஎங்கேவந்தாய்சீக்கிரத்தில்சொல்லென்றான் இவ்வூர்பேய்கள் இத்தனைநாளும்போல் உங்களுக்குஎள்ளாகவேணுமா எண்ணையாகவேணுமாவென்று கேட்டுவரச்சொன்னதுகளென்றது அவன் நீயுங்கூடவிருந்து இன்றுமுதல் எண்ணையாகக்கொண்டுவாருங்களென்றான் அது நல்லதென்று அதையூர்பேய்களுடனே சொல்லி முறையிட்டது அதுகேட்டுஇதுசெய்தஉபசாரமாய் ஓடமறுந்துண்டுறங்கிவிழுந்தகதையோஎன்று வெறுத்துக்கொண்டு அதுமுதல் இதனுடனே எணணைகொண்டுவர துவககிற்று.

## ௩௩-வது ஒருஸ்திரீ தன்புருஷனையும்பூதத்தையும் துடைப்பககட்டையினால் அடித்தது.

ஒரூரில்ஒருபிராமணன் பிச்சையெடுத்துக்கொண்டுவந்து பெண்சாதிகையிற கொடுப்பான் அவள் அதைசமையல்பண்ணி அன்னமிட்டுத் துடைப்பக்கட்டையாலே புருஷனை ஒர்டிதினம் அடிபடுகிறதென்று நினைத்துப் பத்துநாளைக்குஅண்டைகிராமத்துக்குப் போய்வருகிறேனென்று பெண்சாதியுடனேசொன்னான் நீபோனால்துடைப்பக்கட்டையாரை யடிக்கிறதென்றுகேட்டாள் நான்வளர்த்த அரசமரமிருக்கிறது அதையடியுமென்றுசொன்னான் அவனப்படியேபோனவுடனே புருஷனுக்கு வைக்கிறஅன்னத்தை வைத்துத் துடைப்பக்கட்டையாலநத அரசமரத்தை யடித்தாள் அதிலேவெகுநாளாய்வாசமாயிருக்கிற அந்தபூதமில்லையென்று ஓடிப்போகிறபோது அந்தபிராமணனைக்கண்டு நானொருநாள் அடிபட்டதினாலே சரீரம்நோகுதே நீ எத்தனைநாளா யடிபட்டாயோவென்று சொல்லி அவள் நானுனக்கோருபாயம்செய்கிறேன் அதென்னெனில் இந்தவூர் இராஜாவினுடையபெண்ணை பிடித்துக்கொள்ளுகிறேன் ஆர்வநதுமரித்தாலுமபோகேன் நீவநதால் போய்விடுவேனென்று சொல்லி இராஜாவினுடையபெண்ணை பிடித்துககொண்டது இராஜாவே மந்திரவாதிகளை அழைப்பித்துப்பார்க்கும்போ

து இந்தபிராமணனும்போய் இராஜாவினுடையபெண்ணைவிட்டுப் போவென்றுமந்திரிக்கிறவனைப்போலச்சொன்னான் அப்பூதம்நான் போகிறவன் இனிமேல்நானிருக்கிறவிடத்துக்குவந்தால் சொல்லுகிறேனென்றுபோய்விட்டது இராஜாப்பூதம் போய்விட்டதென்று பிராமணனையழைப்பித்து அவனுக்கு வேண்டிய திரவியத்தைகொடுத்துவைத்துக்கொண்டிருந்தானப்படியிருக்க அந்தராசாவின்மந்திரியுடைய பெண்ணை அந்தப்பூதம்போய் பிடித்துக்கொண்டது அதைராசாவறிந்து அந்தபிராமணனை யனுப்பினான் அப்படியே இந்தபிராமணன் அவ்விடத்திற்குப்போக அந்தப்பூதம் ஏன் வந்தாயென்று கோபித்துக்கொள்ளவருகிறபோது எனபெண்சாதிதுடைப்பக்கட்டை எடுத்துக்கொண்டுவந்தாள் அந்தசமாச்சாரஞ்சொல்லவந்தேனென்றானவன் எங்கேவந்தாள் அந்தசமாச்சாரஞ்சொல்லவந்தேனென்றானவன் எங்கேவந்திருக்கிறாளென்றுகேட்டது இதோதெருவிலே வந்திருக்கிறாளென்றசொல்லைக்கேட்டுப் பயந்தோடிவிட்டது.

௩௪-வது இராஜசினேக வாஞ்சனையைக்குறித்து வினவியது.

சந்தானகருவென்னும்பட்டணத்தில் அரசுசெய்துக்கொண்டிருந்தயோகசித்தனென்பவன்தேசத்திலே ஒருவருந் தீமைசெய்யாமல்நன்மைசெய்தொழுகும்படி அதிகாரஞ்செலுத்திவருமநாளில்மதியூகிஅதியூகியென்கிறவிருவரும அவ்விராசாவைக்கண்டுகொண்டார்கள் அப்போது அவாகளைப்பார்த்து யாருடனே சினேகிக்கலாகாதென்றுவினவினான் அதற்கு மதியூகிசொல்லுகிறான் ஆற்றூரென்கிறஒருகிராமத்திலிருந்த ஒருதருமசீடனென்று குடியானவன் ஒருநாயை வளாத்தான் அவனைவிடடுப் பிரியாமலிருககும்போது ஒருநாள்நீராடவேண்டுமென்று குளத்துக்குப்போனால்நாயானது முன்னேயோடி முதலையிருக்கிறதாகவும கண்டுகுலைததுததிரும்பிப்பிடித்துதன்னைவளர்த்தவனைப்படியிலே நடநதும்பாகாமறமுத்தது அதைதள்ளிப்போட்டுதண்ணீரிலே இறங்கிப்போகும்போது அவனுடுததியிருந்த உடமையைகவ்வியிழுதது தடுத்து அநதநாயைக்காலாலுதைத்துததளளிதண்ணீரிலிறங்கினான தனக்கனனங்கொடுததுவளாத்தவனை இந்தநீரிலிருக்கினற முதலைபிடித்துத் தின்று விழுங்கிப்போட்டால் ஆர் அன்னங்கொடுப்பார்களென்றெண்ணி இதனை காக்கவேணுமென்றும் நினைத்து தணணீரிலே முனபோய் விழுந்தநாயை முதலைபிடிததிழுததுககொணடுபோகும்போதவன் கணடுஎன்னிமித்தமாக இந்தநாய்தன்னுடலைகொடுத்து பிராணனைபோக்கடித்துக்கொண்டதென்று துனபமுற்றானுகையால் நாயையொத்தஎன்னுடனே சினேகிக்கவேண்டுமென்றுமசொன்னான் அதியூகிசொல்லுகின்றான்ஒருராசா தன்யானை வளாததநல்ல பாகனாய் ஒருவனை வைத்தான் அந்தயானைப்பாகன் தினந்தினம் ஆற்றுக்கு கொண்டுபோய்க் குளிப்பாட்டி அதறகும்வேணடிய கவளங்கொடுத்து வரும்நாளில் ஒருநாள் ஒருகாலை மறைத்தெடுத்துக்கொ

தான் என்னை எழுப்பாமற் போனாயென்று கோபித்துக் கொண்டு வேலைக்காரனை அடித்துஉதைத்தான் அப்போதுவேலைக்காரன்ஐயா இ[illegible]ண்டுகாகத்தைப்பார்த்து எனக்குவந்தலாபத்தைஇதோநீங்கள் பார்க்கவில்லையாவென்றான் எஜமான் வெட்கப்பட்டான்.

௫௭-வது புருஷனை பெண்சாதியடித்தது.

ஒருமூடச்சேவகன் தன்மனைவியைநாடோறும்அடித்துக்கொண்டிருக்கிறபடியால் இவள்சற்றுங் குற்றஞ்செய்யாத நம்மைக்காரணமில்லாமலடிக்கிறபடியால் இம்மூடனுக்கு நல்லபுத்திவருவிக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கையில் ஒருநாளவன்வழக்கப்படியடித்தான் அவள்நீயெதற்காகவிப்படிஅடிக்கிறாய் யென்றுகேட்க அவன்நானேதாகிலும் ஒன்று சொன்னப்படியே செய்யாமையால் அடிக்கிறேனென்றான் அவள் இனிமேல் நீசொன்னபடி செய்வேனப்பா செய்யும்போது என்னையடியாமல்திட்டாமல்பக்ஷமாயிருக்கவேண்டுமென்று சத்தியம்பண்ணுவித்துக் கொண்டாள் பின்பொருநாள் அடியடியெங்கே போகிறாயென்று அழைத்தான் அவள்ஓடிவந்தொரு தடியாலவனையடித்தாள் அவன்என் காரியஞ் செய்தாயடியெனப் பின்னுமொருதர மவனையடித்து நீசொன்னபடியே செய்தேனென்றாள் மற்றொருநாள்புருஷனுக்குகலத்தில்சோறிடும்போது அ[illegible] தலைமேலே உமியென்றான் அவள்அவனை ஒருதரமடித்து தலைமேலே யெச்சிலையுமிழ்ந்தாள் பின்னொருநாள் இந்தபணத்தை வீட்டுக்குள்ளேவையென அவள்மூர்க்கமுடைய பணமேயென்றுவைத்துக்கொண்டிருந்தால் பின்பவன் இதையெல்லாபாத்திருந்து வெட்கப்பட்டு கோபத்தைவிட்டு அவளையுபசரித்து அவள்புத்திகெட்டுநடந்து நல்லவனானானகையால் அறிவில்லாதவன் பெண்டுகளிடத்திலும தாழ்வுபடுவான் உமிழ்உமியெனக் கொத்தமிழ்வழங்கும்.

௫௮-வது குருதன்னிடத்தில்கற்கவந்த பெண்ணின்பேரில்
இச்சைகொண்டு உயிர்விட்டது.

ஒருவர்த்தகன் தன்பெண்ணைஒரு பிராமணனிடத்திற்படிப்பித்தான் படித்துவருகையிலந்தப்பெண் திரண்டாள் அதைதகப்பனறிந்து மகளையழைப்பித்து அம்மாநீபடித்துக்கொண்ட உபாத்தியாயருக்கு கொடுக்கவேண்டிய தட்சணைகொடுத்துசெலவுவாங்கிக்கொண்டு வீட்டிலிருமென்றான் அப்படியேயவள் உபாத்தியாயரிடத்துப்போய் தாம்பூலந் தட்சணைகொடுத்துநமஸ்காரம்பண்ணித்தன் பிதாசொன்னதைச் சொல்லிசெலவு கொடுமென்றாள்இச்சொல்லிய உபாத்தியாயர் திடுக்கிட்டெழுந்துபெண்ணே இந்தஅப்பிரயோசன பணத்துக்காகவா உனக்குநானிதுவரையிலும்பாடுபட்டேன் உன்பிதாகொடுத்தபணம் விஸ்தாரமிருக்குது உன்னுடைய ஆலிங்கனத்தைவெகுவாகநம்பியிருக்கிறேன்அதைதட்டாமல்நி[illegible]றவேற்றுவாயென்று வாயிழந்துசொன்னான் அதுகேட்ட அந்தமானமுள்ளகுலத்திற்பிறந்த பெண்ணுடைய [illegible]

துரோகி என்னையிச்சிப்பது உனக்குமுறைமையா கற்றதிமோசையே உடனேகெட்டுப் போவாயென்று வைத்துவிட்டுத்தப்பித்துக்கொண்டு வெளியேவந்து ஓடிப்போய்விட்டாள் பிராமணனுக்குப் பின்புத்தியாகையால் கோபத்துடனே யந்தவர்த்தக னிடத்திற்கு போய் ஐயாநீரின்னுமிருக்கிறீரோவென்று அழுதாள் அதென்னவென்றால் உன்குமாரத்தி பெரியமனுஷியானநாள் அப்படியிருக்குதென்றான் செட்டியவிவேகியாகையால் அதற்கென்னசெய்யலாமென்றான் உடனேயவளை ஒருபெட்டியில்வைத்து நதியில்விட்டுவிடுவதேகாரியமென்றான் அவனின்வார்த்தையைநம்பி அப்படியேயாற்றில்விட்டுவிட்டான் நதியில்அந்தப்பெட்டி மிதந்துபோகிறதை அங்கேவேட்டைக்குவந்த ராசாகண்டெடுத்து பல்லக்கில் வைத்துக்கொண்டு வேட்டையிலகப்பட்ட ஒருபுலியைபெட்டியி லடைத்து நதியில்விட்டுப்போய்விட்டார் பின்புவந்தஉபாத்தியாயர் இரகசியமாக ஆற்றுக்குவந்து அதில்மிதந்துபோகிற பேழையைத் தடுத்து இழுத்துக்கொண்டுவந்து சிலஆள்களின் தலையிலெடுப்பித்து வந்து தன்னறையில் வைத்துக்கொண்டான் பிறகு தான்போசனம் பண்ணி சந்தனபுஷ்பமுதலான திரவியங்களை யணிந்துகொண்டு துராசையின் அவசரத்தினால் இப்போயென்னசொல்லுகிறாய்பெண்ணேயென்று பெட்டியைத்திறந்தான் அதுஅடைபட்டிருக்கிறபுலியாகையால் பொக்கென்றுபாய்ந்து ஊட்டியைக்கடித்து ஊரில்வீழ்ந்தோடிப் போய்விட்டது ஆகையால் மோசஞ்செய்தவனை நாசமபண்ணும்.

வேடிக்கைக்கதைகள் முற்றிற்று.

அத்தியாயம்-௫-க்கு கதைகள் - ௩௮.

## ஆறுமத்தியாயம் கட்டுவாக்கிய கதைகள்.

### முதலாவது வரவரமாமி கழுதைபோலானது.

ஒருத்திதன்புருஷனதிககாமுகனைத் தன்சொற்படி நடக்கையினாலே தன்மாமிசெய்கிறஒருவேதனைக்குப் பொருக்காமல்அவளை நீக்கிவிட ஆலோசனைசெய்து புருஷனுக்குப்பால்சாதமூட்டையும் கிழவிக்குகளிமண்மூட்டையுங்கொடுத்து அக்கிழவியைக் கொண்டுபோய் ஒருகாட்டுக்குள்ளே புடும்படியாக புருஷனுக்குப் போதித்தனுப்பினாள் அப்பாதகன்பெண்சாதி போனைக்குட்பட்டுத்தாயை வஞ்சனைசெய் தழைத்துக்கொண்டுபோய் நடுக்காட்டிலேஒருகுளக்கரையிலிறங் அவன்மூட்டையைமாறாட்டமாக யெடுத்துக்கொண்டுபோய்விட்டான் பின்புசற்றுநேரங்கூப்பிட்டுபார்த்து கிழவிமகனைக்காணமலழுதாலப்போது நீராடவந்தவொருதெய்வகன்னிகை கண்டு கிழவிசமாச்சாரத்தை விசாரித்து தேற்றி கட்டுசாதத்தை தானுங்கிழவியுமாகசாப்பிட்டுபிறகுமனமகிழ்ந்து அக்கிழவியை அழகுள்ளகுமரியாகச்செய்து வேண்டியரத்தினாபரண வஸ்திரங்களையுங்கொடுத்தருளி அவள்வீட்டுக்குப்போகும்வழியையுங்காட்டினாள் அவள்தனக்குகிடைத்த சிறப்பையெல்லாந் தன்மகனுக்கும்

மருமகளுக்குமறிவித்தாள் மகனைஅவற்றுசந்தோஷத்தைடு யடைந்தான் மருமகள்மிகவும் பொறாமைகொண்டு முன்போல பால்சாதமூட்டையை புருஷன்கையிலும் களிமண்மூட்டையைத் தன்தாய்கையிலுங்கொடுத்து முன்மாமியைவிட்டவிடத்திலே தாயையும்விட்டு செடிமறைப்பிலிருந்து தெய்வகன்னிகையின் அருள்பெற்றபின்பு அழைத்துக்கொண்டுவாவென்றாள் அந்தமூடனப்படியேயழைத்துகொண்டுபோய் முன்னே தன்தாயை விட்டவிடத்திலே விட்டு செடிமறைப்பிலிருக்க தெய்வகன்னிகைவந்துபார்த்து நீஆரம்மா அதென்னமூட்டையென்றுகேட்டாள் கட்டுசாதமூட்டையென்றாள் அதைஎடுத்துக்கொண்டுவரச்சொல்லி அவிழ்த்துபார்க்கும்போது களிமண்ணாயிருக்கக்கண்டு நீவீடுபோய்ச்சேருவதற்குள்ளேகழுதையாகிப்போகக் கடவாயென்றுசபித்தாள் உடனேகிழவிபுறப்பட்டு குளக்கரையேறக்கைகால்களிற் குளப்புண்டாகி அப்புறம்போக கொஞ்சங்கொஞ்சம் அக்கழுதையினவயவங்களெல்லாம் உண்டாகிக்கொண்டேவந்து வீட்டண்டையிலேபோகும்போது முழுதுங் கழுதைரூபமாய் வாள்வாளென்று கத்தத்தொடங்கியது அந்தஓசைகேட்டு உள்ளேயிருந்தபெண்சாதி ஓடிவந்து இதேதுகழுதையென்றாள் அதற்குப்புருஷன் வாவரமாமிகழுதைபோலானாளென்றான் அதுகேட்டுவாக்கியமாக வழங்குகிறது ஆகையினால்வராது வராது எண்ணப்பட்டும்வருகிறதுபோகாது நம்மைவிட்டுமென்கிறபழமொழியே உண்மையர்ச்சுது.

## உ-வது பஞ்சமாபாதகன் பரிசுத்தமானது.

ஒருவனனேகபாபங்களைச் செய்துகொண்டிருக்கும் போது ஒருபெரியவர்வந்து நரகத்துக்கேதுவாகிய இந்தப்பாவங்களை விட்டுவிடென்றார் அவன்விடமாட்டேனென்றான் பெரியவர்பொய்யை மாத்திரமாகிலும்விட்டுவிடென்றார்பஞ்சமாபாதகன் நல்லதென்று அன்றுமுதலாகப் பொய்யைவிட்டுவிட்டு ஒருநாள் இராத்திரியில் ராசாவீட்டிலேதிருடப்போனான் மறுவேஷங்கொண்டு நகர்சோதனைக்குவருகிறராஜா திருடனைப்பார்த்து நீயெங்கேபோகிறா யென்றுகேட்க திருடப்போகிறேன்வாவென்று இட்டுக்கொண்டுபோய் ராசாவைவெளியிலே காவல்வைத்துகன்னமிட்டுஉள்ளேபோய்ஒரு பெட்டியைத்திறந்து அதிலேயிருந்தமூன்று இரத்தினங்களிலேபங்குபிரியாதென்று ஒன்றைவைத்துவிட்டு இரண்டையெடுத்துக்கொண்டுவந்து ராஜாவிற்கொன்றுகொடுத்து தானொன்றெடுத்துக்கொண்டான் அதன்பின்புராசா உள்ளேபோய் அந்தரத்தின மிருக்கக் கண்டு சந்தோஷித்துமந்திரியை அழைப்பித்து இராத்திரிவீட்டுக்குள்ளே திருடன்வந்தாப்போலிருக்குதேதென்னகளவுபோச்சுதோ போய்ப்பார்என்றான் மந்திரிபெட்டியைத்திறந்துபார்த்து அதிலிருந்த ஒருரத்தினத்தை எடுத்துக்கொண்டு மூன்றுரத்தினம்போய்விட்டதென்றான் அதைக்கேட்டமாத்திரத்தில் மந்திரியைஅயோக்

கியனென்று நீக்கிவிட்டுத்திருடனை சத்தியவானென்று நம்பிமந்தி
ரிதனத்தைக்கொடுத்தான் ஆகையால்நிஜமொன் றிருந்தால் பலதீ
ங்குகளையும் நீக்கும்.

### ௩-வது யாராத்தாள்செத்தாலும் பொழுதுவிடிந்தால் தெரியுமென்றது.

ஒருவனுக்குத் தாயாருமாமியாருமிருந்தார்கள் அவன்பெண்
சாதிக்குத் தன்தாயார்மாத்திரம் இருந்தாலதன்மனதின்படி நடக்
கலாம் தன்மாமியாரிருந்தா லதற்கு விரோதமாயிருக்குமென்று
யோசித்து அதைவெளிப்படுத்தாமல் புருஷனுடனே என்தாயார்
உன்தாயாரை யிருக்கவொட்டாமல் எப்போதுங்கலகம் பண்ணுகி
றாளென்றுசொன்னாள் ஆனாலதற்கென்னசெய்யலாமென்தாயாரை
கொன்றுபோடென்றான் இதுஉண்மைதானாவென்றாள் அவள்கொ
டுமையறிவோமென்று மனதிலெண்ணிக்கொண்டு மேலுமுண்
மைதானென்றான் இன்றைக்கிராத்திரி தூங்கும்போது அம்மிகல்லை
த்தூக்கிக்கொண்டுவந்து தலையில்போட்டுக்கொல்லுகிறேனென்றாள்
ஆனாலப்படியேசெய்யென்றான் பாதிராத்திரியில் எழுந்திருந்துவிள
க்கேற்றிக்கொண்டுவந்து பார்த்தபோது தாயாரும்மாமியாரும்வீ
ட்டுக்குள்ளே படுத்துக்கொண்டிருந்தார்கள் அவர்களைப் பார்த்து
தன்மாமியார்காலிலே வைக்கோற்பழுதை யடையாளமாகக்கட்டி
விட்டுவிளக்கைநிறுத்திப்போட்டு அம்மிகல்லையெடுத்துக்கொண்டு
வரப்போனாள் இதுகளையெல்லாந் தூங்குகிறவனைப்போலப் பார்த்
துக்கொண்டிருந்த தன்புருஷன் சீக்கிரமாக எழுந்து அந்தவைக்
கோற்பிரியைஅவிழ்த்தவள் தாயார்காலிலே கட்டிப்போட்டு தன்
தாயாரைச்சற்றே அப்புறத்திலேதள்ளிவைத்துவிட்டா ளவளம்மி
கல்லைகொண்டுவந்து வைக்கோற்பழு தடையாளத்தைப் பார்த்து
அவள்தலைமேற்போட்டுவிட்டு புருஷனைத்தட்டி யெழுப்பி உன்தா
யாரைக் கொன்றுபோட்டேனென்று சந்தோஷமாகச்சொன்னாள்
அவன்யாராத்தாள்செத்தாலும் பொழுதுவிடிந்தால் தெரியுமென்றா
ன் ஆதலாலதுவே கட்டுவாக்கியமாக வழங்கிவருகிறது.

### ௪-வது பெருமாளென்றபேரைத்தள்ளப்போய் பெரியபெருமாளானது.

ஒருகுடித்தனக்கார னடிமைப்பறையனை வைத்துக்கொண்ட
வனை யுன்பேரென்னவென்றுகேட்டான் ஐயாவென்பேர்பெருமா
ளென்றான் அந்தக்குடித்தனக்காரன் வைஷ்ணவனாகையால் இந்த
ப்பறையனை பெருமாளென்றழைக்கச் சம்மதியாமல் நீவேறேபேர்
வைத்துக்கொள்ளுகிறையா வென்றுகேட்டானையா வைத்துக்கொ
ள்ளலாம் கொஞ்சஞ்சிலவுபிடிக்குமென்றான் அதற்கெவ்வளவுபிடிக்
குஞ்சொல்லென்றான் என்தகப்பனிருக்கையில் பத்துவிராகனும்ப
திங்கலநெல்லுஞ் செலவழித்து நாலுபரதேசிகளுக்குச் சாப்பாடு
போட்டு இந்தப்பேரிட்டான் இப்போதிதைத் தள்ளிவிடுகிறதற்கும்

வேறுபேரிடுகிறதற்கும் முன்செலவுக்கிரட்டத்தனை செலவுபிடிக்கு
மென்றான் அந்தப்படிசம்மதித்து இருபதுவராகனும் இருபதின்க
லனெல்லும் கொடுத்தான் அதைவைத்துக்கொண்டு சொல்கபடிக
சிலமாதம்சாப்பிட்டுப்போட்டு பெரியபெருமாளென்று பெயரிட்
டுவந்தான் வைஷ்ணவ னடிமையைப்பார்த்து என்ன பெயரிட்டுக்
கொண்டுவந்தாயென்றா பெரியபெருமாளென்று னதைக்கேட்டு
ஆண்டை வெட்கிப்போனான் ஆதலால்வீண் செலவுசெய்ய உடன்
படுவார்.

## ரு-வது சுடுகாட்டுக்குப் போனபிணம் திரும்பிவருமா வென்றது.

ஒருத்திவிபசாரம் செய்துக்கொண்டிருந்தாள் அதைசகியாமல்
அவள்புருஷன் சண்டித்துக்கொண்டு வருவான் அப்படியிருக்கதி
னந்தோறுஞ் சாயங்காலவேளையில் ஊர்புறத்திலிருக்கிற பத்திரகா
ளியினுடையகோயிலுக்கு அவள்போய்வருகிற சமாச்சாரந்தெரிந்
து ஒருநாள் அவள்புருஷனந்தக் கோயிலின்சுவர் மறைப்பிலேநின்
றான் அவளந்ததெய்வத்தைப்பார்த்து அம்மா என்புருஷனுக்குக்
கண்கெட்டுப்போகும்படி செய்வாயானால் உனக்குப்பொங்கலிடுகி
றேனென்று பிரார்த்தித்துக்கொண்டுபோனாள் மறுநாளவனெனக்
கும் பார்வைதெரியவில்லையென்று சும்மாதானேசொல்லிக்கொண்
டு தடுமாறிக்கொண்டுதிரிந்தான் அவள்பெண்சாதி பிரார்த்தனைப
லித்ததென்று சந்தோஷத்துடனே தன்கள்ளப்புருஷனாகிய கிரா
மத்தானையும் பாளையக்காரனையுங்கணக்கனையுங் கருப்புகாரனையும்
இராத்திரிக்குச் சாமத்துக்கொ ரவ்வொருவராக வரச்சொல்லியனுப்
பிவிட்டவர்களுக்காக வெகுநேர்த்தியாய்சமையல்பண்ணிக்கொண்
டிருந்தாள் அவள்புருஷன் அவளுக்குத்தெரியாமல் வசநாபியைக்
கொண்டுவந்து சாப்பாட்டிலேகலந்துவைத்தான் பிறகுமுதற்சாம
த்திற்கு கிராமத்தான்வந்துசாப்பிட்டு விளக்குகொளுத்தி ஆசை
கொண்டவீட்டிற் பூச்சியைப்போல சீக்கிரத்திலேதன்னுயிரையிழ
ந்துவிட்டான் அவனையெடுத்துஒரு அறையிலே மறைத்துவைத்தா
ள்பின்புமூன்றுபேரும் அப்படியேஅவள்சொன்ன வேளைதனில் ஒ
வ்வொருவராகவந்து சாப்பிட்டுத் தன்தன்னுயிரை யிழந்துவிட்டா
ன் அந்தமூன்றுபேரையுங் கிராமத்தானைவைத்த அறையிலேயே
சீக்கிரமாகமறைத்து ஒருபிணத்துக்கு பட்டநாமத்தைசாத்திவை
த்து கூலிக்காரனைக்கூவியழைத்து இந்தப்பிணத்தை ஊருக்குவெ
ளியிலே எடுத்துக்கொண்டுபோய் இரகசியமாக கிணற்றிலேபோட்
டுவிட்டுவந்தால் உனக்குப்பத்துபணங்கொடுக்கிறேனென்றா னப்
படியே ஒருபிணத்தை யெடுத்துக்கொண்டுபோய் போட்டுவந்தா
ன் இவன்வருவதற்குமுன்னமே மற்றொருபிணத்தை முன்போல
வே பட்டைநாமத்தை சாத்திவைத்தந்தக் கூலிக்காரன் வந்தவுட
னே நீகொண்டுபோனபிணம் உனக்குமுன்னமே ஓடிவந்து உட்
கார்ந்துக்கொண்டது இதைக்கொண்டுபோய் கிணற்றிலேபோட்டு

மேலே ஒருகல்லைப் போட்டு வாவென்றாலவன் தூக்கிக் கொண்டு போய் அப்படியேசெய்து வருவதற்குள்ளே மற்றொரு பிணத்தை அப்படியேவைத்துக்கொண்டிருந்து அவன்வந்தவுடனேமுன்போல சொல்லி இதைக்கைகால்களைக் கட்டிப்போட்டுவாவென்றாள் அந்தமூடனப்படியே செய்துவரப்போனான் மறுபடியுமிவன் வருவதற்குமுன்னே இவள்மற்றொருபிணத்தையு முன்போலவே வைத்துக்கொண்டிருந்து அவன்வந்தவுடனே ஐயையோ இந்தப்பாழும் பிணம்உன்னை எந்தவிதத்திலேயோ மோசம்பண்ணிப்போட்டு வந்துவிட்டதே இந்தத்தடவைமாத்திரங் கொண்டுபோய் குண்டுகட்டாகக் கட்டிப்போட்டுமேலே ஒருபெருங்கல்லைப்போட்டு வாவென்றாள் அவனுக்குகோபம்பிறந்து அந்தப்பிணத்தையெடுத்துக்கொண்டுபோய் அவள்சொன்னபடியேசெய்து கிணற்றிலே போட்டுவிட்டுத் திரும்பும்போது சூரியோதயசமயமாச்சுது அப்போது சாத்தானியன் யாகத்துக்குப்போகும்படியாக பட்டைநாமம் போட்டுக்கொண்டு இவன்பின்னேவந்தா னவனையிவன்பார்த்துநாமம்போட்டபிணந்தானெழுந்து வருகிறதென்று ஓடிப்போயவன்கழுத்தை கட்டிக்கொண்டு வெக்கங்கெட்டபிணமே நாலுதரங்கொண்டுபோய்கிணற்றிலேபோட்டும் மறுபடியுமெழுந்துவருகிறையா இப்போதுகொண்டுபோய் உன்கையைநெருக்கி ஒருபெரியபாழுங்கிணற்றிலேபோட்டுவிடுகிறேனென்றிழுத்தான் சாத்தானியன் நடுநடுங்கி ஐயையோமுறையோவென்று பெருங்கூச்சலிட்டழுதான் அதைத்தெருக்காரர்கள்கேட்டுவந்து இதென்னவென்று விசாரித்தார்கள் கூலிக்காரனிந்தப்பிணத்தை நாலுதரங்கொண்டுபோய் கிணற்றிலேபோட்டேன் மறுபடியுமெழுந்து வருகிறதென்றான் கூலிக்காரன் கட்டுவாக்கியமாக வழங்கிவருகிறது.

## கூ-வது பிரமசாரி ஓடங்கவிழ்ந்தது

நிறைவெள்ளமாகிய ஒரு ஆற்றினுடைய இக்கரையிலிருந்து ஓடத்தில்நிறைய மனிதரைஏற்றிக்கொண்டு அக்கரைக்குப்போக எத்தனமாயிருக்கையில் துடப்பக்கட்டைவைத்திருக்கிற ஒருகளஞ்சாறிப்பறச்சியும் ஒருபாம்புப்பிடாரனும் ஒருகுறங்காட்டியும் வந்துஏறிக்கொண்டார்கள் உடனேபிரமசாறி ஓடிவந்துஎன்னையும் ஏற்றிக்கொள்ளவேண்டுமென்றான் ஓடத்திலேயிருக்கிறவர்கள் குருமபுசெய்வதிலே ஒருபிரமசாரி நூறுகுரங்குக்கு ஒப்பென்றுசொல்லுவார்கள் அவனையேத்தலாகாதென்றார்கள் ஓடக்காரன் காசுக்கு ஆசைப்பட்டு அந்தபாப்பாரப்பையலைக் காலைகட்டிஏற்றிக்கொண்டு ஓடத்திலிருக்கிற துடப்பக்கட்டையில் ஒருஈர்க்கைபல்லாலே குத்திபிடுங்கிக்கொண்டு குரங்கின்சூத்திலேகுத்தினான் குரங்குகுதித்துவிழுந்து பாம்புபெட்டியைத் திறந்துவிட்டது பாம்புசீறிக்கொண்டு படமெடுத்துக்கொண்டு ஆடத்தலைப்பட்டது எல்லாரும்பயந்து ஓடத்திநொருபாகத்திலே ஒதுங்கிபோனார்கள் ஓடம்கவிழ்ந்துவிட்டது அதுமுதல்பிரமசாரி ஓடம்கவிழ்த்தகதையாக முடியுமென்று உலகத்திலே சிலசமயங்களிலே சொல்லுவார்கள்.

## எ-வண்ணானுக்குப்போனான் வண்ணாத்திக்குவந்தானென்றது.

ஒருகுரும்புக்காரப்பையனை அவன்தகப்பன்அடித்துத் துரத்திவிட்டான் அவன்அழுதுக்கொண்டேபோகையிலொருதலையாரி கண்டு உன்பெயரென்னவென்றான் என்பெயர்போர்சுட்டுப்பொரி பொறுக்கியென்றான் என்னிடத்திலிருவென்றழைத்துக் கொண்டு போய் தான்காக்கிறநெல்போரிடத்திலே காவல்வைத்து சாப்பிடப்போனவன் வருவதற்குமுன்னே இவன்போரைக்கொளுத்திவிட்டுச் சுற்றிலுங்கிடக்கிறபொரிகளைத் தின்றுகொண் டிருக்கையில் தலையாரிவந்து என்னபாவிஇப்படிசெய்தாயென்றான்என்பெயரோ போர்சுட்டுபொரிபொரிக்கியென்று முன்னமேசொன்னேனேஎன்றான் தலையாரிக்குக்கோபம்பிறந்து அடித்துதுரத்திவிட்டான் அவனழுதுக்கொண்டேபோகையிலே ஒருவாழைத்தோட்டக்காரன் கண்டு உன்பெயரென்னவென்றான் தோலிருக்கச்சுளைமுழுங்கியென்றான் இவனையழைத்துக்கொண்டுபோய் தன்வாழைத்தோட்டத்திற்குகாவல்வைத்தான் அந்தப்பையன் தோட்டக்காரனில்லாதசமயம்பார்த்து குலைகளிலேபழுத்திருந்த பழங்களையுரித்து இனிப்பாகியசிலைகளையெல்லாம் முழுங்கிவிட்டுத் தோல்களைமூடிவைத்தான் தோட்டக்காரன்வந்துபார்த்து என்னடாபாவிஇப்படிசெய்தாயென்றுகேட்டான் முன்னமேதோலிருக்கச் சுளைமுழுங்கியென்று சொன்னேனேயென்றான் வாழைத்தோட்டக்காரனுக் கதிககோபம்பிறந்து அவனையடித்துத்துரத்திவிட்டானவனழுதுக்கொண்டேபோகும்போது ஒருவண்ணான்கண்டு உன்பெயரென்னவென்றான் என்பெயர் போனான்என்றான் அவன்தன்வேலைக் குதவியாகவைத்துக் கொண்டான் பிற்பாடுவண்ணாத்திவந்து உன்பெயர் என்னவென்றால் என்பெயர்வந்தான்என்றான் மறுநாள்துறைக்குபோகும்போதுகூட அழைத்துக்கொண்டுபோய சலவைபண்ணினசீலைகளைஒரு மூட்டைகட்டி அவன்தலையிலேவைத்து நீமுன்னேகொண்டு போவென்றனுப்பினார் கனவந்தமூட்டை எடுத்துக்கொண்டுபோய்விட்டான் வண்ணான்போனானென்றுகூவிதேடியோடினான்வண்ணாத்தி ஒருபக்கத்தில்நின்று வந்தான்வந்தானென்று கூப்பிட்டாள் வண்ணாத்தியிடத்தில்வந்துபார்த்து பொய்சொல்லுகிறாயாவென்று அடித்துப்போட்டு மற்றொருபக்கத்திலேநின்று கூப்பிட்டானவளுமப்படியேகூப்பிட்டாள் மறுபடியும்வந்தடித்தான் இப்படி கலகமாவதை ஒருமனிதன்கண்டு விசாரித்தவன்பேரை மாறாட்டமாகச்சொல்லி மோசஞ்செய்தவிபரத்தை தெரியப்படுத்திவிட்டான் ஆதலாலதுவே கட்டுவாக்கியமாக வழங்கியது.

## அ-வது மதுபிந்து கலகமென்றது.

ஒருதுலுக்கன் ஒருபெரியஊரி கடைக்குப்போய் தேன்வாங்கும்போது ஒருதுளிதேன் கீழேசிந்தியது அதன்மேலீவந்துமொய்த்தது அந்தஈயை யங்கிருந்தபல்லி பிடித்துக்கொண்டது அந்த

பல்லியை கடைக்காரனுடைய பூனைபிடித்துக் கொண்டது அந்த நாயைக்கடைக்காரனடித்துக் கொன்றுபோட்டானந்தக்கடைக்காரனைத் துலுக்கன் வெட்டிப்போட்டான் அந்த துலுக்கனை மற்றகடைக்காரர்கள் வெட்டிப்போட்டார்கள் அந்தகடைக்காரர்களை துலுக்கர்கள்வந்து அடித்துக்கொண்டார்கள் துலுக்கர் சூழ்ந்து கொண்டதைபார்த்து கடைக்காரருக்காக வெகுபேர்கூடினார்கள் அவர்களுமிவர்களும் கலந்து சண்டைசெய்ய அந்தபக்கத்திலே நூறுபேர் சாகவே பட்டணத்துசனமெல்லாம்பயந்து அல்லோகல்லோலப்பட்டு வலசைவாங்கியது அப்போதொரு வணிகன் இதுயாராலே வந்தகலகமென்றுகேட்டான் அந்தக்கடையிலிருந்து வருகிறவனிது மதுபிந்துகலகமென்றான் ஆகலாலதுவே கட்டுவாக்கியமாக வழங்கியது.

௯-வது சந்நியாசி கோமணத்துக்கிச்சித்து சமுசார மேலிட்டது.

ஒருசந்நியாசி ஓரிடத்திலேயிருந்தார் அவர்கோமணத்தைஎலி திருடிகடித்துப்போட்டது எலிவராமலிருக்கிறதாகப் பூனையைவளர்த்தார் அந்தப்பூனைக்குப் பால்வார்க்கிறதற்காக ஒருபசுவை சம்பாதித்தார் அந்தப்பசுவை மேய்க்கிறதற்காக ஒருபையனைசம்பாதித்தார் அவன்சுவாமி யடியேனுக்குக்கலியாணஞ் செய்யவேணுமென்றான் அப்படியேஒருபெண்ணைவிசாரித்து கலியாணஞ் செய்வித்து பெண்வயிற்றில் நாலாண்பிள்ளைகளும் நாலுபெண்பிள்ளைகளும்பிறந்தது சந்நியாசி அக்குடும்பசவரட்சணைக்காக தினந்தோறுஞ் சூரியோதயமுதற்கொண்டு சாயங்காலம்வரைக்கும் பலபேரிடத்திலும் யாசித்துவருந்தினார் அப்படியிருக்கும்போதெல்லாரும்வலசைவாங்கும்படியாக ஒருபெரியகலகம்வந்துநேரிட்டது அப்போதந்தப்பையன் சந்நியாசியைபார்த்து சுவாமி இதுவரைக்கும் என்குடும்பத்தைக் காப்பாற்றியதுபெரிதல்ல இப்போது காப்பாற்றவேணுமென்றுஅழுதான் சந்நியாசிஅவனையுமவன் பெண்சாதி பிள்ளைகளையும் இட்டுக்கொண்டு ஒருகாட்டுவழியே நோக்கிப்போகும்போது வழியிலேசந்நியாசிபங்கு இரண்டுபிள்ளைகளைஎடுக்கும்படியாய்நேரிட்டது அப்போதுசந்நியாசி விசனப்பட்டு கௌபீனத்துக்கிச்சித்து சமுசாரமேலிட்டதல்லவாவென்றுஎல்லாத்தையும் ஒழித்துவிட்டுத் திகம்பரியாய்போய்விட்டார் ஆனபடியினாலே அதுவேகட்டுவாக்கியமாக வழங்கியது.

௰-வது நான்பிடித்தமுயலுக்கு மூன்றேகாலென்றது.

ஒருசித்துபுருஷனிடத்தில் ஒருசிஷியனிருந்தான் அவன்ஒருமுசல்பிடித்துவந்துசமைத்து அதின்கால்களிலே ஒன்றைத் தான் சுட்டுத்தின்றுவிட்டு மூன்றுகாலோடே குருவுக்கு வைத்தான் குருவின்னொருக்கால் எங்கேயென்றான் சிஷியன்நான்பிடித்த முசலுக்கு மூன்றேகாலென்றான் குருமபாயதான் சொன்னான் அதையாகிலுங்காப்பாற்றுகிற திறமுண்டோ சோதிப்போமென்று அந்தரு

னத்திலே சந்தோஷப்படுத்தி நீபிடித்தமுசலுக்கு எத்தனைகாலெ
ன்று கேட்டுக்கொண்டுவந்தார் முன்போலவேசொன்னான் பின்பு
அநேகதருணங்களிலே அச்சமுற்றுங்கேட்டார் சிஷியன்முன்னே
சொன்னதையேசாதித்தான் குருவின்னொருபரிட்சை செய்யநினை
த்து ஒருதிலகமிட்டு இராசாவுக்குவைக்கிறசாப்பாட்டை கொண்
வரச்சொன்னார் சீஷன்தினந்தோறும் பொட்டிட்டுக்கொண்டுதூக்
கிக்கொண்டுவந்து குருவுக்குக்கொடுத்துக் கொண்டிருந்தான் இரா
சாதினந்தோறும் என்சாப்பாட்டை திருடிக்கொண்டு போகிறவ
னைப் பிடித்துகொடுத்தவர்களுக்கு நல்லவெகுமானம்கொடுக்கிறே
னென்று பிரசித்தம்பண்ணினான் குருஇராசாவினிடம் சென்று சா
தங்கறிகுழம்பு முதலானவைகளெல்லாம் சுடச்சுடவைத்துக் கொ
ண்டிருந்தால் திருடனைக்கண்டு கொள்ளுவாயென்று அரசனுக்கு
ஒருபாயஞ்சொல்லி விட்டுப்போனார் அன்றைக்குசிஷியன்போய்
சுடச்சுட ஒருபாத்திரத்திலே சாதங்கறிகள் முதலானதுகளெல்
லாம் எடுத்து வக்கிறதற்குள்ளே எடுத்துக்கொ[illegible]
ந்தஆவிபட்டு நெற்றியிலிருந்தபொட்டு வேர்வையினாலே கரைந்து
போய்விட்டது அந்தப்பொட்டு அழிந்துபோகவே அவன்ரூபந்தெ
ரிந்து அரசன்அவனைப்பிடித்துத்தலையைவெட்டிப்போடும்படி உத்
திரவுகொடுத்தான் கொலைசெய்வோர் கொண்டுபோகையில் குரு
வானவர்வந்து அடாசிஷியா நீபிடித்தமுசலுக்கு எத்தனைகால்கள்
உண்மையாகச்சொல்லு உன்னைகொல்லவொட்டாமல் தப்பித்துவி
டுவிக்கிறேனென்றார் அப்போது நான்பிடித்த முயலுக்கு மூன்றே
காலென்றான் குருஅவன்திடத்தைப்பார்த்து ஆச்சரியப்பட்டுஅவ
னைக்கொல்லவொட்டாமல் இராசாவினிடத்திலே உத்தரவுவாங்கி
அழைத்துக்கொண்டுபோய்உபதேசம்பண்ணினார் ஆனபடியினாலே
அதுவே கட்டுவாக்கியமாக வழங்கியது.

௧௧-வது வீணாவுடைந்தசட்டி வேணதுண்டுஎன்தலையில்
பூணாம்பூண்டபுதுமைதனைக் கண்டதில்லையென்றது.

ஒருவன்தன்பெண்சாதி செய்கிறதப்புகளிலே மூன்றுவரைக்
குஞ்சொன்னால்பொறுத்துக்கொள்ளுவாள் அதற்குமேற்படச்சொ
ன்னால் அப்போது அவள்கையிலிருக்கிறசட்டியை அவன்தலையிலே
போட்டுஉடைப்பாள் அப்படியாகபட்டுபட்டுதலைமொட்டையாய்
போனதுபோதுமென்று வெறுத்துக்கொண்டு எங்கேயாகிலும்
போய்விடுவோமென்று போகும்போது அவனை அவன் சிநேகிதனொ
ருவன்கண்டு எங்கேபோகிறாயென்றான் ஒருகாரியமாகப்போகிறே
னென்றான் சிநேகிதன் அவனைத்தன்வீட்டுக்கு சாப்பாட்டுக்கழை
த்துக்கொண்டுபோய் அனுஷ்டானம்பண்ணிக்கொண்டு அவனுட
னேசாப்பிடஉட்கார்ந்தான் வீட்டுக்காரன்பெண்சாதி சட்டியிலே
சாதமெடுத்துக்கொண்டுவந்து முன்னேதன்புருஷனுக்[illegible]த்து

பிற்பாடு விருந்தாளிக்குவட்டித்தாள் புருஷன்முன்னே அவருக்கு வட்டித்துப் பிற்பாடெனக்கு வட்டிக்கலர்காதென்றான் அந்தச்சட்டியைப் புருஷன் தலையிலேபோட்டு உடைத்தாள் அதுவுடையும்போது கலவடையெழும்பி விருந்தாளிகழுத்தில் மாட்டிக் கொண்டது இவ்வளவுபார்க்கிலும் தன்பெண்சாதியே குணசாலியென்று மனதிலெண்ணிக்கொண்டு வீணாயுடைந்தசட்டி வேணதுண்டு என்தலையிற் பூணாரம்பூண்ட புதுமைதன்னைக்கண்டதில்லை யென்றான் ஆதலால் அதுவே கட்டுவாக்கியமாக வழங்கியது.

௧௨-வது ஆய்ந்தோய்ந்துபாராதான் காரியஞ்சாந்தனையுந் துயரந் தருமென்கிறவாக்கியத்தை விலக்கிக்கொண்டது.

ஒருவன் ஆராய்ந்துபாராதான் காரியஞ்சாந்தனையுந் துயரந்தருமென்கிறவாக்கியத்தை ஒருநறுக்கிலேயெழுதி வைத்துக்கொண்டு ஒருபெரியபட்டணத்திலே இது ஆயிரம்வராகனென்று தெருக்கள்தோறும்விலைகூறிக்கிரிந்தான் பெரியயுத்தத்துக்குப்போக எத்தனமாயிருந்த ஒருராசகுமாரன் இதன்பலனை அறிவோமென்று ஆயிரம்விராகன்கொடுத்து அந்தநறுக்கைவாங்கித் தன்படுக்கையிலே தூக்கிட்டிருக்கிற கட்டாரியில்சொருகி முன்னிருந்தபடியேதூக்கிட்டுப்போட்டு தாவெண்டுந்தூரத்திலே கப்பலேறி யுத்தத்துக்குப் போய் பதினாறுவருஷம்யுத்தம்பண்ணி வெற்றிக்கொண்டு தன்வீட்டிற்குவந்தான் போனபோது பிள்ளையுண்டாயிருந்த தன்பெண்சாதிபெற்றபிள்ளைக்குப் பதினாறுவயதாச்சுது அந்தப்பிள்ளையுமவளுமாகக் கட்டிலின்மேலே படுத்துக்கொண்டிருந்தார்கள் இதைப் பாத்துதன்பெண்சாதி சோரபுருஷனை வைத்துக்கொண்டிருக்கிறதாகநினைத்து இரண்டுபேரையும் குத்திப்போடுகிறதற்கு முன்தூக்கிட்டிருந்தகட்டாரியைஉருவினான் அப்போது அதற்குள்ளிருந்தசீட்டுக்கீழேவிழுந்தது அதையெடுத்து ஆராய்ந்துபார்த்தான்காரியம் சாந்தனையுந்துயரந் தருமென்றிருக்கிறதைப்பார்த்து கோபமடங்கி இதுகாரியத்தைப்பொறுத்து ஆய்ந்துபார்ப்போமென்று விசாரித்துத்தன்பெண்சாதி பக்கத்திலே படுத்திருந்தவன் தன்புத்திரனென்று அறிந்து என்னருமைப்பிள்ளையையும் பெண்சாதியையும் வீணாகக்கொல்லநினைத்தேன் இந்தகட்டுவாக்கியத்தினாலேயல்லவா தப்பியதென்றளவற்ற சந்தோஷத்தையடைந்து இந்தசீட்டுக்குநான்கொடுத்தது தகுதியானவிலையல்ல இன்னம்அதிகமாகக் கொடுக்கலாமென்று மெச்சினான்.

௧௩-வது அங்கேதப்பி இங்கே தப்பி அகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிக்காய் பட்டனென்றது.

ஒருவன் இராசாவுக்கு ஆருடஞ்சொல்லி அனேகவெகுமானங்களைப் பெற்றுக்கொண்டுவந்தான் அதைப்பார்த்து மனம்பொறாமல்

அவன்பக்கத்துவீட்டுக்காரி அம்மட்டிக்காய்பட்டவனென்கிற தன் முட்டாள்புருஷனைப்பார்த்து எங்கேயாகிலும்போய் ஆருடங்கற்றுக்கொண்டுவாவென்று கட்டுச்சோறுங்கட்டிக்கொடுத்தாள் அந்தமூடன் அதைவாங்கிக்கொண்டுபோய் ஒருகுளக்கரையிலே சாப்பிட்டுப்போட்டு அருகிலிருக்கிறமரத்தடிநிழலிலே படுத்துக்கொண்டிருக்கையில் வளைதோண்டிக்கொண்டிருந்த ஒருஎலியைக் கண்டு எலிவளைதோண்டக்கண்டேனென்றும் புற்றின்மேலே முழித்துக்கொண்டிருந்த ஒருஆந்தையைக்கண்டு புற்றிலேஆந்தை முழிக்கக் கண்டேனென்றும் ஒருநெட்டைப்பனமரம் நிற்பதைக்கண்டுநெட்டைப்பனமரம் நிற்கக்கண்டேனென்றும் ஓடியஒருமானைக் கண்டு மானோடக்கண்டேனென்றும் பாடம்பண்ணிக்கொண்டு வீட்டிற்குப்போய் ஆருடங்கற்றுக்கொண்டுவந்தேனென்றான் அன்றிராத்திரி அவனும்பெண்சாதியுமாய்ப் படுக்கைவீட்டி[illegible] வந்து அந்தவீட்டுச்சுவரிலே கன்னம்போட[illegible] அப்போது அவள்தன்புருஷனை நீகற்று[illegible]கொண்டுவ[illegible]தைச் சொல்லவேணுமென்றாள் எலிவளைதோண்டக்கண்டேனென்றான் அதைக்கேட்கவே கன்னமிட்டுக்கொண்டிருந்த திருடன் தான் தோண்டுகிறதை அவன்மறைபொருளாய்ச் சொன்னானென்று திடுக்கிட்டுமுழித்தான் புற்றிலே ஆந்தைமுழிக்கக் கண்டேனென்றான் தான்முழிக்கிறதை அவன்சொல்லுகிறானென்று எழுந்துநின்றான் நெட்டைப்பனமரம் நிற்கக்கண்டேனென்றான் தான்நிற்கிறதைஅவன் சொல்லுகிறானென்று ஓட்டம்பிடித்தான் மானோடக்கண்டேனென்றான் தான்ஓடுகிறதைச்சொல்லுகிறானென்று காற்றாய்பறந்தான் இதுகளைப்பார்த்துக்கொண்டிருந்த ஒருவ[illegible] உள்ளபடி ஆருடம்சொல்லுகி[illegible] பரவியது அதைக்கேட்டிருந்த[illegible] மற்போனதைக்குறித்து ஆருடங்கட்டான அந்தமூடனை [illegible]ந்தால் குட்டிச்சுவர்தானென்றான் அந்தப்படியேபண்ணினான் ஒருகுட்டிச்சுவரை வெட்டிப்பார்த்தான் அங்கிருந்து புதையகப்பட்டது அந்தசமாசாரத்தைச்சொன்னான் இராசாவரைக்கும் தெரியப்படுத்தினான் அரசன்வீட்டிலிருந்த உடமைப்பெட்டியை முக்கியென்கிற வெள்ளாட்டியும் நாக்கியென்கிறவெள்ளாட்டியும் திருடிக்கிணற்றிலேபோட்டுவிட்டு அறியாதவர்போலிருந்தார்கள் இராசாதன்வீட்டிற்போன திருட்டைக்குறித்து அந்தமூடசோசியனை அழைத்துக் கேட்டான் எட்டுநாளையிலே பிடித்துக்கொடுக்கிறேனென்று கெடுவிசொல்லிவந்து எழுநாள்மட்டும்சும்மாயிருந்து எட்டாம்நாள்காலமேகெடுவுமாய்விட்டதே இனிநாக்கேபோமோ மூக்கேபோமோவென்று சொல்லிக்கொண்டேகுளக்கரையில்பல்விளக்கிக்கொண்டிருந்தான் திருடினபெண்களும் தண்ணீருக்கு வருகிறபோது அவன்சொல்லுகிறதைக்கேட்டுத்திடுக்கிட்டு தாங்கள்திரு

றனைத் தெரிந்துகொண்டுதான்சொல்லுகிறனென்றுசமீபத்திலே வந்த அந்தஉடைமைப்பெட்டியைத்திருடினர் நாங்களே அதைகொண்டுவந்து கொடுத்துவிடுகிறோம் எங்களுக்கொருதெண்டனையுமில்லாமல் காப்பாற்றவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள் அவனதன்மேலென்று அவர்களையும் உடைமைப்பெட்டியையும் அரசனிடத்திலே கொண்டுபோய்ச்சேர்த்து இவர்கள்குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்றான் அப்படி அரசன்மன்னித்து ஜோசியனுக்கு வெகுமானமுஞ்செய்து சம்பளம்பண்ணித் தன்னிடத்திலே வைத்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள்தானும்ஜோசியனுமாகப் போகிறபோது ஆற்றங்கரையிலே ஒருசின்ன தும்மட்டிக்காயைப்பறித்து ஜோசியனுக்குத்தெரியாமல் தன்கைக்குள்ளேவைத்து மூடிக்கொண்டு இதுவென்னவென்றுகேட்டார் ஜோசியன் நாம ப்பட்டுக் கொண்டோமென்றெண்ணித்தா அங்கே தப்பி இங்கே தப்பி அகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிக்காய்ப்பட்டனென்றான் கண்டுபிடித்தா னென்று அரசன்மிகவுஞ் சந்தோஷப்பட்டுவேண்டிய வெகுமதிகளைக் கொடுத்து அனுப்பிவிட்டானதையால் அதுவேகட்டுவாக்கியமாக வழங்கியது.

### ௧௪-வது பழயகருப்பன் கருப்பனே பழயமண்கின்னி மண்கின்னியேயென்றது.

ஒருபையன் ஒருநாள் ஒருமலைக்கிழே மாடுமேய்த்துக் கொண்டிருக்கும்போது ஒருகல்லைப்பிரட்டினான தன்கிழேஒருகலனிறையவராகனிருக்கக்கண்டு பின்னையாராகிலும் அறியப்போகிறார்களென்று எப்போதும்போலவே அந்தகல்லைமூடிப்போட்டு மனமகிழ்ச்சியுடனே உடம்புபூரித்துக்கொண்டிருந்தான் சாயங்காலமெஜமானன் அடா கருப்பா மாடுகளையெல்லாம் வயிறுநிரம்ப மேய்த்துக்கொண்டு வந்தாயாவென்றானிவன் கோபித்துக்கொண்டு சும்மா கருப்பாவென்று கூப்பிடுவீர்கள் அடாவென்று மரியாதைகுறைச்சலாகக்கூப்பிடவேண்டாமென்றான் எஜமானனென்னமோஒரு அதிசயமிருக்கிறது அறிவோமென்று மனதிற்குள்ளே எண்ணிக்கொண்டு பேசாமலிருந்தான் மறுநாட்காலமே மாடுகளை ஓட்டிக்கொண்டுபோய் அந்தமலையடிவாரத்திலே மேய்த்துதான்கண்டபுதையலையும் இருக்கபார்த்துக்கொண்டு களிப்புடனே வந்தான் எஜமானன் கருப்பா மாடுகளையெல்லாம் செம்மையாய்மேய்த்துக்கொண்டுவந்தாயாவென்றான் அதற்கு அந்தப்பையன் கறுப்பண்ணுவென்று கூப்பிடலாகாதாவென்றான் மறுநாள்சாயங்காலம் எஜமானன்கருப்பண்ணுவென்றுகூப்பிட்டான் அதுகேட்டுஇன்றுமுதலாக என்னை கருப்பண்ணபிள்ளையென் றழையுங்களென்றான் மறுநாள் அப்படியே கருப்பண்ணபிள்ளையென் றழைக்கும்போது அதென்னவெனக்கு மண்கின்னியிலே சாப்பாடுபோடுகிறது வாழையிலையிலே போடலாகாதாவென்றான் அப்படியேவாழையிலையிலேபோட்டு எஜமா

ணரிதை யறியவேண்டுமென்று மறுநாள்காலையிலெழுந்து அவன் மாடுகளை யோட்டிக்கொண்டுபோகும்போது அவனுக்குத்தெரியாமல் அவன்பின்னே தொடர்ந்துபோய்ப் புதையலைத்திறந்து பார்த்தான்- அதின்மேலேஉட்கார்ந்து நெரிப்புக்கொண்டிருந்து அப்புறம்போ ய்விட்டான் போனபிறகு எஜமானன்போய் திறந்துப்பார்த்தா விறு னைக்கண்டு நிகணலேயல்லவா இவனுக்கித்தனை காரியமும் செ ருக்கும் உண்டாயிருந்ததென்றுதெரிந்து புதையலைத்தோண்டி எடு த்துக்கொண்டுவந்துவிட்டான் வழக்கப்படி மறுநாள்போய் பார்த் தான் புதையலைக்காணாமையினாலே ஏக்கம்பிடித்து ஒன்றுந்தோன் றாமல் விசனத்துடனே சாயங்காலம் மாடுகளையோட்டிக்கொண்டு வீட் டிற்குவந்து அசதியாய்ப்படுத்துக் கொண்டிருந்தான் எஜமானன் கருப்பண்ணப்பிள்ளையவர்களே இன்றைக்கு வெள்ளிக்கிண்ணி வை த்திருக்குது சாப்பிடவாருமென்று அதிகமரியாதையாக அழைத் தான் அப்போது பழயகருப்பன் கருப்பனே பழையமண்கிண்ணி மண்கிண்ணியேயென்றான் ஆதலால் அதுவேகட்டுவாக்கியமாகவழ ங்கியது.

கட்டுவாக்கியகதைமுற்றிற்று அத்தியாயம்-௬ க்கு கதை-௮௮.

---

## ஏழாமத்தியாயம்.

# மூடர்கள் கதை.

---

### ௧-வது சாதத்துக்கல்லைச் சுவாமியென்றது.

இரண்டுபேர்மூடர்கள் ஒருஆலயத்திலே சிலதரிசனம்பண்ண ப்போனவிடத்தில் மைத்துனசுவாமியென்றார்களே இதுதானாசுவா மிகல்லாச்சுதேயென்றான் கோவிலதிகாரியதைக்கேட்டுச்சுவாமியை நிந்திக்கிறாயாவென நன்றாகஅடித்துதாக்கிவிட்டான் அதைப்பட் டுக்கொண்டு மைத்துனனுந்தானுமாய் ஒருவீட்டிலேபோய் சாப் பிட்டார்கள் அந்தசாப்பாட்டிலே கல்லிருப்பதைக்கண்டு மைத்து னசாதத்திலே கல்லிருக்குதென்றான் முன்னடிபட்டோன் அதை கோபித்துக்கொண்டு அடாபுத்திகெட்டவனே கல்லென்று சொல் லாதே இப்போதுநானடிப்பட்டதை பார்க்கவில்லையா சின்னசாமியெ ன்று சொல்லடாவென்று கைகொண்டமட்டும் இரண்டுகொடுத் தான் இரண்டையும் நன்றாகப்பட்டபடியால் இனிமேலப்படிசொல் லமாட்டேனென்றான்.

### ௨-வது அடிக்குழும்பால் கொழுக்கட்டையழிந்தது.

ஒருமூடன்மாமியார்வீட்டிற்குப்போனான் மாமியார்வெல்லமி ட்டகொழுக்கட்டைசுட்டுக்கொடுத்தாள் சாப்பிட்டவுடனே இதென் னவென்றுகேட்டான் கொழுக்கட்டையென்றாள் தன்வீட்டிலேபோ னவுடனே அதைபண்ணச்சொல்லி சாப்பிடவேணுமென்கிற இச் சையினாலே அதின்பேர்மறக்காமலிருப்பதற்குகொழுக்கட்

டையென்றுசொல்லிக்கொண்டேவந்தான் வழியிலேஒருவாய்க்காலில்நிறைய தண்ணீர்வருவதைக்கண்டு ஒருவழிப்போக்கன் அத்திரிபாச்சாவென்று எழும்பிதாண்டும்போது கொழுக்கட்டையுமறந்துபோய் அத்திரிபாச்சாவென்றுபேர்மாறாட்டமாக சொல்லிக்கொண்டு வீடுவந்துசேர்ந்து பெண்சாதியையழைத்து அத்திரிபாச்சா சுட்டுக்கொடுவென்றான் அதுதானக்குத்தெரியாதென்றாள் உன்தாயார்சுட்டுக்கொடுத்த அத்திரிபாச்சா உனக்குத்தெரியாதா பொய்சொல்லுகிறாயென்றுஒருகொம்பாலேகைசலிக்க அடித்தான் அவளந்தஅடியைப்பார்த்து கொழுக்கட்டையைப்போல் உடம்பெல்லாமெழும்பியதேயென்றழுதாள் இப்போதேசொன்னதைத்தான்டி சுட்டுக்கொடுக்கச்சொன்னேனென்றான் அதைக்கேட்டு அவள் அவன்மூடத்தனத்துக்காக இரங்கி அப்படியேசெய்தாள்.

௯-வது குருவுக்கு பசுவாங்கிக்கொடுத்தது.

சிலமூடர்கள் தாங்கள்குருவுக்குப் பசுவாங்கிக்கொடுக்கவேண்டுமென்று ஆலோசித்துக்கொண்டு ஒருமந்தையிடத்துக்குப் போய் இடையனைக்கண்டு எங்கள்குருவுக்குப்பசுவேண்டும் அகப்படுமாவென்றார்கள் அந்தஇடையன் இவர் ஞானாசீர்வாதத்தைத் தெரிந்துகொண்டு தன்னிடத்திலிருக்கிற உதைகால்பசுவை யிவர்களிடத்திலே விற்கலாமென்று யோசித்துக்கொண்டு என்மந்தையிலேஒரு பசுசனைபிடித்து மேனிபிட்டிருக்கிறது நீங்கள்குருவுக்கென்றுகேட்டபடியினாலே எவ்வளவுவிலைகொடுப்பீர்களென்றான் ஐந்துவிராகன்தான் கொண்டுவந்தோமென்றார்கள் அதைவாங்கிக்கொண்டுபசுவைகொடுத்து நீங்கள்கறக்கும்போது காலையணைத்து கொம்பைபிடித்து கறவுங்களென்றுசொன்னான் அப்படியேசம்மதித்து அவர்கள் குருக்கள்வீட்டுக்குக்கொண்டுபோய்க்கட்டி ஒருவன்குடுவையெடுத்துக்கொண்டுவந்தான் ஒருவனை காலையணையச்சொன்னான் மற்றொருவன்கையிலே கயிறெடுத்துக்கொண்டுவர நேரஞ்செல்லுங் குருக்களையழையடாவென்றான் குருக்கள்சீக்கிரமாகவந்தார அவரை பசுவின்கிட்டஉட்காரச்சொல்லி அவர்தலையிலிருக்கிற இரண்டுநெடுஞ்சடைகளாலே காலையணைத்திருந்தான் அப்போதுபசுஉதைத்துக்கொண்டது பின்னொருவன் இடையன்கொம்பைபிடித்துக் கறக்கச்சொன்னானென்று ஞாபகப்படுத்தினான் மற்றொருவன்சக்கிலியையூதுகொம்பை யெடுத்துக்கொண்டுவந்து பசுவின்முன்னே பிடிக்கச்சொன்னான் அவனப்படியேயூதென்றுபிடித்தான் பசுகொடுமையானபடியினாலேவெருண்டு கட்டுக்கயிற்றைப்பிடுங்கிக்கொண்டு இரண்டுமூன்றுபெயரைப் பாய்ந்துவிட்டுக்குருக்களைமுள்ளிலும் கல்லிலும் இழுத்துக்கொண்டுபோய்ப் போட்டுவிட்டது குருக்கள் பிழைத்ததே மறுபிறப்பாச்சுது.

மூடர்கள்கதைமுற்றிற்று அத்தியாயம்-எ-க்கு கதைகள் ககக.

## எட்டாமத்தியாயம்.

## புத்திவார்த்தைகள்.

---

௧-வது பாலாயேயாவுரே வெலுங்கிலே மத்துறு எந்தப்பசு வடாவென்று பொருள்கொண்ட இந்தவாக்கியத்தை ஐந்துசொல்லும் பொதுமுறையை கன்னடம்தமிழ்மராஷ்டகம் இந்துஸ்தான் தெலுங்குளன்கிறவைந்திலும் வாவென்னும்பொருளை தருதல் காண்க.

௨-வது அவ்வதிகாரியுன்னை யடிக்கச்சொன்னான் என்னையடிக்கச்சொன்னான் இவ்விரண்டுவினாக்களும்கேட்டால் எந்தவினாவிற்குநீஉத்தரவைத் தானடிக்கும்படி செய்வதாக்குதல் காண்க.

௩-வது சகோதராராகிய இரண்டுராசகுமாரர்களில் மூத்தவன் வளைதடியையும்இளையவன் அம்பையும் தாரவிழச்செலுத்தினவனே வல்லவனென்று ஒருவித்துவானைமத்தியஸ்தனாக வைத்துக்கொண்டு செலுத்தினபோது வித்துவானைநோக்கி அவ்விருவரும் எது அதிகமாகவிழுந்ததென்று கேட்டதற்கு வித்துவான் அவ்விருவருக்கும் சந்தோஷமாகவிருக்கும்படிக்கு வளைதடிக்கம்பதிகமென்றான் அதுவளைதடியாகிய கம்பு அதிகமென்றும் வளைதடிக்கு அம்பதிகமென்றும் பொருள்படுதல காண்க.

௪-வது ஒருவித்துவான் தன்மூத்தபெண்சாதி திவசத்துக்குச் சிலசாமான் மூட்டையைத் தலைமேலெடுத்துக்கொண்டு போனான் அப்போதுஒருபாக்கியவான்கண்டு இப்படிசுமையெடுக்கும் படிக்குக்காரணம் என்னவென்றான் அதற்குவித்துவான் தலைவிதிவசமென்றான் அது தலைவிதிக்கு திவசமென்றும் பொருள்படுதலால் மகிழ்ந்து அந்தப்பிரபு அனேக வெகுமதிகளைச் செய்தான்.

௫-து ஒருஅரசன் காரைக்காட்டுவழியிலே போகும்போது ஒருபெரியஉத்தியோகஸ்தனாகிய இடையன்தனக்கு விரோதியாக கூடவருகிற ஒருகாரைக்டு வேளாளனைக்குறித்து அரசனுடனேகாரையைவெட்டி கருணைபோட்டால் நன்றாகப்பயிராகுமென்றான் அதற்கு அந்தவேளாளன் அரசனைப்பார்த்து சுவாமி அப்படிசெய்தால் இடையொருகாசுபெறுமென்றான் இப்படிஒருவனையொருவன் சாதியைக்குறிப்பாகக்காட்டி இகழ்ந்தமையை அரசன் அறிந்துகொண்டான்.

௬-வது ஒருவன்மற்றொருவனை என்னொருகைக்குளடங்கியது எவ்வளவுமண்ணென்றுவினாவ, அதுகேட்டவன் எண்ணளவைக்கண்டு மயக்கங்கண்டு பிடிமண்ணென்று சொன்னான்

௭-து ஒருகச்சேரியில் ஒரு உத்தியோகஸ்தனாகிய நியோகிப் பார்ப்பான் இராமையயவாருமென்றும் சாமைய்யவாரு யென்றும்

தங்களிருவர்கள் பேர்களையெல்லாம் பெருமையாகச்சொல்லிக்கொண்டிருந்தான் அதைக்கேட்டு மற்றொருஉத்தியோகஸ்தனாகிய [illegible]டையன் இத்தனைபேருங்கூடி செருப்பாமாவென்றதற்கு அவன் [illegible]னைவாரில்லாமலாகாதென்றான் இதிலொருவனை ஒருவன்குறிப்ப[illegible]க இகழ்ந்தமைகாண்க.

௮-வது இராசனிடத்தில் எண்ணாயிரத்தாரிற்சேர்ந்த பார்[illegible] யாரைவிட ஆயிரத்தாரிற்சேர்ந்த ஒருபார்ப்பான் உயர்வென்றா[illegible] அரசனெப்படியென்றுவினாவ எண்ணாயிரவிருகனை ஒருதட்டிலு[illegible] ஆயிரம்விருகனை மற்றொருதட்டிலும் வைத்துநிறுத்த ஆயிரத்தட்[illegible] உயர்ந்ததைக்காட்டும் இப்படியேநான் உயர்வென்றான்.

௯-வது தேங்காய்க்கு நெல்லிமரம்ஒருகொம்பு ஐந்துதருண[illegible] காய்க்கும் நெல்லிமரம் ஒருகொம்பில் ஐந்துதருணிகாய்க்கும் ெ[illegible]ல்லிமரமென்றான்.

௰-வது சடாடா உஉ நீகொண்டுவந்தாய் தாதாமிநச இரு[illegible] தாரு நீகொண்டுவந்தாய் பெரியாமரியா என்வரும்.

௧௧-வது குகுகுகுகுகுகுகுகுகுச் செட்டிமகள் அஅஅஅஅ[illegible] அஅஅஅக்கு ஆசைபட்டாள் முமுமுமுமுமுமுமுமுமும் மூன்[illegible] பணியாரம் செசெசெசெசெசெசெசெ சேபத்துகட்டியனுப்பு[illegible]

௧௨-வது குப்பத்துசெட்டிமகள் அப்பத்துக்கு ஆசைப்பட்டாள் முப்பத்துமூன்றுபணியாரஞ் சேபத்துகட்டியனுப்பு.

யுத்திவார்த்தையுந் தந்திரமும் முற்றிற்று.

தூண்டாவிட்டடவரக்கட்டினன் காச்சுடுபோட்டுமிளகை [illegible] யதூரா ராருபோராகலவர்கள் பாதாளவாதே உருமேளத்தில் வ[illegible] வது ஆட்டரக்காட்டாது எனவாசித்துக்காண்க.

மலைபுவாக்கியம் முற்றிற்று.

குயவன்பண்ணுசபாண்டம் வண்ணான் வெளுக்காத வெள்[illegible] மழைபெய்யாத தண்ணீர் தேங்காய்

அண்ணனுக்கெட்டாது தம்பிக்கெட்டும் கீழுதடு

பக்சென்றிருக்கிறது பாவக்காயுமல்ல பக்கமெல்லா முள்ள[illegible] யிருக்கிறது பலாக்காயுமல்ல உள்ளேவெளுத்திருக்கிறது தே[illegible] காயுமல்ல உருக்கினால்நெய்வடியும் நெய்புமல்ல ஆமணக்காய்

உமியைப்போல்மலரும் சிமிழைப்போல்காய்க்கும் நெல்லிமர[illegible]

காயுங்கோணக்காய்கொள்ளடா மைத்துனகதையும் விடுவி[illegible] தேன் சொல்லடாமைத்துன கொள்ளுக்காய்

விடுகதை முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௧-க்கு கதைகள்-௧௨௭.